
வண்ண விழி
வாசல்
எஸ்.உஷாராணி
வண்ண விழி வாசல் ★ எஸ்.உஷாராணி
வண்ண விழி
வாசல்
எஸ்.உஷாராணி

# வண்ண விழி வாசல்

## 1

கார்த்திக் "அம்மா நான் போய்ட்டு வர்றேம்மா..." என்று சொல்லிவிட்டு, தன் டூ வீலரை எடுத்து சாலைக்கு வந்தான்.

காலைக் காற்று முகத்தில் மோதியது. தலை முடியை கலைத்துச் செல்லமாக விளையாடியது. அவனுக்கு நிவாதியின் நினைப்பு வந்தது. முகத்தில் புன்னகை அரும்பியது.

எத்தனை உன்னதமான, மென்மையான பெண். பார்ப்பவரைக் கவர்ந்திழுக்கும் கண்கள். அந்தக் கருந் திராட்சை விழியில் தான் எத்தனை அன்பு, கருணை.

கார்த்திக் பிஷப்பில் படிக்கிறான். ஒரு கல்ச்சுரலுக்காக இவன் காவேரி காலேஜுக்குப் போனான். ஒரு வாரம் நடந்தது. இவன் நடனத்திலும் பாட்டுப் போட்டியிலும் கலந்து கொண்டான்.

நிவாதியும் அதே போட்டியில் கலந்து கொண்டாள். அந்தக் குலுக்கலில் இருந்து கார்த்திக், நிவாதி தேர்ந் தெடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு ஊட்டி சென்றுவர காலேஜே டிக்கெட் கொடுத்தது. எல்லாச் செலவையும் நிர்வாகமே ஏற்றுக் கொண்டது.

போகவர ட்ரெயின் டிக்கெட், ஹோட்டலில் தங்க, அவர்கள் அங்கு சுற்றிப் பார்க்க ஒரு கார் என்று அரேஞ் பண்ணிக் கொடுத்தது.

வீட்டில் வந்து கார்த்திக் சொன்னான். அவன் அம்மா ''எதுக்குடா வீண் செலவு. அந்தப் பணம் இருந்தால், இந்த மாதச் செலவுக்குப் போதும். உனக்குப் பின்னாடி உன் தங் கைகள் இருக்காங்க என்பதை மறந்துவிடாதே'' என்றாள்.

''ஐய்யோ... அம்மா.. நமக்கு எதுவும் செலவு இல்லை. எல்லாமே காலேஜ் செலவுதான். நான் வெற்றி பெற்றதுக்குத்தான் என்னை மட்டும் அனுப்புறாங்க. இது ஒரு சந்தர்ப்பம். இதில் நான் வரமுடியாது என்று சொல்ல முடியாது.

''ஏன்னா எல்லா ஏற்பாடுகளையும் அவர்கள் செய்து விட்டார்கள். போனால் போகட்டும் என்று இருக்க முடி யுமா...? ஏன் என்று கேட்டால் என்ன பதில் சொல்லட்டும்.''

'' ...... ''

''நீங்க எனக்கு செலவுக்கு ஒரு பைசாகூடத் தர வேண் டாம். ஒரே வாரந்தான் அம்மா'' என்றான் தணிவாக.

அவன் தங்கை மீனாவும் ''ஆமாம் அம்மா. உங்களுக்கு எதில் கணக்குப் பார்ப்பது என்று விவஸ்தையே கிடை யாது. அண்ணனை வெற்றி பெற்றதுக்குப் பாராட் டாமல், செலவைப் பற்றிப் பேசுகிறாயே. எப்பப்பார் உனக்கு இதே வேலை'' என்றாள் கோபமாக.



''நீ பேசுவேடி. உனக்கென்ன, இன்னும் அடுத்த மாதத் தில் பீஸ் கட்டணும் பணம் கொடுங்கள் என்பே. எங் கிருந்து கட்ட முடியும். நம் வீட்டில் என்ன பணம் காய்ச்சி மரமா இருக்கு. நீ கேட்டதும் ஒரு உலுப்பு, உலுப்பித் தர. பேச வந்துட்டா... பெரிசா'' என்று நீட்டினாள்.

கார்த்திக்குத் தெரியும் தன் அம்மா குணம். செலவு என்றால் எந்த ஒரு நிகழ்ச்சியிலும், வேறு எங்கும் போகக் கூடாது.

இந்த வண்டி வாங்கிக் கொடுத்ததே பெரிய விஷயம். டியூவுக்கு வாங்கி இவன் டியூசன் எடுத்துத்தான், மாதா.. மாதம் அந்தப் பணத்தைக் கட்டுகிறான்.

பாவம் அம்மா. அவர்கள்தான் என்ன செய்வார்கள். அவர்கள் ஒரு ஹாஸ்பிட்டலில் நர்சாக இருக்காங்க. குறைந்த வருமானம். அதில் மூன்று பேரும் படிக்கணும். சாப்பிடணும். வீட்டு வாடகையும் குறைந்த வாடகையே. உறையூரில் வெக்காளி அம்மன் கோயிலுக்குப் பின்புறம் வீடு.

கார்த்திக்கும் நன்றாகப் படித்தான். அவனுக்கு நிறைய பிரண்ட்ஸ்கள் இருந்தாலும், செலவு செய்ய முடியாது. இருந்தால் அல்லவா செலவு செய்வதற்கு. அதற்காக மற்றவர்களிடம் பணத்துக்காக தொங்க மாட்டான். நாசூக் காக ஒதுங்கி விடுவான்.

நல்ல திறமை அவனுக்கு. அவன் இல்லாத நிகழ்ச் சியே இருக்காது. பிறருக்கு உதவுவதிலும் அப்படித்தான். நாம் படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற வைராக்கியத்துடன் படித்தான். அதில் வெற்றியும் கண்டான்.

காலேஜில் அவனை எல்லோரும் பாராட்டினர். பிரின்ஸ் பால் அவனைத் தனியாகக் கூப்பிட்டுப் பாராட்டினார்.

அவன் அம்மா எப்பவுமே அப்படித்தான். பிள்ளைகள் யாரையும் பாராட்ட மாட்டார்கள். அப்படிப் பாராட்டினாள், அவர்களுக்கு தலைக்கனம் ஏறிவிடும். நம்மை மதிக்கமாட்டார்கள் என்ற நினைப்பு அவர்களுக்கு.

பிள்ளைகளுக்கு அது ஒரு டானிக் என்று தெரியவில்லை. எத்தனை பேர் பாராட்டினாலும், பெற்ற தாய் பாராட்டுவதற்கு ஈடாகுமா...? ஒரு வார்த்தை 'ரொம்ப சந்தோசம்டா... கார்த்திக் என்று' அன்றும் அப்படித்தான். புட் பாலில் கப் வாங்கி வந்தான்.

அதைப் பார்த்துவிட்டு, ''இப்படி ஆடி பைசாப் பெறாத கப்பை வாங்கி வருவதற்கு. நீ அந்த நேரத்தில் படித்தால் இன்னும் மார்க் வாங்கி, கோல்டு மெடல் வாங்கலாமே...'' என்பாள்.

அவன் முகம் சிறுத்துவிடும். இருந்தாலும் தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்வான். 'அம்மா தன் நல்லதுக்குத்தானே... சொல்வாங்க,' என்று எடுத்துக் கொள்வான்.

தங்கை இரண்டு பேருக்கும் சலுகைகள் நிறைய கொடுப்பாள். மீனாவுக்கும், கவிதாவுக்கும், தன் அண்ணன் மேல் பாசம் அதிகம். கார்த்திக்கும் ரொம்பப் பிரியமாக இருப்பான்.

ஆனால் ஒரு சில நேரங்களில், அம்மா தன்னை விட தங்கைகளை அதிகம் கவனிக்குமாறு தெரியும். 'சீ... இதென்ன நினைப்பு, தன் தங்கைகள் அடுத்த வீட்டில் வாழப் போறவங்க. அங்கே எவ்வளவு பிரச்சனை காத்திருக்கோ... தெரியவில்லை. நம் வீட்டில் இருக்கும் வரை சந்தோசமாக இருக்கட்டும்' என்று நினைப்பான்.

தங்கைகள் கேட்கும் சிறு சிறு பொருள்களை அவ்வப் போது வாங்கிக் கொடுப்பான். அப்போதும் அவன்



அம்மா திட்டுவாள். ''எதுக்கு இந்த தெண்டச் செலவு. இதை வாங்கியதற்கு ஒரு பாத்திரம் வாங்கி வைத்தால்... நாளைக்குப் போற இடத்துக்கு குடுத்தனுப்பலாம்'' என்பாள்.

''கார்த்திக் உன்னை நம்பித்தான் இந்தக் குடும்பம் இருக்கு. நீ படித்து வேலைக்குப் போய் சம்பாதித்த பின் தான், இவர்களை கரை ஏற்ற முடியும். அது உன் மனதில் எப்போதும் இருக்கட்டும்'' என்பாள்.

இன்று பிரண்ட்ஸ் எல்லோரும் சினிமாவுக்குப் போகலாம் என்றனர். கார்த்திக் தயங்கினான்.

''என்னடா இவன். பொம்பளைப் பிள்ளை பரவாயில்லை போல் இருக்கு. இப்படித் தயங்குகிறான். அம்மாவுக்குத் தெரிந்தால் என்னாவது என்று...''

''இதையெல்லாமா... நீ வீட்டில் போய் சொல்வே. நீ நல்லா படிக்கிறவனே. இப்படித் தயங்கினால் நாங்களெல்லாம் என்ன செய்வது இன்று மட்டும் போய்ட்டு வருவோம். இனி செமஸ்டர் ஆரம்பித்து விடும். பிறகு போக முடியாது'' என்றனர்.

கார்த்திக் ''சரி'' என்று சொன்னான்.

## 2



இரவு ஒரு மணி வரை படித்துவிட்டு படுக்கப் போனான். தன் பாக்கெட்டில் இருந்த சின்ன டைரியில் இருந்த போட்டோவை எடுத்து முத்தம் கொடுத்தான். அவளின் நினைவு அவனை இழுத்துச் சென்றது.

ஊட்டிக்கு கார்த்திக்கும், நிவாதியும் பர்ஸ்ட் கிளாசில் சென்றனர். இருவரும் படிப்பு, என்ன பிடிக்கும், பிடிக்காது என்று பொதுவாகப் பேசிக் கொண்டனர்.

கார்த்திக் அம்மா புளி சாதம் கட்டிக் கொடுத்திருந்தாள். ''ட்ரெயினில் விலையெல்லாம் அதிகமாக இருக்கும். அதனால் சாப்பாடு கட்டி எடுத்துப் போ...'' என்று கொடுத்து விட்டாள்.

நிவாதியும் இட்லி கொண்டு வந்திருந்தாள். இருவரும் அதைப் பங்கிட்டு உண்டனர்.

கார்த்திக் அவள் வீட்டைப் பற்றி விசாரித்தான்.

அவள் ''நாங்கள் இரண்டு பெண்கள். எனக்கு ஒரு தங்கை இருக்கா. என் அப்பா ஒரு கம்பெனியில் வேலை பார்க்கிறார். சொந்த வீடுதான். ஆனால் சின்னது. அம்மா வீட்டில் தான் இருக்காங்க'' என்றாள்.

''உங்களோட கனவு என்ன. என்ன படிக்கணும் எப்படிப் பட்ட கணவன் வேண்டும்'' என்றான்.

''நான் எம்.சி.ஏ. முடிக்கணும். எனக்கு உங்களை மாதிரி நல்ல உயரமா... ஸ்மார்ட்டா... புத்திசாலியா... என்னைப் பற்றிப் புரிந்துகொள்ளக் கூடியவரா... எனக்குப் பிடித்த எல்லாம் அவருக்குப் பிடிக்கணும்'' என்றாள் முகம் சிவக்க.

''ஏன்...? அந்த மாப்பிள்ளை நானாக இருக்கக் கூடாதா...?'' என்றான் இளநகையோடு.

''கட்டாயமா... இருக்கலாமே... எனக்கு அது மாதிரி இருந்தால் ரொம்ப சந்தோசம்தான். ஆமாம் நீங்க எப்படி. எப்படிப்பட்ட மனைவி வேண்டும் உங்களுக்கு?''

அவன் கண்களைச் சிறிது நேரம் மூடி யோசித்தான். பிறகு ''நான் எப்படி என் மனதில் நினைத்தேனோ... அது மாதிரியே... இருக்கீங்க நீங்க. எனக்கு எதில் ஆர்வம் உள்ளதோ... உங்களுக்கும் அது மாதிரியே... இருக்கு.



ஆனால் சில கடமைகள் எனக்கு இருக்கு. என்னை நம்பித்தான் என் குடும்பம் இருக்கு. எனக்கு இரண்டு தங்கைகள். என் அம்மா மட்டுந்தான். அப்பா இல்லை.

''நான் படித்து நல்ல வேலையில் அமரவேண்டும்?''

''அதுக்கு நாம் காதலிக்கக் கூடாது என்றில்லையே...'' என்றாள், தலையைச் சரித்துக்கொண்டு.

''என்னால் உங்கள் கடமைகள் எதுவும் தடைபடாது'' என்றாள்.

அவனுக்கும் அவளை ரொம்பப் பிடித்தது. இப்படி மனம் திறந்து பேசியது. அவன் அவள் கையை மென்மையாகப் பற்றினான்.

''சரி நாம் இருவரும் காதலிப்போம். கடமைகள் முடிந்ததும் கல்யாணம் பண்ணிக் கொள்வோம்'' என்றான்.

அதற்கு அவள் சரியென்று ஒப்புக் கொண்டாள்.

இளம் சிட்டாய் இருவரும் ஊட்டியை வலம் வந்தனர். தனிமைதான் கிடைத்ததே என்று இருவரும் அத்து மீறவில்லை. கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டனர்.

கார்த்திக் அவளின் மென்மையான அழகை ரசித்தான். இதமான பேச்சு. அன்பான கோரிக்கை. போட்டிங் போகும் போது அவளை பாடச் சொல்லி ரசித்தான்.

விடிகாலை பனியில் இருவரும் கை கோர்த்துக் கொண்டு நடந்தனர்.

நிவாதி அவள் பிரண்ட்ஸ் சொல்வதையெல்லாம் கேட்டிருக்காள். ''எப்பப்பார் எங்களுக்கு சண்டைதான். நான் சொல்வதை அவன் கேட்பதில்லை. போடா... என்று வந்துவிட்டேன்'' என்று சொல்வாள்.

ஆனால் இவனோ... இவள் என்ன நினைக்கிறாளோ..., எதை அவனிடம் சொல்ல வேண்டும் என்று விரும்பு கிறாளோ... அதை அவள் சொல்லு முன்பாகவே செய்தான்.

கிளம்பும் நாள் வந்தது. ''இனி நாம் எங்கு சந்திக்கலாம் நிகி'' என்றான்.

''அடிக்கடி நாம் சந்திக்க முடியாது. உங்களுக்கும் படிக்க வேண்டியது நிறைய இருக்கும். எனக்கும் அது போலத்தான். லீவில் வீட்டில் இருந்து வர முடியாது.

''எனக்கு சனிக்கிழமை அரை நாள்தான். நான் மலைக் கோட்டைக்கு வந்துவிடுகிறேன். நீங்களும் வாங்க. ஆனால் ஒரு மணி நேரந்தான் நமக்கு டைம். அதை நாம் மீறக்கூடாது'' என்று பேசி முடிவெடுத்தனர்.

இன்று சனிக்கிழமை. அதனால் தான் கார்த்திக் முகத்தில் மகிழ்ச்சி துள்ளியது. மதியம் நிவாதியைப் பார்க்கலாம் என்று காலேஜுக்குப் போனான்.

மதியம் அவன் பிரண்ட்ஸ் எல்லாம் அவனைப் பிடித்துக் கொண்டனர்.

''என்னடா எப்பப்பார் சனிக்கிழமை மதியம் காலேஜ் விட்டதும், நீ எங்கே போறே? சிறிது நேரம் கூட நீ நின்று எங்களுடன் பேச மாட்டேங்கிறே... நீ இன்று எங்களுடன் சினிமாவுக்கு வந்தே ஆகணும். இல்லையென்றால் உண்மையைச் சொல்,'' என்று பிடித்துக் கொண்டனர்.

அவன் இதுவரை யாரிடமும் உண்மையைச் சொல்லவில்லை. அவன் காதலிப்பது யாருக்கும் தெரியாது. ரகசியமாகவே வைத்திருந்தான். இவர்கள் எப்படியோ சந்தேகப்பட்டு, இன்று பிடித்துக் கொண்டனர். இவனால் இன்று மறைக்க முடியவில்லை.



அவர்களிடம் உண்மையைச் சொன்னான். ''நானும், நிவாதியும் லவ் பண்றோம்'' என்று.

''நிவாதியா...? அது யார்...? நம்ப காலேஜா...?''

''இல்லை. கல்ச்சரல்ஸ் அப்போ நாம் காவேரி காலேஜ் போனோமே. என்கூட செலக்ட் ஆனாளே... அவதான்'' என்றான்.

''அடப்பாவி. இத்தனை மாதமாக எங்களிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லையே... அந்தப் பொண்ணும் உன்னை விரும்புறாளா...? இல்லை நீ மட்டும் அவ பின்னாடி சுத்திறியா...?'' என்றனர்.

''அவளும் தான்டா என்னை விரும்புறா... அவளைச் சந்திக்கத்தான் நான் சனிக்கிழமை மதியம் மலைக்கோட்டைக்குப் போவேன்'' என்றான்.

''மலைக்கோட்டைக்கு எதுக்குடா போறீங்க. ஒரு சினிமா கடைவீதி என்று சுற்ற வேண்டியதுதானே.''

''நாங்கள் சந்திப்பது ஒரு மணி நேரந்தான். அதற்கு மேல் நாங்கள் பேசிக் கொண்டு இருப்பதில்லை. கீழே விநாயகரை கும்பிட்டுவிட்டு, மேலே தாயுமானவர் சன்னிதி வரை சென்று, அவரையும் கும்பிட்டு, இதில் எங்கே சுற்ற முடியும்.''

''பேசாமே சமயபுரம், திருவானைக்காவல், ஸ்ரீரங்கம், இப்படி பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று வழிபட்டு வரலாமே...''

''முட்டாள். இதுக்கு எதுக்குடா இருவரும் காதலிக்கணும். கோயிலுக்குப் போவதற்கா. உனக்காச்சும் அறிவு இருக்காடா...'' என்றான்.

''.......''

''அவ எங்கே இருப்பா. நீ கூட்டிட்டுப் போவே'' என்றான்.

''அவ மலைக்கோட்டைக்கு வந்து விடுவாள். நானும் அங்கு சென்றுவிடுவேன்'' என்றான் கார்த்திக்.

''ஏன்டா... காதலிப்பதில் கூடச் சிக்கனமா...? அவளை உன் பைக்கில் கூட்டிப் போக வேண்டியது தானே. பிறகு வீட்டில் கொண்டும் விடலாமே. இது உனக்குத் தெரிய வேண்டாமா...?''

''அவளும் ஸ்கூட்டியில் தான் வருவா... பிறகு நான் எப்படி அவளைக் கூட்டிப் போக முடியும். ஏன்டா... இதெல்லாம் செய்தால் தான் காதலிப்பதாக அர்த்தமா...?'' என்றான் சிரித்துக்கொண்டே.

## 3



''ஆமடா இதெல்லாம் செய்தால் தான் காதலில் ஒரு 'கிக்' இருக்கும். நம் சுரேஷைப் பாரு. வாரா... வாரம் ரூம் போட்டு தங்குறான். நீ என்னடான்னா... இப்படி இருக்கியே.?''

''ஏன்டா ரூம் போட்டு அவ உடம்பை அனுபவிக்கிறது மட்டுந்தான் காதலா... இதுக்கு எதுக்குக் காதலிக்கணும். எங்கள் காதல் அப்படியில்லை. ஊட்டியில் நாங்கள் ஒரு வாரம் இருந்தோம். பக்கத்து, பக்கத்து அறைதான். அவள் அறைக்குள் நானோ... என் அறைக்குள் அவளோ... நுழையவில்லை.

''இன்றும் நாங்கள் சந்தித்தால், எங்கள் பேச்சு படிப்பைப் பற்றித்தான் இருக்கும். வேறு எந்த சலனத்துக்கும் நாங்கள், இடம் கொடுப்பதில்லை.''



''காதலித்தால் எல்லாரும் எப்போ உடம்பைத் தொடுவோம் என்று தப்பான அபிப்பிராயம் இருக்கு. நாங்க தெளிவா இருக்கோம். எங்களுக்குனு சில கடமைகள் இருக்கு. அதை முடித்துவிட்டு, பெற்றவர்கள் சம்மதத்தோடுதான் எங்கள் திருமணம் நடக்கணும் என்று நாங்கள் முடிவு பண்ணியிருக்கோம்'' என்றான்.

அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டனர், அவன் பிரண்ட்ஸ் எல்லோரும்.

''ரொம்ப சந்தோசம்டா... நீ காதலிப்பது. இந்த காலத்தில் இப்படி நீ இருக்கியே... என்று நாங்கள் வியந்திருக்கோம். இது உன் முதல் ஆசை. இது நிறைவேற எங்களின் வாழ்த்துக்கள்'' என்றனர்.

''சரி வாடா... இன்று நாங்களும் வர்றோம். உன் தேவதையைப் பார்க்க'' என்று கிளம்பினர்.

அவன் தயங்கினான். 'அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ...' என்று.

அவர்கள் ''நீ என்னடா இப்படித் தயங்குறே... உன் கோல்டன் ஹவர்ஸ்ல, எங்களுக்கு ஒரு ஐந்து நிமிடம் தா. அதற்கு மேல் நாங்கள் உங்களை டிஸ்டர்ப் பண்ண மாட்டோம்'' என்றனர் கோரசாக.

''சரி'' என்று கூட்டிப் போனான்.

அவர்களைப் பார்த்த நிவாதி வியர்த்துப் போனாள். 'என்ன இத்தனை பேர் வர்றாங்க' என்று.

கார்த்திக் முன்னால் வந்து, மெல்ல ''இவர்கள் என் பிரண்ட்ஸ். இன்று என்னை விடவே மாட்டேன்டாங்க. நீ எங்கே போறே.. என்று. அதனால் உண்மையைச் சொல்ல வேண்டியதாகப் போச்சு. உடனே எல்லாரும்

உன்னைப் பார்க்கணும் என்றனர். அதான் கூட்டி வந்தேன்டாம்மா... நீ ரொம்ப பயந்திட்டே போல இருக்கு'' என்றான் மென்மையாக.

எல்லோரும் அவளைப் பார்த்துப் பிரமித்தனர். இத்தனை அழகா என்று. தங்கத்தில் வார்த்த சிலை போல் நின்றாள். அவர்களைப் பார்த்துக் கும்பிட்டு ''வாங்க'' என்றாள்.

''என்ன நாங்க பெண் பார்க்கவா வந்திருக்கோம். வாங்க என்று கும்பிட்டு விழ. நாங்களும் உங்களுக்கு பிரண்ட்ஸ் தான்.''

''என் பிரண்ட் எதுலேயும் விழாதவன். இப்போ இப்படி தேன் நதியில் விழுந்தான் என்றால், அதற்கு ஒரு காரணம் இருக்கணுமே என்று நினைத்தோம். அது சரியாகப் போயிற்று.''

''இத்தனை அறிவும், அழகும், ஒரு பெண்ணிடம் இருந்தால், அவன் காதலிக்காமல் இருந்தால்தான் மடையன்'' என்று சிரித்தனர்.

அவள் முகம் மாலை நேரத்துப் பொன்னொளியில் ஜொலித்தது.

''சரிடா கார்த்திக். வாரத்தில் வரும் பொன்னான நேரத்தை, நீ உயிரினும் மேலாக நினைக்கும், இந்தத் தருணத்தை நாங்க கெடுக்கவில்லை. நாங்கள் வருகிறோம்'' என்று சென்றனர்.

நிவாதி அவனைப் புன்னகை ததும்பப் பார்த்தாள். அவன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து, மல்லிச் சரத்தை எடுத்து அவளுக்குக் கொடுத்தான்.

இப்படியே நாட்கள் பறந்தோடின.



எல்லா காலேஜும் கலந்து போட்டி நடந்தது. அதில் முன்னால் வெற்றி பெற்றவர்கள் கலந்து கொள்ள வேண்டும். இதில் கார்த்திக், நிவாதி டூயட் பாட்டுக்கு ஆட வேண்டும்.

கார்த்திக்கோட பிரண்ட்ஸ் எல்லோரும் கார்த்திக்கிடம். ''மச்சான் உனக்கு மச்சம்டா... யாருக்குக் கிடைக்கும் இந்த வாய்ப்பு. காதலர்கள் இருவரும் ஒரே மேடையில் ஒன்றாக ஆட'' என்று ஆர்ப்பரித்தனர்.

கார்த்திக்கும், நிவாதியும், கலந்து பேசி பிராக்டிஸ் பண்ணினர். போட்டியில் ஒரே கோலாகலம். கூட்டம் அலை மோதியது. விழா மூன்று நாள் நடந்தது. அதில் எல்லா பாரம்பரிய நடனங்களும் இடம் பெற்றன. அதில் முதல் ஜோடியாக கார்த்திக், நிவாதி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இருவரின் ஜோடிப் பொருத்தம், அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. இருவரும் உண்மையான காதலர்கள் என்பதால், இயல்பாகத் தன்னை மறந்து ஒன்றி ஆடினர்.

நடுவராக வந்த அனைவருமே பாராட்டினர்.

கார்த்திக் நிவாதி முகத்தைக் காதலுடன் ஏறிட்டான். அவள் முகம் சிவந்து, கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

அவர்களை போட்டோக்கள் எடுத்துத் தள்ளினர். மறு நாள் எல்லா பத்திரிகைகளிலும் வந்தது.

இதைப் பார்த்த கார்த்திக் அம்மா சீதை யோசனையாக புருவம் சுளித்தாள்.

அன்று சீதையின் ஒன்றுவிட்ட தூரத்துச் சொந்தமான அண்ணன் சென்னையில் இருந்து வந்திருந்தார். ஒரு நாளும் வராதவர் இன்று எதற்காக வந்திருக்கார் என்று வரவேற்றாள்.

''வாங்க அண்ணா. என்ன இவ்வளவு தூரம். உங்களைப் பார்த்து எத்தனை வருடம் ஆகிவிட்டது. என்ன திடீர்னு என்னைப் பார்க்க வந்திருக்கீங்க'' என்றாள்.

''ஒரு நல்ல விசயமாகத்தான் வந்தேன் சீதை. உனக்கு ஒரு மகன் இருக்கான் இல்லே. அவனைப் பற்றித்தான் பேச வந்தேன்'' என்றார் பூடகமாக.

''என் மகனைப் பற்றியா...? அவனைப் பற்றிப் பேச என்ன இருக்கு. அதுவும் உங்களுக்கு எப்படித் தெரியும்'' என்றாள்.

''நான் அடிக்கடி வராமல், போகாமல் இருந்தேனே தவிர, உன்னைப் பற்றி நான் விசாரித்துக் கொண்டு தான் இருப்பேன்.''

அவள் மனதில் 'இப்படிப்பட்ட அப்பட்டமான பொய்யை எதற்குச் சொல்கிறார். இவர் எவ்வளவு பெரிய பணக்காரர். தான் ஏழ்மையில் இருப்பவள். இவர் எதற்காக இப்படிப் பட்ட பொய்யை நம்மிடம் சொல்லணும். என்னிடம் இவர் என்ன எதிர்பார்க்கிறார். என்னிடம் என்ன இருக்கு. இவர் வந்து கேட்கும் அளவிற்கு.' இப்படி மனதில் பல வாறாகச் சிந்தனை ஓடியது.

''என்னம்மா சீதை. இந்த அண்ணன் சொல்வதை நம்பவில்லையா...?'' என்றார்.

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லேண்ணா. என்ன விசயம் சொல்லுங்கள்'' என்றாள்.

அவர் ''எனக்கு இரண்டு மகள்கள். உன் அண்ணி இறந்தது உனக்குத் தெரியும்'' என்றார்.

அவள் மனதில் சாவுக்குப் போனது நினைவுக்கு வந்தது. இவள் போய்விட்டு, இரண்டு நாள் இருந்துவிட்டு வரலாம் என்று நினைத்துத்தான் போனாள்.



ஆனால் இந்த தினகரன், 'எங்கே இந்த இல்லாதவள் தன் வீட்டிலேயே ஒட்டிக்கொண்டு, பணம் என்று கேட்டு விடுவாளோ...' என்று நினைத்து, ''நீ ஊருக்குப் போகலையா...'' என்று கேட்டவர்தானே.

''ஆமாம் அண்ணா. அண்ணி இறந்ததுக்கு நான் வந்திருந்தேனே. இப்போ என்ன'' என்றாள்.

''எனக்கு எவ்வளவு சொத்து இருக்குதென்று உனக்குத் தெரியும். எத்தனையோ பிசினஸ். எனக்கும் வயசாகி விட்டது. என் பெரிய மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கிறேன். வெளியில் மாப்பிள்ளை பார்ப்பதைவிட, சொந்தத்தில் மாப்பிள்ளை பார்க்கலாமே. என்னையும் என் சொத்தையும் காப்பாத்துவானே... என்று தான் உன் மகனுக்குக் கேட்டு வந்தேன்.''

''.................''

''எத்தனையோ கோடீஸ்வரங்க வர்றாங்க. எனக்கு என்னமோ அதில் விருப்பம் இல்லை.

# 4



''உன் மகனும் படித்திருக்கான். என் பிசினசுக்கு இது ஒத்து வரும். நானே வெளிநாடு அனுப்பி மேல் படிப்பு படிக்க வைக்கிறேன். உன் மகள்களுக்கு நானே படித்த மாப்பிள்ளை பார்த்து, என் செலவில் கல்யாணம் பண்ணி வைக்கிறேன். நீயும் என் கூடவே தங்கிக்கலாம்.''

''.............''

''எத்தனை வருடம் தான் நீயும் உழைப்பே. உன் உழைப்பில் சாப்பாட்டுக்கே சரியாகி விடுகிறது. இனி உன் பிள்ளை படித்து முடித்து, வேலை கிடைத்து,

சம்பாதித்துச் சேமித்து, எப்போ உன் பிள்ளைகளைக் கரையேற்றப் போகிறான்.''

''..................''

''படித்தவுடனேயே வேலை கிடைத்துவிடுமா...? நானும் தைரியமாக இருப்பேன். பிசினசை கொடுத்து விட்டு இப்போ எல்லாம் முன்னே மாதிரி வெளிநாடெல்லாம் போக முடிவதில்லை என்னால்.''

''..............''

''உன் பொண்ணுகள் என்ன படிக்கணுமோ... அதை நான் படிக்க வைக்கிறேன். நீ என்ன சொல்றே. இனியும் நீ கஷ்டப்பட வேண்டாம்'' என்று நிறுத்தினார்.

அவள் யோசனையோடு அவரை நிமிர்ந்து பார்த்தாள். 'சோழியன் குடுமி சும்மா ஆடுமா...? இவர் இங்கு வந்த போதே நான் சந்தேகப்பட்டேன். இப்பத்தானே தெரியுது இவர் எதற்கு வந்திருக்கார் என்று.

இவர் சொல்வதை நினைத்துப் பார்த்தாலும் சரிதான். எதற்கும் உடனே நம் முடிவைச் சொல்லி விடக் கூடாது. அப்புறம் இவர் பணத்துக்காக நான் அலைவது போல் ஆகிவிடும்.'

உண்மை அதுதானே. அவள் மனம் குத்தியது.

''நான் யோசித்து, நாளை என் முடிவைச் சொல்கிறேன்'' என்றாள்.

''உன் மகனிடம் கேட்கணும் என்றாலும் கேள். இல்லை பெண் பார்த்த பின்னாடி தான் என் முடிவைச் சொல்லணும் என்று நினைத்தாலும் சரி தான்'' என்றார்.

''இல்லை. என் மகன் நான் கிழித்தக் கோட்டை தாண்ட மாட்டான். நான் சொன்னால் உடனே செய்து



விடுவான். பெண் பார்க்கவும் தேவையில்லை. நான் பார்த்த பெண் தானே. நீங்க எங்கே தங்கியிருக்கீங்க. நாளை நான் அங்கு வந்து சொல்கிறேன்'' என்றாள்.

''சரி'' என்று போய்விட்டார்.

இரவு முழுவதும் யோசித்தாள். 'அவர் சொல்வது போல், இவன் எப்போ வேலைக்குப் போய், பணம் சம்பாதித்து, தன் மகள்களுக்குக் கல்யாணம் செய்வது. என்னாலும் வேலை செய்ய முடியவில்லை. இதுவரை ஒரு பவுன் சேர்க்கவில்லை. இவர் சொன்னது போல் செய்தால், எல்லோருக்கும் நல்லது.

'பெண்களின் படிப்பு, கல்யாணச் செலவு, எல்லாம் அவரே ஏற்றுக் கொள்கிறார். கல்யாணம் முடிந்தவுடன் இந்த வேலையை விட்டு விட்டு, நாமும் சென்னைக்கே சென்று விடலாம்' என்று யோசித்தாள்.

தன் மகனிடம் கேட்க வேண்டும் என்ற நினைப்பு வரவில்லை.

மறுநாள் ஹோட்டலுக்குச் சென்று ''எனக்குச் சம்மதம்'' என்றாள்.

அவர் ஒரு கட்டுப் பணத்தை எடுத்து அவளிடம் கொடுத்தார். கொடுத்துவிட்டு, அவள் காதில் ''தன் மகள் கொஞ்சம் மனநிலை சரியில்லாதவள்'' என்றார்.

அதைச் சிரிப்புடன் வாங்கிக் கொண்டாள். 'இது மாதிரி இன்னும் இவரிடம் இருந்து கறக்க வேண்டும்' என்று நினைத்தாள்.

மகள்களுக்கு இரண்டு செயின் கொடுத்தார். அவள் பூரித்துப் போனாள். 'இது மாதிரி இந்தக் காலத்தில் யார் கொடுப்பா என்று.'

இவளுக்கு எப்பவுமே இந்த எண்ணம் உண்டு. தன் மகனுக்குப் பெரிய இடத்தில் பெண் எடுக்க வேண்டும். தானும் தன் மகள்களும் நிம்மதியாக வாழ வேண்டும் என்று. அது இப்போ நிறைவேறிவிட்டது.

இன்னும் பத்து நாளில் படிப்பு முடிந்துவிடும். அடுத்து கல்யாணத்தை முடித்துவிட்டால், நம் ராஜ்ஜியம் தான். அந்த வீட்டில் இவனும் படிக்க வெளிநாடு போய் விடுவான் என்று திட்டம் போட்டாள்.

அன்று மகனிடம் முழுவதும் சொல்லாமல் மறைமுக மாக, ''உனக்கு நம் சொந்தத்தில் பெண் தருகிறேன் என்கிறார்கள். நானும் சரி என்று சொல்லியிருக்கேன்'' என்றாள்.

இதைக் கேட்ட கார்த்திக் திகைத்து விட்டான். அம்மா இப்படி ஒரு முடிவை, இவ்வளவு சீக்கிரம் எடுப்பாள் என்று தெரியவில்லை. இப்போ என் கல்யாணத்துக்கு என்ன அவசரம். தங்கைகள் இருக்கும்போது அவன் பதில் எதுவும் சொல்லவில்லை. பேசாமல் போய் விட்டான்.

இரவு அவனுக்குத் தூக்கம் வரவில்லை. ஒரே யோசனை யாக இருந்தது. இப்போ என்ன செய்வது. அம்மா இப்படிச் சொல்லிவிட்டார்களே...

காலேஜில் அவன் பிரண்ட் ரகுவிடம் சொன்னான். அம்மா சொன்னதை.

''நீ கவலைப்படாதேடா... இப்ப என்ன முடிவா பண்ணிவிட்டார்கள். முடிவு எடுத்திருக்கேன் என்று தானே சொன்னார்கள். இன்னும் எவ்வளவோ இருக்கு. பெண் பார்ப்பது, ஜாதகம் பார்ப்பது, சீர் வரிசை என்று. இது உடனே முடிவெடுக்கக் கூடிய விஷயமில்லே.''



''நீ நிவாதியிடம் கலந்து பேசு. இனியும் உங்க கல்யாணத்தைத் தள்ளிப் போடாதீங்க. அப்படித் தள்ளிப் போட்டால், உன் அம்மா பேசி முடித்து விடுவார்கள். இனியும் நீ தாமதிக்காதே. கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு, நீங்கள் இருவரும் போனீங்கன்னா... அவர் களால் ஒன்றும் சொல்ல முடியாது.

''ஒரு வாரம் கோபமா இருப்பாங்க. பின் சரியாகிவிடும். பின்னே என்ன இருவரும் வேலைக்குப் போனீங்கன்னா, சீக்கிரமே உன் தங்கைகள் கல்யாணம் ஆகிவிடும்'' என் றான்.

கார்த்திக் கல்யாணத்திற்குத் தயங்கினான். தான் எடுக்கும் முடிவு சரியா...? இதனால் தங்கைகளின் எதிர் காலம் பாதிக்கப்பட்டால்... சே... சே... நான் என்ன அப் படி விட்டு விடுவேனா... எனக்கு எவ்வளவு முக்கியமோ தங்கைகள், அது போல நிவாதியும் எனக்கு ரொம்ப முக்கியம். நிவாதியை என்னால் கைவிட முடியாது என்று நிவாதியிடம் பேசினான்.

அவள் முதலில் தயங்கினாலும், பின் கார்த்திக்கும், அவன் பிரண்ட்ஸ்களும் எடுத்துச் சொல்லவும் ''சரி'' என்று சம்மதித்தாள்.

''தங்கைகளுக்குக் கல்யாணம் ஆகும் வரை, நமக்குக் கொஞ்சம் சிரமம்தான். பின் நாம், அம்மா மட்டுந்தான். பிரச்சனையில்லை'' என்றான்.

''நாம் கல்யாணம் செய்து கொண்டு போனால், சில பிரச் சனைகள் வரலாம். நீ அதைப் பெரிது படுத்தக்கூடாது. அது மாதிரி இருந்தால்தான் நான் நிம்மதியாக இருக்க முடியும். நாம் செய்வது தப்புதானே. என் அம்மா நிச்சய மாகக் கோபப்படுவார்கள். என் மேல் கோபப்படுவதை விட, உன் மேல் தான் கோபம் அதிகமாக இருக்கும்.''

''.....................''

''என் ஒண்ணுந்தெரியாத பிள்ளையை, நீதான் கெடுத்தாய் என்று'' அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

அவள் முகத்தில் மென்னகை பூத்தது.

''ஆனால் உன்னையும் விட்டுக் கொடுக்க மாட்டேன் நிது. நீ தைரியமாக என்னை நம்பலாம்.''

''உன் வீட்டில் பிரச்சனை எப்படியிருக்கும் நிது. நம்மை ஏற்றுக் கொள்வார்களா...?'' என்றான்.

''எனக்கே தெரியலை கார்த்திக். ரொம்ப அதிர்ச்சியாகத் தான் இருக்கும். இதை அவங்களாலே... ஜீரணிக்கவே முடியாது. ஏற்றுக் கொள்வார்களா...? என்றும் தெரிய வில்லை. எனக்குப் பயமாக இருக்கு கார்த்திக். இன்னும் கொஞ்சம் யோசிக்கலாமா...? நாம்'' என்றாள்.

## 5

அவன் பிரண்ட்ஸ், அவள் பிரண்ட்ஸ் எல்லாரும் சேர்ந்து அவர்களுக்கு ரிஜிஸ்ட்டர் ஆபீசில் கல்யாணம் செய்து வைத்தனர். ஹோட்டலில் எல்லோரும் சாப்பிட்டனர். பின் ஒரு ஆட்டோவில் வீட்டிற்குச் சென்றனர்.

மகனை மாலையும் கழுத்துமாகப் பார்த்த சீதைக்கு அதிர்ச்சி தாங்க முடியவில்லை. இதை அவள் கொஞ்சங் கூட எதிர்பார்க்கவில்லை. மகன் தனக்கு இப்படித் தெரி யாமல் பண்ணுவான் என்று கனவிலும் நினைக்கவில்லை.

இவள் தினகரனுக்கு வாக்குக் கொடுக்காமல் இருந் தாலாவது, வாக்குக் கொடுத்தால் கூடப் பரவாயில்லை. அவர் கொடுத்த பணம், நகை எல்லாம் வாங்கிவிட்டு,



நிச்சயதார்த்தத்துக்கும், கல்யாணத்துக்கும் நாள் குறித்து விட்டு, இப்போ இவன் மாலையும் கழுத்துமாய்.

'இவனுக்கு எங்கிருந்து இவ்வளவு தைரியம் வந்தது. ஒரு நாளும் இவனுக்கு என்னிடம் சொல்லாமல் இப்படிச் செய்ய மனம் வராது. எல்லாம் இந்த ஆள் மயக்கியால் தான் இருக்கும்.' அவளுக்கு மனதில் ஒரு புயலே உருவானது.

மகனைப் பார்த்த பார்வையிலேயே நெருப்பு பறந்தது.

''அம்மா எங்களை மன்னிச்சுடும்மா...'' என்று காலில் விழப் போனான். அவள் ஓரடி தள்ளி நின்றாள்.

''உன்னை மன்னிக்க நான் யார்டா...? அம்மா என்ற நினைப்பு உனக்கு இருந்திருந்தால்... நீ இப்படி பண் ணுவியா...?''

''உன்னை நான் பெத்திருந்தால். நீ இப்படிப் பண்ண மாட்டே. உன்னை வளர்த்தவள் தானடா... அதான் உன் புத்தி இப்படிப் போய்விட்டது. நீ நல்ல தாய்க்குப் பிறந் திருக்கணும். உன் தாய் மாதிரி தானே நீ இருப்பே...?''

''அ..ம்...மா...மா...'' என்று கத்தினான்.

''நீ எத்தனை அம்மா சொன்னாலும் உண்மை அதுதான். நீ நான் பெத்தவன் இல்லை. நான் வேலை பார்க்கும் ஹாஸ்பிட்டலில் ஒரு பெண் டெலிவரிக்கு வந்தாள். அவதான் உன்னை பெத்துப் போட்டு விட்டு இறந்து விட்டாள்.''

''............''

''ஹாஸ்பிட்டலில் சீப் டாக்டர். இந்தக் குழந்தையை அனாதை ஆசிரமத்தில் விட்டு விடலாம் என்று சொன்னார். ஆனால் எனக்கோ மனது வரவில்லை. நான் தான் உன் அம்மாவுக்கு டெலிவரி பார்த்தேன். உன் அம்மா யாரிடமோ ஏமாந்து இருக்கிறாள்.''

''உன் முகத்தைப் பார்த்த எனக்கு உன்னைக் கொடுக்க எனக்கு மனசு வரலே. நான் டாக்டரிடம் பேசி உன்னை நான் வளர்க்க பர்மிஷன் வாங்கினேன்.''

''...............''

''டாக்டர் அப்போது. உனக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகி விட்டது. இந்த நேரத்தில் நீ குழந்தையோடு போய் நின்றால். அவன் உன்னை ஏத்துப்பானா...?'' என்றார்.

''...............''

''அவர் என்னை ஏத்துக்கலைனாலும் பரவாயில்லை டாக்டர். எனக்கு இந்தக் குழந்தை வேண்டும் என்று கெஞ்சினேன். ஏன்னா உன் மீது எனக்கு அவ்வளவு அன்பு. எனக்கே என்மீது ஆச்சரியமாக இருந்தது.''

''............''

''எனக்குக் கல்யாணம் ஆகும் வரை, இந்த விஷயத்தை அவரிடம் நான் சொல்லவில்லை. இரண்டு மாதம் ஆனதும் சொன்னேன். அவர் அவ்வளவுதான். என் மீதே சந்தேகப் பட்டார்.''

''............''

''நான் தான் தெரியாமல் பெத்துக் கொண்டு, தத்தெடுத்தேன் என்று பொய் சொல்லுகிறேன் என்று அடித்தார். யாராவது கல்யாணம் ஆகுமுன் தத்தெடுப்பாங்களா...'' என்றார்.

''....................''

''நான் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். இந்தக் குழந்தையோட அம்மா இறந்துட்டா. இந்தக் குழந்தை முகத்தைப் பாருங்கள். இதை வேண்டாம் என்று சொல்ல உங்களுக்கு எப்படி மனசு வருது என்று அழுதேன். அவர் நம்பவில்லை.''



''...............''

''உன் ஹாஸ்பிட்டலில் தினம் எத்தனையோ... குழந்தை பிறக்குது. உனக்கு இந்தக் குழந்தை மேல் மட்டும் என்ன அவ்வளவு அக்கறை?' என்று கேட்டார். தினமும் என்னை நாக்கால் சுட்டார். அத்தனையும் உனக்காகப் பொறுத்துக் கொண்டேன்.''

''...................''

இதற்கிடையே நான் கன்சீவ் ஆனேன். அப்படியிருந்தும் உன்னைக் கீழே இறக்கி விடவே மாட்டேன். உன்னை ஒரு நாள் தூக்கி வெளியில் போட்டார். நான் துடித்து விட்டேன்.''

கார்த்திக் கண் கலங்கியது.

''தினமும் என்னைக் கண்காணித்தார். என் மேல் சந்தேகப்பட்டு வீட்டுக்கு சம்பளப் பணத்தைக் கொடுக்க மாட்டார். நிறை மாதம் என்னாலும் வேலைக்குப் போக முடியவில்லை.''

''.............''

''என் டெலிவரியின் போது கூட உன்னை அந்த அறையில் தான் வைத்துக் கொண்டேன். எங்கே வீட்டில் விட்டுட்டுப் போனால் உன்னைக் கொன்றாலும் கொன்று விடுவார் என்று.''

''............''

''இப்படியே மூன்று வருடம் ஓடியது. உன் சின்ன தங்கையும் பிறந்தாள். நான் பேமிலி பிளானிங் பண்ணிக் கொண்டேன். அதோட என்னை அடித்தார். ஏன் ஆபரேசன் செய்து கொண்டாய். எனக்கு ஆண் பிள்ளை வேண்டும் என்று. நமக்குத்தான் கார்த்திக் இருக்கானே... பிறகு எதற்கு இன்னொரு ஆண் பிள்ளை'' என்றேன்.

''..........''

''அவர் இதுவரை உன் மீது சிறு சந்தேகம் மட்டுந்தான் இருந்தது. இப்போ மறுக்க முடியாத உண்மையாகி விட்டது. இது உனக்குப் பிறக்கவும் தான். நீ இப்படிப் பேசுறே... யாரோ பெத்த குழந்தைன்னா... கட்டினப் புருசன் நான் சொல்வதைவிட, உனக்கு இந்தக் குழந்தை உசத்தியாகப் போச்சா. இது உன் கள்ளப் புருசனுக்குப் பிறந்தது. இனி நான் உன் கூட வாழ முடியாது என்று சென்று விட்டார்.''

''.........''

''அன்று போனவர் தான். இதுவரை வரவில்லை. உனக்காக, மூன்றே வருடத்தில் கட்டின கணவன் போனாலும் பரவாயில்லை. நீதான் எனக்கு வேண்டும் என்று கல் மாதிரி மனசை வைத்துக் கொண்டு இருந்தேன்.''

''..........''

''என் வாழ்க்கை மூன்றே வருடந்தான். என் உடம்பு சுகத்துக்காக நான் உன்னை தூக்கி எறிந்துவிட்டு, என் புருசன் கூட வாழ்ந்திருக்கலாம். என் சொந்த பந்தங்கள் எல்லாம் சொல்லின. நான் கேட்கவில்லை. அதன் விளைவு நான் ஒத்துக்கப்பட்டேன். ஒரு வைராக்யத்தோடு உங்களை வளர்த்துப் பெரிய ஆளா ஆக்கணும் என்ற உறுதியோடு உங்களை வளர்த்தேன்.''

''................''

''உன் அப்பா அன்று சொன்னார். இது யாரோ பெத்த குழந்தை. இது உனக்குச் செய்யும் என்று கனவு காணாதே. அவன் அம்மா மாதிரி யாரையாவது இழுத்துக் கொண்டு ஓடப் போகிறான். அப்போ நீயும் உன் பிள்ளைகளும் நடுத்தெருவில் தான் நிக்கப் போறீங்க. இன்று நான் சொல்வதை அப்போ நினைத்துப் பார்ப்பாய். என்னோட அருமை உனக்கு அப்போதான் புரியும்'' என்றார்.



''.............''

''இத்தனை வருடத்தில் நான் உன் அப்பாவை நினைத்து ஏங்கியது கிடையாது. அவர் போனதும் எனக்கு நிம்மதியே. ஏன்னா...? உனக்கு அவரால் ஆபத்து ஏதும் வராதில்லையா...? அதனால்தான்.''

கார்த்திக் அம்மா காலில் விழுந்து கதறினான்.

''அம்மா என்னை மன்னிச்சுருங்க. நான் செய்தது தப்புத்தான். உங்களை நினைக்காமல், தங்கைகளை நினைக்காமல், கல்யாணம் பண்ணினது தப்புத்தாம்மா... அதுக்காக என் அம்மா மாதிரி என்று சொல்லாதீங்க. நீங்க தான் என் அம்மா'' என்று கதறினான்.

''நீங்க இனி என்ன சொல்றீங்களோ... அதை நான் கேட்கிறேன். இனி உங்கள் அனுமதியில்லாமல் எதுவும் செய்ய மாட்டேன்'' என்றான். இந்தக் கல்யாணத்தை ஏற்றுக் கொள்வார் என்று.

## 6



சீதை கண்ணில் கண்ணீர். கார்த்திக் அதைத் துடைத்து விட்டான்.

நிவாதியும் கூட வந்தவர்களும் சிலை போல் நின்று விட்டனர். இனி என்ன நடக்குமோ என்று. இவர் தன்னை ஏற்றுக் கொள்வாரா... அம்மா மாதிரி பிள்ளை என்று குத்திக் காட்டுறாங்களே... அதைத் தாங்க முடியாமல் எப்படித் துடிக்கிறார் என்று கார்த்திக் முகத்தைப் பார்த்தாள்.

சீதை தொடர்ந்தாள். ''நீ என் சொல்லை மீறமாட்டாய் என்று, என் தூரத்துச் சொந்தமான அண்ணன் மகளுக்கும் உனக்கும் பேசி முடித்துவிட்டேன்.''

''அ..ம்...மா..மா..'' அதிர்ந்தான்.

''நீங்கள் என்னிடம் கேட்டார்கள் என்று தானே சொன்னீங்க. இப்போ பேசி முடித்துவிட்டேன் என்கிறீங்க'' என்றான்.

''ஆமாம். நீ மறுக்க எந்தக் காரணமும் இல்லையே. அதனால் தான் பேசி முடித்தேன்.''

''எதற்கு இந்த அவசரம் அம்மா? இப்போ என்ன கல்யாணத்துக்கு அவசரம் என்று முடிவு பண்ணினீர்கள்'' தான் கல்யாணம் பண்ணி வந்ததை மறந்து கேள்வி கேட்டான்.

அவனை சீதை ஏளனமாகப் பார்த்தாள். ''நான் என் கடமையைத்தான் செய்தேன். அதில் சுயநலம் கூட இருக்கு. ஆனால் நீ என்ன அவசரம்னு கல்யாணம் பண்ணிக் கொண்டே வந்துவிட்டாய்'' என்றாள்.

கார்த்திக்கு முகத்தில் அடித்தது போல் இருந்தது. தலையைக் குனிந்து கொண்டான்.

''சுயநலம் என்று சொன்னேனே... அது என்ன என்று கேள். அவர் பெரிய பணக்காரர். பிசினஸ்மேன். உன்னைப் படிக்க வெளிநாட்டுக்கு அனுப்பி, அவர் பிசினசையே பார்த்துக் கொள்ளச் சொன்னார். என் பிள்ளைகள் இரண்டு பேரையும், நல்லா படிக்க வைத்து, பெரிய இடத்து மாப்பிள்ளையாகப் பார்த்து, நகை போட்டு, கல்யாணமும் அவரே செய்து வைக்கிறேன்'' என்றார்.

''............''



''என்னையும் வேலையை விட்டுவிட்டு, வீட்டையும் காலிபண்ணிட்டு, சென்னைக்கே அவர் வீட்டுக்கு அவர் வரச் சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டேன். இன்னேரம் பத்திரிகைகூட அடித்திருப்பார். நான் அவரிடம் வரதட்சணையாக கை நீட்டிப் பணமும் வாங்கிவிட்டேன்.''

''............''

''உன்னால் தொலைந்த என் வாழ்க்கை. உன்னால் என் பிள்ளைகளின் வாழ்க்கையாவது நல்லாயிருக்கட்டும். நானும் உனக்குக் கெடுதல் ஒண்ணும் பண்ணலையே... நல்ல இடமாகத்தானே பார்த்திருக்கிறேன்'' என்றாள்.

கார்த்திக். ''அம்மா நான் வேலைக்குப் போய் தங்கைகளுக்குச் செய்ய மாட்டேனா... என்னை வித்துத்தான் இதையெல்லாம் செய்யணுமா...? நான் வேலைக்குப் போனதும். நீங்கள் வேலையை விட்டு விடுங்கள். நிவாதியும் வேலைக்குப் போவா... நாங்க இரண்டு பேரும் நீங்க என்ன சொல்றீங்களோ... கேட்கிறோம்'' என்று கெஞ்சினான்.

''உனக்கு எப்போ வேலை கிடைத்து, நீ சம்பாதிச்சு இதையெல்லாம் செய்யப்போறே... உன்னால் இன்று பவுன் விற்கும் விலைக்கு பத்துப் பவுன் போட முடியுமா...? நான் பட்ட கஷ்டம் என் பிள்ளைகள் படக்கூடாது.''

''..............''

''இது சுயநலம் தான். இதுக்குத்தான் என்னை வளர்த்தீங்களா...? என்று கேட்டால் ஆமாம் தான். நீ சிறு பிள்ளையாய் இருக்கும்போது எனக்கு இதெல்லாம் நினைவு வரவில்லை. நீ என்ன இருந்தாலும், நான் வளர்த்த பிள்ளைதானே... நீ இது மாதிரி செய்ய மாட்டாய் என்று என்ன நிச்சயம் எனத் தோன்றும்.''

''..............''

''உன்னை நான் எப்படி நம்ப முடியும். இப்போ உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. உன்னிடம் வந்து எந்த உரிமையில் கேட்க முடியும். உன் மனைவி விடுவாளா...? உனக்கு நாளைக்குக் குடும்பம், குழந்தை என்று வந்தால் செலவுகள் பெருகும். அதுவும் வாஸ்தவம்தானே.''

''..............''

''எதை வைத்து நீ கல்யாணம் செய்து கொடுக்க முடியும். எப்படி முடியும் உன்னால். பிறகு உங்களுக்குப் பிரச்சனை வரும். என் பிள்ளைகளும் உரிமையோடு உன்னிடம் எதுவும் கேட்க முடியுமா...? உனக்கே ஒரு கால கட்டத்தில் வெறுப்பு வரலாம்.''

''............''

''பணம் மிதமிஞ்சி இருந்துவிட்டால் கூடப் பரவாயில்லை. கொடுத்து விடுவாய். நீ கஷ்டப்பட்டு சம்பாதித்துக் கொடுப்பதென்பது முடியாத காரியம்.''

''அம்மா இவள் அப்படிச் செய்ய மாட்டாம்மா. நாங்கள் வாங்கும் சம்பளத்தை உங்களிடமே கொடுத்து விடுகிறோம்.''

''தங்கைகளுக்குக் கல்யாணம் ஆகும் வரை. குழந்தை கூட பெத்துக்க மாட்டோம்'' என்றாள் நிவாதி.

''நீ என்னிடம் பேசாதே. உனக்கும் எனக்கும் பேச்சில்லை. சீ... நீயெல்லாம் ஒரு பொண்ணா. உன்னை பெத்து வளர்த்து, படிக்க வைத்து, எத்தனை கனவு கண்டிருப்பாங்க பெத்தவங்க. நீ இப்படிச் சொல்லாமே வீட்டை விட்டு ஓடி வந்திட்டியே... நாளைக் காலையில் ஊருக்குத் தெரிந்து விடும்.''

''..............''



''உன்னைப் பெத்தவங்க உயிரோட இருப்பாங்களா...? வெளியில் தான் நடமாட முடியுமா...? உன்னைப் பெத்து வளர்த்ததுக்கு எத்தனை அவப்பெயர். இந்த வயதில் அப்படி என்ன அவசரம் கல்யாணத்திற்கு. ஒரு ஆம்பளைப் பார்க்க கண்ணுக்கு அழகா, லட்சணமாக இருக்கக் கூடாது. உடனே அவனை மயக்கிவிட வேண்டும்.''

நிவாதி முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

''உன் வீட்டில் வசதி இருந்தாலாவது பரவாயில்லை. சரி என்று சொல்லலாம். நீயும் ஒரு பிச்சைக்காரிதான் போல இருக்கு.''

''பணத்துக்காகத்தான் என்னை வளர்த்தியாம்மா...? பிள்ளையின் மனசைக்கூடப் பாராமல் இப்படி வித்தியா...?''

''நிச்சயமாக பணத்துக்காகத்தான் நான் இப்படிச் செய்தேன். ஏன்னா... பணத்துக்கு எவ்வளவு கஷ்டப்பட்டேன் என்று உனக்குத் தெரியுமா...? அதை நீங்களும் அனுபவிக்கக் கூடாது என்று தான் இத்தனை சொல்கிறேன்.''

''அம்மா நீங்கள் வாங்கிய பணத்தை எப்படியாவது நான் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். இந்தக் கல்யாணத்தை நிறுத்தி விடுங்கம்மா...'' என்று கெஞ்சினான்.

''நீ எப்படித் தருவே. உன்னால் இரண்டு லட்சம் தர முடியுமா...? என் மகள்களுக்கு கழுத்துக்கு செயின். காதுக்கு தோடு என்று பத்து பவுனுக்கு மேல் கொடுத்திருக்கிறாரே...? இதையெல்லாம் உன்னால் திருப்பித் தர முடியுமா...?'' என்றாள் காட்டமாக.

அவன் பிரமித்தான். மீண்டும் தணிவாகவே கெஞ்சினான்.

''அம்மா அவள் என்னை நம்பி வீட்டை விட்டு வந்து விட்டாள். இனி அவள் வீட்டுக்கும் போக முடியாது.

கல்யாணம் வேறு ஆகிவிட்டது. இனி அவள் எங்கம்மா போவாள். ப்ளீஸ்மா. இவளை மட்டும் மருமகளா ஏற்றுக் கொள்ளுங்கள்: நான் எப்படியாவது, கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுத்து விடுகிறேன்'' என்றான்.

''இது உனக்கு விலையில்லை. உன் படிப்புக்குத்தான். ஆளும் பார்க்க பெரிய இடத்துப் பிள்ளை மாதிரி, இத்தனை வளர்த்தியாக இருக்கே. இதெல்லாம் யாரால். உன்னை பெத்த அம்மாவாலா... இல்லையே... நான் போட்ட பிச்சை, படிப்பு, உடம்பு, இதை சொந்தம் கொண்டாட இவள் யார்...? இவளை போகச் சொல்லு'' என்றாள்.

## 7



நிவாதி சீதை காலில் விழுந்தாள்.

''நான் செய்தது தப்புத்தான். மன்னிக்க முடியாத குற்றம்தான். நான் மனதார காதலித்து விட்டேன். கல்யாணமும் நடந்து விட்டது. இந்த நிலையில் எங்கு போவேன் அம்மா. என்னையும் உங்க பொண்ணு போல் நினைங்க'' என்று அழுதாள்.

''சீ... சீ... எழுந்து தூரப்போ... என் பொண்ணு மாதிரியா...? நாங்க கஷ்டப்பட்டாலும் என் பொண்ணை ஒழுக்கமாகத்தான் வளர்த்திருக்கேன். உன்னை மாதிரி ஓடு காலியா இல்லை. நீ என் மகனை விட்டுப் போ...'' என்று துரத்தினாள்.

நிவாதியின் கதறல் கார்த்திக்கின் நெஞ்சைப் பிசைந்தது. ''அம்மா ப்ளீஸ்மா... எங்களைப் பிரித்து விடாதீங்கம்மா...'' என்றான்.

''அப்ப சரி. நீ அவளுடன் குடும்பம் நடத்து. நானும் என் பிள்ளைகளும் இன்றே எங்கள் உயிரை விட்டு



விடுகிறோம். எங்கள் பிணத்தின் மீது உங்கள் படுக்கையைப் போடுங்கள்'' என்றாள்.

கார்த்திக் தவித்தான். ''அம்மா ஏன் இப்படிச் சொல்றீங்க. நீங்கள் எல்லாம் இறப்பதற்கா நான் இப்படிச் செய்கிறேன்.''

''ஆமாம். நீ செய்வது அப்படித்தான் இருக்கு. பணத்தைக் கொடுத்தவன் சும்மா இருப்பாரா... அவர் பத்திரிகை கூட அங்கே கொடுத்திருப்பார். அவர் எவ்வளவு பெரிய மனுசன்.''

''கல்யாணம் நின்று அவமானம் என்றால், எங்களைச் சும்மா விடுவாரா...? நான் ஏமாற்றியதாகத்தானே நினைப்பார். அதெப்படி உனக்குத் தெரியாமல் இருக்கும். உன் பிள்ளை காதலித்தது. தெரிந்து தானே என்னிடம் பணம் வாங்கினே என்று போலீசில் பிடித்துக் கொடுத்தாலும் கொடுத்து விடுவார்.''

''..................''

''போலீசில் பிடித்துக் கொடுத்து, என் பிள்ளைகளின் வாழ்வு வீணாவதை விட நாங்களே... எங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறோம். இல்லையென்றால் ரவுடிகளை வைத்து, முகத்தில் ஆசிட் ஊற்றுவார். எப்படி மாப்பிள்ளை பார்க்க முடியும்.''

''............''

''என் மகளுக்குக் கல்யாணம் நின்று விட்டதே. உன் மகளுக்கு எதுக்கு என்று, மாப்பிள்ளையே வராமல் தடுத்தாலும் தடுத்து விடுவார்.''

''............''

''நான் கல்யாணம் பண்ணி என் வாழ்க்கை கெட்டது. என் பிள்ளைகள் கல்யாணம் ஆகாமலேயே... வாழ்க்கை

கெடப் போகுது உன்னால். உன்னை வளர்த்ததுக்கு எனக்கு நல்ல கைமாறு செய்து விட்டாய்.''

''அது மாதிரி எல்லாம் நடக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன் அம்மா. நீங்க பயப்படாதீங்க'' என்றான்.

''எப்படி. இப்போ கல்யாணம் செய்து வந்திருக்கியே அது மாதிரியா...? எப்படி உன்னை நம்ப முடியும் நான். இப்படி என் கழுத்தை உயிரோட அறுத்து விட்டாயே...'' என்று அழுதாள்.

''இப்போ நீங்க நம்பணும்னா... நான் என்ன செய்யணும்'' என்றான் கோபமாக.

''இவளை இப்பவே அனுப்பிவிட்டு, இன்றே கிளம்பு சென்னைக்கு'' என்றாள்.

''அது என்னால் முடியாதும்மா. இவளை நான் எப்படி அனுப்புவேன்.''

''இது தான் உன் முடிவா...?''

''ஆமாம்.''

''அப்போ என் முடிவையும் தெரிந்துவிட்டு, இந்த வீட்டை விட்டுப் போ...'' என்று வாங்கி வைத்திருந்த பத்து லிட்டர் மண்ணெண்ணை டின்னை எடுத்து வந்து, மகள் இருவர் மீது ஊற்றிவிட்டு, மிச்சத்தைத் தன் மீது ஊற்றிக் கொண்டாள்.

கார்த்திக் பதறிவிட்டான்.

''அம்மா நான் அவளை அனுப்பி விடுகிறேன். இன்றே சென்னைக்குப் போகிறேன். நீங்கள் சொல்வதையெல்லாம் கேட்கிறேன். இப்படி பண்ணாதீங்கம்மா'' என்று அழுதான்.

நிவாதியும், வந்தவர்களும் அதிர்ந்தனர். இவன் இப்படிச் சொல்லிவிட்டானே என்று. பிறகு அவனுந்தான் என்ன செய்வான். எவ்வளவோ, மன்றாடி கெஞ்சிப் பார்த்து விட்டான். இப்படிக் கண் முன்னே உயிரை மாய்த்துக் கொள்பவர்களிடம் என்ன பேச முடியும். எதுவும் முடியாது. பின் அவர்கள் போக்கிற்குத்தான் அவன் போக முடியும்.



கார்த்திக் நிவாதியிடம் கையெடுத்துக் கும்பிட்டான்.

''நிகி... என் வாயால் போ... என்று சொல்லவிடாதே... நான் என்ன பாவம் பண்ணினேனோ... தெரியல, இந்த ஜென்மத்தில் இந்த தண்டனை. இனி இந்த பாவத்தையும் செய்ய விடாதேடா...'' என்று அழுதான்.

அவன் கும்பிட்ட கையிரண்டையும் பிடித்துக் கொண்டு அவன் மார்பில் சாய்ந்து அழுதாள்.

''என்னை போகச் சொல்லாதீங்க கார்த்திக். நான் எங்கு போவேன். உங்களை விட்டுப் பிரிந்திருக்க என்னால் முடியாது.''

''நான் என்ன செய்வேன் நிவாதி. நீ தான் எல்லாம் கேட்டியே. என் அம்மா சொன்னதை. இந்த உயிர், உடம்பு, படிப்பு, எனக்கு எதுவுமே சொந்தமில்லை. இதெல்லாம் இவங்க போட்ட பிச்சை. இது அவங்களுக்கு மட்டுந்தான் பயன்படணும். வேறு யாருக்கும் சொந்தமில்லை.''

''.............''

''அவர்கள் சொல்வதில் எந்தத் தப்புமில்லை. என்னை மறந்து விடு நிவாதி. உன் மனசை, உன் வாழ்க்கையை நான் கெடுத்து விட்டேன். என்னைக் கடவுள் கூட மன்னிக்க மாட்டார். நீ எப்படி என்னை மன்னிப்பாய். இவ்வளவு பிரச்சனை இருக்கையில் நாம் சந்தோசமாக வாழ முடியுமா...''

''...............''

''எனக்காக என் அம்மா, தன் வாழ்க்கையைப் பணையம் வைத்திருக்காங்க. நான் அதற்கு எந்தக் கைமாறும் பண்ண வேண்டாமா...? இனி நான் அவர்களுக்காகவே வாழ்வேன். உன் கார்த்திக் நன்றி மறக்கலாமா...? இனி நான் நடை பிணம் தான். என்னை மறந்துவிட்டு, நீ இன்னொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்'' என்றான்.

அவள் கதறிய கதறலில், சீதையின் கண்களில் இருந்தே கண்ணீர் வடிந்தது. அவள் ஒரு அன்பே வடிவான, கருணையே உருவாக உள்ள, ஒரு உன்னதத் தாய்தானே.

இன்று மகள்கள் என்று வரும்போது, சுயநலம் வருவது இயல்பு தானே. இதை சுயநலம் என்று கூடச் சொல்ல முடியாது. ஒருவித எதிர்பார்ப்பு. பாதுகாப்பு, எதிர்காலத்தைப் பற்றிய பயம். எங்கே நம் மகன் நம்மை விட்டுப் போய் விடுவானோ என்ற தவிப்பு. இது நியாயமான எதிர்பார்ப்புத்தானே.

தனக்கும் மகள்களுக்கும் பாதுகாப்புத் தேடுகிறாள். தான் பட்ட கஷ்டம், அவளை அப்படி சுயநலமாகச் சிந்திக்க வைக்கிறது. ஆனால் மகனின் மனதைப் பற்றிச் சிந்திக்கவில்லை.

அவன் மனதை சல்லடைக் கண்களால் தன் பேச்சு, துளைத்தது பற்றிச் சிந்திக்கவில்லை.

கார்த்திக் நிவாதியை ''வா'' என்று அவன் அறைக்குக் கூட்டிப் போனான். அறைக்குள் நுழைந்ததுமே கதவைச் சாத்தினான்.

''நிகி... நீ.. எ..ன..க்...கு ஒரு சத்...தி...யம் பண்ணித் தர வேண்டும்'' என்று தயங்கிய குரலில் கேட்டான்.

''அது எனக்குத் தெரியும் கார்த்திக். நான் தற்கொலை எதுவும் பண்ணிக்கக் கூடாது என்று தானே...'' என்று அவன் கை மீது கையை வைத்தாள்.



அவன் அந்தக் கையைப் பிடித்து, தன் தலை மீது வைத்தான்.

''கார்த்திக் இனி நான் சாக வேண்டியதில்லை. என் உயிர் எப்பவோ போய்விட்டது. நான் எத்தனை கனவுகளுடன் இன்று உங்களுடன் வந்தேன். இந்த அறையில் ஒன்று சேருவோம் என்று நினைத்தேன். இப்...போ... பிரிவதற்கு பேசிக் கொண்டிருக்கிறோம்'' என்று அவனை இறுக அணைத்தாள்.

இதை கார்த்திக்கே எதிர்பார்க்கவில்லை. அவன் உதட்டில் அழுந்த முத்தமிட்டாள். கன்னம், நெற்றி என்று முகமெல்லாம் முத்தமிட்டாள்.

## 8



அவனும் ஒரு நிமிடம் தன்னை மறந்தான். அவளை இறுக அணைத்துவிட்டு, சட்டென விலகி, கதவைத் திறந்து வெளிவந்தான்.

அவள் அந்த அறையைச் சுற்றிப் பார்வையைச் சுழல விட்டாள்.

டேபிளில் அவன் போட்டோ ஒன்று இருந்தது. அதை எடுத்து மறைத்துக் கொண்டாள். பின் வெளியே வந்து ''நான்... போ..கி..றே..ன் கார்..த்..திக்'' என்று கூறிவிட்டுக் கண்ணீருடன் வெளியேறினாள்.

எல்லோரும் போய்விட்டனர். கார்த்திக் தன் அறையில் போய் கதவைச் சாத்திக் கொண்டான்.

'நிவாதி வீட்டில் போய் என்ன சொல்வாளோ... அவர்கள் அவளை வீட்டில் சேர்த்துக் கொள்வார்களோ... வெளியே போகச் சொல்லி விட்டால், அவள் எங்கு போவாள்.' மனம் கலங்கியது அவனுக்கு.

நாட்கள் யாருக்காகவும் காத்திருக்காமல் ஓடின.

குறித்த நேரத்தில் மாதவி கழுத்தில் தாலி கட்டினான் கார்த்திக். குடும்பத்தோடு சென்னைக்கே வந்து விட் டார்கள்.

பெரிய பங்களா. எல்லோருக்கும் தனித்தனி அறை. ஏ.சி. சகல வசதியும் இருந்தன.

அவன் பெண் பார்க்கவோ... வேறு எதற்கும் அவன் கலந்து கொள்ளவில்லை. மண மேடையில் கூடப் பெண்ணை நிமிர்ந்து பார்க்கவில்லை.

நிவாதி சென்றவுடன் அன்றே தன் மனக் கதவைப் பூட்டி விட்டான். 'இனி அது யாருக்காகவும் திறக்காது. ஒரு போதும் இனி அவனுக்காக வாழ மாட்டான். அவன் வாழ என்ன இருக்கு. தன்னால் பிறராவது சந்தோசப்பட்ட டுமே' என்று பேசாமல் இருந்தான்.

இரவு அறைக்குள் நுழைந்தான். இவன் உள்ளே போகும் போது, மாதவி அங்கு தொங்கிய பூக்களை எல்லாம் பிய்த்து எறிந்து கொண்டிருந்தாள். அவள் எறிந்தது அவன் மேல் வந்து விழுந்தது.

நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

அவள் சிரித்தாள். ''நீ யாரு. இங்கு எதுக்கு வந்தே... நீபோ....'' என்று பழம், பால் எல்லாவற்றையும் தூக்கி எறிந்தாள்.

சத்தம் கேட்டு மாதவி தங்கை மாலதி வந்து கதவைத் தட்டினாள். இவன் போய் கதவைத் திறந்து விட்டான்.

அக்கா இருந்த நிலையும், அறையெல்லாம் பால், பழம் சிதறிக் கிடந்ததைப் பார்த்து நடந்ததைப் புரிந்து கொண்டாள்.



''சாரித்தான். நான் அவளைச் சமாதானப்படுத்துகிறேன்'' என்று அவளுக்கு மாத்திரையைக் கொடுத்துத் தூங்க வைத்தாள்.

கார்த்திக் ஒரு நிமிடத்திலேயே கண்டு கொண்டான். இவள் மனநிலை சரியில்லாதவள் என்று அவன் மனம் எந்த ஒரு அதிர்வையும் ஏற்படுத்தவில்லை.

அவன் நிவாதியைப் பிரிந்த வலியையே தாங்கிக் கொண்டான். இது என்ன சுஜிபி. அவன் மனதில் சல னமேயில்லை. இப்படி இருக்காளே... என்ற கவலையு மில்லை. மாறாக நிம்மதியாகத் தான் இருந்தது.

பெருமூச்சு விட்டான். மாலதி அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

அவள் பார்ப்பதை உணர்ந்து அவளிடம். ''நீங்கள் யார்...? இவங்களுக்கு எப்போ இருந்து இப்படி இருக்கு'' என்றான்.

அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள்.

''நான் யாரென்று உங்களுக்குத் தெரியாதா...? நான் மாதவியோட தங்கை மாலதி. இவளுக்குப் பிறவியில் இருந்தே இப்படித்தான் இருக்கு. உங்களுக்குத் தெரி யாதா அத்தான்'' என்றாள்.

''எனக்குத் தெரியாது மாலதி.''

''உங்களுக்கு ரொம்ப அதிர்ச்சியாக இருக்குமே...?''

''ச்சு... அதெல்லாம் ஒன்றுமில்லை... எனக்குப் படுக்கணும் மாலதி'' என்றான்.

அவள் மேல் மாடியில் ஒரு அறையை அவனுக்குத் திறந்து விட்டாள்.

''இனி இதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள் அத்தான்'' என்றாள்.

''ரொம்ப தேங்க்ஸ் மாலதி. குட்நைட்'' என்று கதவைச் சாத்திக் கொண்டான்.

படுக்கையில் படுத்தவனுக்கு நினைவு இழுத்துச் சென்றது. 'இது அம்மாவுக்குத் தெரிந்திருக்கும். இதை மறைத்துத் தான் இந்தக் கல்யாணத்தை நடத்தியிருக்காங்க.

எல்லாம் பணம். இந்தப் பணத்திற்குத்தான் எத்தனை சக்தி. இந்தப் பணத்தால் தானே... என் வாழ்க்கை திசை மாறியது.

பணம் இருந்திருந்தால் அன்றே கொடுத்துவிட்டு, என் நிவாதியுடன் சந்தோசமாக இருந்திருப்பேனே. இத்தனை மாதத்தில் அவள் வயிற்றில் என் குழந்தை வளர்ந்திருக்கும்.' அவன் உடல் சிலிர்த்தது.

அவள் போட்டோவை எடுத்துப் பார்த்தான். அத்தனையும் அவர்கள் கல்யாணத்தின் போது எடுத்த படம். அதில் தான் எத்தனை புன்னகை. மந்தகாசமான புன்னகை. மனதிற்பிடித்த கணவனைக் கைப்பிடித்தோம் என்று.

அவள் கண்களை உற்றுப் பார்த்தான். அவள் சிரிக்கும் போது, அந்தக் கண்களும் சிரித்தன. அவள் உதட்டில் முத்தம் கொடுத்தான்.

அவன் உதட்டில் விரக்தியான புன்னகை. பர்ஸ்ட் நைட்டில் தன் காதலியை எந்த மடையன் கொஞ்சுவான். இல்லையில்லை. நீ தான் என் மனைவி என்றும் எனக்கு நீ மட்டுந்தான்.

மறுநாள் காலையில் இருந்து ஆபீஸ் போனான். நாய் வேஷம் போட்டாச்சு. இனி குரைத்துத்தானே ஆகணும்.

மாலதியும் ஆபீசைத்தான் கவனித்தாள்.

மாதவியை கவனித்துக் கொள்ள வீட்டில் ஆள் இருந்தார்கள். காலை சாப்பிடும்போது ''மாதவி எழுந்து விட்டாளா...'' என்றான் மாலதியிடம்.



அவள் கண்கள் கலங்கியது.

அதை கவனித்த கார்த்திக், ''நீ எதுக்கு மாலதி கண் கலங்குறே... என் மனைவியைப் பற்றித்தானே நான் விசாரித்தேன்.''

''அவள் எழ இன்னும் நேரமாகும். மாத்திரையால் தூங்கும்போது, அவளுக்கு எப்போ விழிப்பு வருதோ... அப்பத்தான் எழுந்திருப்பா. வேலைக்காரங்க பார்த்துக்கொள்வாங்க'' என்றாள்.

காரில் போகும்போது ''அத்தான்'' என்றாள் மாலதி.

''என்ன மாலதி. என்ன கேட்கணும்'' என்றான்.

அவள் தயங்கினாள்.

''சும்மா சொல்லு மாலதி.''

''இல்லை. நீங்க எதுக்காக அக்காவை க..ல்..யா...ணம் பண்...ணி..க்கிட்டீங்க'' என்றாள்.

''அப்போ உனக்கும் விஷயம் எதுவும் தெரியாது என்று சொல்லு. அது போல எனக்கும் மாதவி இப்படி என்று தெரியாது. இரவு உன் அக்காவைப் பார்க்கும் வரை.''

''............''

''எல்லாம் பணம் தான் மாலதி. நான் விலை கொடுத்து வாங்கப்பட்டவன். உன் அப்பாவால். அதற்குத் தகுந்த மாதிரி இருக்கும் என் உழைப்பு. உன் அக்காவையும் நான் விட மாட்டேன். நீ பயப்பட வேண்டாம்.''

''இல்லை. நான் பயப்படவில்லை. அப்பா அக்காவுக்குக் கல்யாணம் என்றதும், நான் ஆச்சரியப்பட்டேன். சரி ஏதோ சாதாரண மாப்பிள்ளையாக இருக்கும். அக்காவுக்கும் கடைசி வரை ஒரு துணை வேண்டுமே... பாதுகாப்பாகப் பார்த்துக் கொள்ள. அதான் சரியென்று நானும் சொன்னேன்.''

"................"

"ஆனால் நீங்கள் இவ்வளவு ஸ்மார்ட்டா... வசீகரமாக இருந்து கொண்டு, இவ்வளவு படிப்பு படித்துவிட்டு, ஏன் அக்காவைப்போய்... அவளால் உங்களுக்கு எந்த சுக... பிரயோஜனமும் இல்லையே. அக்காவுக்காக உங்க இள வாழ்க்கையை வீணாக்கலாமா...? என்று தான் கேட்டேன்.

அவன் சிரித்தான். அவனின் பளீர் புன்னகை மின்னல் வெட்டியது போல் இருந்தது. அந்த பல்வரிசை, அடர்ந்த மீசை, நினைப்பு தடுமாறுவதை நினைத்து கடிவாளம் போட்டாள்.

# 9



"மாலதி நான் உன் அக்கா கணவன் என்ற நினைப்பு இருக்கட்டும்."

"சாரித்தான். நான் சொன்னதை நீங்கள் தப்பாப் புரிஞ்சுக்கிட்டீங்க. சாரி..." என்றாள் அவசரமாக.

"நானும் விளையாட்டாகத்தான் சொன்னேன் மாலதி. நீ எதற்கு இப்படிப் பதட்டப்படுறே..... அதான் சொன்னேனே... எல்லாம் இருந்தும், என் கிட்டே பணம் இல்லை. அது உங்கக்கிட்டே இருக்கு. பணம் இருந்தால்... எதையும் விலை கொடுத்து வாங்கலாமில்லையா...?" என்றான் அழுத்தமாக.

"சாரித்தான். அப்பா இப்படிப் பண்ணுவார் என்று நான் நினைக்கவில்லை."

"இது முடிந்து போன அத்தியாயம் மாலதி. இனி இதைப் பற்றிப் பேசிப் பயனில்லை. இனி நடக்கப் போறதைப் பற்றி யோசிப்போம்" என்றான்.



மாலதி அவன் அப்படிச் சொன்னதும், அவன் மேல் இன்னும் மரியாதை கூடியது.

கார்த்திக்கை ஆபீசில் அனைவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தாள். கார்த்திக்குக்கு ஆபீஸ் வேலையைப் பற்றி விளக்கினாள். அவனும் புரிந்து கொண்டான்.

இரவு மாதவியைப் போய்ப் பார்த்தான். கையில் எதையோ வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். இவளும் அழகுதான்.

"மாதவி" என்று பக்கத்தில் போய் உட்கார்ந்து, அவள் கையைப் பிடித்தான்.

அவனை ஒரு அறை விட்டாள். அவன் அப்படியே கண்களை இறுக மூடிக் கொண்டான். நிவாதிக்கு துரோகம் செய்யப் போய் கிடைத்த தண்டனையாக நினைத்தான்.

'இவள் குழந்தை மாதிரி இவளுக்கு என்ன தெரியும். அடிக்கிறோம் என்று தெரியுமா? அவள் கையைப் பிடிக்கவும் சட்டென அடித்து விட்டாள். நான் யார் என்று கூட அவளுக்குத் தெரியாது.

கடவுள் இவ்வளவு அழகைக் கொடுத்து, பணத்தையும் கொடுத்து, இவளை ஏன் இப்படித் தண்டிக்கிறார். இவள் என்ன தப்புப் பண்ணியிருக்க முடியும். பிறக்கும் போதே.'

அவனையே குறுகுறுவெனப் பார்த்தாள். "வலிக்குதா..." என அவன் கன்னத்தைத் தடவி விட்டாள்.

அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவள் முகத்தில் விழுந்த முடியை ஒதுக்கி விட்டான்.

"சாப்பிட்டியா.. மாதவி."

அவளுக்கு அதற்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

''வர்றீயா கீழே போய் சாப்பிடலாம்'' என்று கூப்பிட் டான்.

அவளுக்கு என்ன புரிந்ததோ... தலையை மட்டும் ஆட்டினாள். நைட்டியை சரியாக இழுத்து விட்டு, கைப் பிடித்துக் கீழே கூட்டி வந்தான்.

டைனிங் டேபிளில் டிபனை எடுத்து வைத்துவிட்டு, நின்ற வேலையாட்களை ''நீங்கள் போகலாம். தேவையென் றால் நானே உங்களைக் கூப்பிடுகிறேன்'' என்றான்.

அவளைக் கை கழுவச் சொன்னான். அவளும் மந் திரத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரி, கை கழுவி வந்து உட் கார்ந்தாள்.

அவளிடம் பேச்சுக் கொடுத்தான்.

''உனக்கு என்ன பிடிக்கும். இந்த சட்னி பிடிக்குமா...? தோசை பிடிக்குமா...? இந்த இட்லியைப் பாரேன். எவ் வளவு அழகா... குண்டா... உன் கன்னம் மாதிரியே இருக்கு'' என்றான்.

அவளுக்குச் சரியாகச் சாப்பிடத் தெரியவில்லை. மடி யெல்லாம் போட்டுக் கொண்டாள். தண்ணி, சட்னி எல் லாம் தட்டி விட்டாள். கார்த்திக் மேலும் எறிந்தாள்.

தினமும் மாலையில் அவளுடன் இரண்டு மணி நேரத்தைக் கழித்தான். அவள் செய்வதையெல்லாம் பொறுத்துக் கொண்டான். ஒரு குழந்தை போல் பார்த்துக் கொண்டான்.

மாலை ஐந்து மணி ஆனால், மாதவி கார்த்திக்கைத் தேடினாள். தோட்டத்திற்குக் கூட்டிப் போனான். பின் வெளியே வந்து சிறிது தூரம் நடந்து வந்தனர்.

அன்று மாலதியுடன் ஆபீஸ் பத்திப் பேசிக் கொண் டிருந்தான். அவனைத் தேடி மாதவி அங்கு வந்தாள்.



கார்த்திக் அங்கு இருக்கவும் அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

''வா மாதவி. சாப்பிட்டியா... என்ன எப்பப்பார் இந்த நைட்டியில் தான் இருப்பியா...? ஒரு சுடிதார்.. சேலை என்று கட்டக்கூடாதா...? இனி நீ நைட்டியே போடக் கூடாது தெரியுமா...?''

''நான் என்ன சொன்னேன் உனக்கு. நீ தினமும் தலை யில் பூ வைக்கணும் என்று சொன்னேன் இல்லையா...? எங்கே... பூ'' என்றான் மென்மையாக.

அவள் தலையில் கை வைத்துப் பார்த்துவிட்டு. காணவில்லை என்றாள் ஜாடையில்.

''ஏன் மாலதி இவளுக்கு வேற டிரஸ்சே கிடையாதா...? இது என்ன இப்படி தொள... தொளன்னு. நல்ல கரெக்டா.. டைட்டா என்ன அளவுன்னு சொல்லு. நான் வாங்கி வாறேன்'' என்றான்.

மாலதி கண்களில் கண்ணீர்.

''எதுக்கு மாலதி நீ இப்போ அழறே... இவள் என் மனைவி. எனக்குனு சில கடமைகள் இருக்கு தானே. அதில் இருந்து நான் விலக முடியுமா...? இவளை ஒரு குழந்தையாகத் தான் நான் பார்க்கிறேன்'' என்றான்.

கார்த்திக் வேலை பார்ப்பதற்கு மட்டும் சம்பளம் கேட் டான்.

அவன் மாமனார். ''மாப்பிள்ளை இது உங்கள் சொத்து. எல்லாமே உங்களுக்குத்தான். நீங்கள் பார்த்து எங் களுக்கு ஏதாவது செய்ங்க'' என்று தழுதழுத்தார்.

கார்த்திக் இதுக்கு ஒத்துக் கொள்ளவில்லை.

''இது உங்கள் உழைப்பு மாமா. இதில் குளிர் காய நான் விரும்பவில்லை. என் வேலைக்கு, உழைப்பிற்கு

என்ன சம்பளமோ அதைத் தாருங்கள். எனக்கு அது போதும். நீங்கள் என் குடும்பத்திற்கு எவ்வளவோ செய்திருக்கீங்க. அது போதும்.''

''மாப்பிள்ளை நீங்கள் செய்றதைவிடவா நான் உங்களுக்குச் செய்துவிட்டேன். உங்களுக்கு எவ்வளவு தேவையோ எடுத்துக் கொள்ளுங்கள்.''

''நீங்கள் கொடுத்தால் தவிர, நான் எடுக்க மாட்டேன் மாமா'' என்றான் பிடிவாதமாக.

''எனக்கும் குடும்பம் இருக்கு. என் மனைவி இருக்கா, எனக்கும் செலவு இருக்கும் இல்லே...'' என்றான் புன்னகையுடன்.

தினகரன் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. மாலதியும் கண் கலங்கினாள்.

அவர் கைகளில் எத்தனை கட்டுக்கள் எடுக்க முடியுமோ, அதை எடுத்து அப்படியே கொடுத்தார்.

அன்று சீக்கிரமாகவே ஆபீசில் இருந்து சென்று விட்டான்.

தினகரன் ஏதோ வேலையாக கார்த்திக்கைக் கூப்பிட்டார். அவன் சீட்டில் இல்லை. மாலதியிடம் விசாரித்தார்.

''அவர் எங்கு போனார் என்று தெரியவில்லை. ஆனால் இந்த பைலை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்'' என்று அவரிடம் கொடுத்தாள்.

''இதுக்காகத்தாம்மா நான் அவரைத் தேடினேன். எல்லாம் முடித்து விட்டுத்தான் அவர் போயிருக்கார். கிரேட்மா வேலையில் டிலே என்பதே கிடையாது. எத்தனை சுறுசுறுப்பு, வேகம். இப்படி ஒரு மாப்பிள்ளை கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.''



''நான் என்ன தவம் செய்தேனோ... என் மகளைப் பற்றி இனி எனக்குக் கவலையில்லம்மா... எனக்குப் பின் அவள் என்ன ஆவாளோ... என்று நினைத்து, நான் கலங்காத நாள் இல்லை.''

''சொத்துக்காக வந்து என் மகளை கொடுமைப்படுத்தினால், நான் என்ன செய்ய முடியும் சொல்லு. இவர் பணத்தின் மீது பற்று இல்லாமல் அல்லவா இருக்கார்.''

## 10



மாலதியும் ''ஆமாம் அப்பா'' என்று தலையாட்டி வைத்தாள். அவர் போன பின்னாடி இவள் இப்படி நினைத்தாள். அப்பா தன் மகளைப் பற்றித்தான் கவலைப் படுகிறாளே தவிர, அத்தானைப் பற்றிக் கொஞ்சங்கூடக் கவலைப்படலேயே.

கல்யாணம் ஆகியும் இன்னும் இப்படி இருக்கானே என்று அப்பாவுக்குத் தெரியாதா...? மகள் மீது பாசம் அதை மறக்கடித்து விட்டதா...?

அவனும் மனிதன் தானே. இத்தனை சின்ன வயதில் எந்த சுகத்தையும் அனுபவிக்காமல் எப்படி இருக்கான். இதை அப்பா நினைத்துப் பார்க்கவில்லை. பணம் இருந்தால் போதுமா...? பணம் மட்டுந்தான் வாழ்க்கையா...? இது அப்பாவுக்குத் தெரிய வேண்டாமா...?

கார்த்திக் எவ்வளவு கலகலப்பாகப் பேசினாலும், அவனிடம் ஒரு இறுக்கம் இருப்பதை உணர்ந்திருக்காள் மாலதி. அது என்ன...? ஏன்...?

மாதவி கூட மாலையில் தான். இரண்டு மணி நேரம் கழிக்கிறானே தவிர, இரவு அவன் தனியறையில் தான்.

பாவம் அவன் தான் என்ன செய்வான். இது அப்பா விற்குத் தெரிய வேண்டாமா...? இப்படித் தன் மகளுக் காக, அவனுடைய வாழ்க்கையைப் பழியிட்டு விட்டாளே.

எப்போதும் சனிக்கிழமை மதியத்திற்கு மேல், கார்த்திக் சீட்டில் இருக்க மாட்டான். இதை முதலில் சாதாரணமாக நினைத்த மாலதி வாரா... வாரம் இது தொடரவே திகைத் தாள். மாதத்தில் ஒரு சனிக்கிழமை திருச்சி சென்று விடுவான்.

ஒரு நாள் விளையாட்டாக மாலதி ''என்னத்தான் சனிக் கிழமை மதியம் ஆனால் எங்கு போய் விடுறீங்க. அப்படி யென்ன ஸ்பெஷல். மாதத்தில் ஒரு நாள் திருச்சி வேற போறீங்க. அன்று மட்டும் என்ன விசேஷம்'' என்றாள்.

''மால... தீ...'' என்று அதட்டி விட்டான்.

அவளே... ஒரு கணம் ஆடி விட்டாள். இவன் இத் தனை கோபப்படுவான் என்று நினைக்கவில்லை. நான் என்ன கேட்டு விட்டேன். இப்படிக் கோபப்படுகிறானே. அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் கண் மூடி நின் றான்.

மாலதி மெதுவாக ''சாரித்தான் நான் சாதாரணமாகத் தான் கேட்டேன். நீங்கள் இவ்வளவு சீரியசாக எடுத்துக் கொள்வீங்க என்று எனக்குத் தெரியாது'' என்றாள்.

''சாரி மாலதி. நான் தான் உன்னிடம் மன்னிப்பு கேட் கணும். ஏதோ... நினைப்பு. நீ கேட்டதும் சட்டுனு கோபம் வந்து விட்டது. வெரி சாரி'' என்றான்.

''பரவாயில்லை அத்தான். விடுங்க. உங்களுக்கு என் மேல் கோபப்பட உரிமையில்லையா...? எதற்கு இத்தனை சாரி. நான் தான் உங்க மூடைக் கெடுத்து விட்டேன்.''

அவனிடம் ஒரு வித இறுக்கம் இருந்தது.



ஒரு நாள் கார்த்திக் அறைக்கு மாலதி வந்தாள்.

''என்ன மாலதி. கூப்பிட்டால் நானே வந்திருப்பேனே.''

''ஏன்...? உங்கள் அறைக்கு நான் வரக்கூடாதா...?''

''என்ன மாலதி இப்படிக் கேட்டுட்டே. இது உன் வீடு. நான் வரவேண்டாம் என்று சொல்ல முடியுமா...?''

''ஏன் அத்தான் இப்படிப் பிரிச்சுப் பேசுறீங்க. உன் வீடு என் வீடு என்று. உங்களுக்கு இல்லாத உரிமையா.. இந்த வீட்டில், நீங்கள் இப்படிப் பேசுவது மனசுக்குக் கஷ்டமாக இருக்கு.''

''நான் அண்ணன், தம்பி கூடப் பிறக்காதவள். உங் களை என் மதிப்பிற்குரிய அண்ணனா நான் மதிக்கிறேன். உங்களின் பாசம், பண்பு, அன்பு, இதைக் கண்டு நான் பொறாமைகூட பட்டிருக்கிறேன். உங்க தங்கைகள் கொடுத்து வைத்தவங்கத்தான்.''

''.......''

''எவ்வளவு செய்றீங்க. எனக்குக் கூட டிரஸ், மேக்கப் செட் என்று வாங்கித் தந்தீர்களே... எனக்கு எவ்வளவு சந்தோசம் தெரியுமா...?''

அவன் புன்னகைத்தான்.

''எனக்கு இது மாதிரி யாரும் வாங்கித் தந்ததில்லை. அப்பா பணத்தைத் தருவார். தேவையானதை நாங்களே... வாங்கிக் கொள்வோம்.''

''அக்காவும் அப்படித்தான். நாங்கள் இரண்டு பேரும் எவ்வளவு சந்தோசமாக இருந்தோம் தெரியுமா...?''

அவன் புருவம் சுருக்கினான். இவள் என்ன சொல்றா. இவளுக்குப் பிறவியில் இருந்தே மனநிலை சரியில்லை என்று இவதானே சொன்னாள். இப்போ நாங்கள் அவ

வளவு சந்தோசமாக இருந்தோம் என்று சொல்கிறாளே... என்று நினைத்ததை வாய் விட்டே கேட்டு விட்டான்.

அப்போ தான் தெரிந்தது. தான் உளறியது.

''சாரி அத்தான். நான் அன்று சொன்னது பொய் தான். உங்களுக்கு ஓரளவு தெரியும் என்று நினைத்தேன். அப்பா இப்படி உங்களை ஏமாற்றுவார் என்று நினைக்க வில்லை.''

''............''

''அக்கா நல்லாத்தான் இருந்தாள். நன்றாகப் படிப்பாள். அவளுக்குச் சிரிக்காமல் பேசத் தெரியாது. அப்படிப்பட்ட அவளை நான்கு கயவர்கள்...'' எனும் போதே முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

கார்த்திக்கிற்கு எல்லாம் புரிந்தது.

''அழாதே மாலதி'' என்றான்.

அவள் கண்ணைத் துடைத்துக்கொண்டு, ''அதில் இருந்து தான் இப்படி ஆகிவிட்டாள். ரொம்ப மென்மை யானவள். அந்த அதிர்ச்சியை அவளால் தாங்க முடிய வில்லை.''

''............''

''இதைக் கேட்ட அம்மாவும் ஹார்ட் அட்டாக்கில் போய் விட்டார். நானும், அப்பாவும் தான். என்ன செய்ய முடியும். இவள் கத்தி ரொம்ப ஆர்ப்பாட்டம் செய்வாள். எங்களால் கட்டுப்படுத்தவே முடியாது.''

''............''

''பிறகு ஊசி போட்டு மாத்திரை கொடுத்து, தூங்க வைத்தோம். இவ்வளவு பெரிய விஷயத்தை அப்பா உங்களிடம் மறைதிருக்கிறார். நான் அன்று இதை உங்களிடம் எப்படிச் சொல்ல முடியும்.''



''............''

''இதனால் அக்கா மேல் கோபமா அத்தான். அவளுக்குத் தெரியாமல் நடந்த விபத்து. எப்படி இருந்தவள் தெரியுமா...? பாட்டு, டான்ஸ் என்று எந்நேரமும் ஏதாவது செய்து கொண்டுதான் இருப்பா. உங்களுடன் வாழ அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லை. நீங்களும் இப்படி இருக்கீங்க அத்தான்.''

''எனக்கென்ன நான் நல்லாத்தானே இருக்கேன்.''

''அத்தான் எனக்குப் புரியாத வயது ஒன்றும் கிடையாது. நீங்கள் எத்தனை சிரமப்படுறீங்க என்று எனக்குத் தெரியும்.''

அவன் பேச்சை மாற்றினான்.

''வா மாலதி. மாதவியைப் பார்க்கணும் போல் இருக்கு. பார்த்து விட்டு வரலாமா...?'' என்றான்.

''பேச்சை மாத்தறீங்கன்னு தெரியுது. உங்களுக்கு அதிர்ச்சியா இல்லையா அத்தான்...?''

''பின்னே இருக்காதா மாலதி. இந்த நிலமை எந்தப் பெண்ணுக்குமே வரக்கூடாது. ஒரு கணவனால் இதை ஜீரணிக்க முடியுமா...?''

## 11



''உன் அக்கா கூட நான் குடும்பம் நடத்தவில்லையென்றாலும், அவள் எனக்கு மனைவி தானே. அதனால் வெறுத்து ஒதுக்கி விடுவேன் என்று நீ நினைக்க வேண்டாம். வா போய் பார்க்கலாம்'' என்று அவள் அறைக்குள் நுழைந்தார்கள்.

மாதவி படுத்திருந்தாள்.

அவள் பக்கத்தில் போய் ''மாதவி'' என்று அழைத் தான். அவளைத் தூக்கி உட்கார வைத்து அவள் நெற்றி யில் மென்மையாக முத்தமிட்டான்.

அவளும் திருப்பி அவனுக்கு முத்தம் கொடுத்தாள்.

அவன் கண் கலங்கியது. அவள் நைட்டியின் ஜிப்பைப் போட்டு விட்டான்.

மாலதியிடம் திரும்பி, ''இத்தனை மாதத்தில் உன் அக்கா எனக்கு ஒரு முத்தம் இன்று தான் கொடுத்திருக்கா. இவளை ஒரு மனைவியாகவே என்னால் நினைக்க முடிய வில்லை. ஒரு குழந்தையாகத்தான் நினைக்கறேன்'' என்று எழுந்து சென்று விட்டான்.

மாலதி அப்படியே நின்றாள். அக்கா இத்தனை அருமை யான கணவன் கிடைத்தும், உனக்கு அனுபவிக்கக் கொடுத்து வைக்கலையே... நீ மட்டும் நல்லா இருந் திருந்தால்... இன்னேரம் உன்னைத் தரையில் கூட நடக்க விடமாட்டார் அத்தான்.

அவள் தலையை மடியில் எடுத்து வைத்து தடவிக் கொடுத்தாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. மாதவி அப்படியே கண்ணயர்ந்தாள். மாலதி தலையணையில் படுக்க வைத்து விட்டு வந்தாள்.

கார்த்திக் தங்கைகள் இரண்டு பேருக்கும். நல்ல வசதி யான இடத்தில் கல்யாணம் நடத்தி வைத்தான். அவன் அம்மா நினைத்தது போலவே சீறும் சிறப்புமாக வாழ்ந்தனர்.

வருடங்கள் உருண்டோடின.

மாதவிக்கு ஒரு வாரமாகவே நல்ல ஜுரம். ஹாஸ் பிட்டலில் இருந்தாள். கார்த்திக் அடிக்கடி போய் பார்த்து விட்டு வந்தான்.



டாக்டர்கள் நம்பிக்கையாக எதுவும் சொல்லவில்லை. இத்தனை வருடமாக அவள் சாப்பிட்ட மாத்திரையின் பவர். உடலைப் பாதித்து விட்டது. இனி எங்களால் ஒன்றும் முடியாது என்று கை விரித்தனர்.

ஒரு வாரமாக எந்த ஒரு அசைவும் இல்லை. அவ ளுக்கு பால் கூட இறங்கவில்லை. கார்த்திக் தவித்தான்.

மறுநாள் இரவு மாதவியின் உயிர் பிரிந்தது. கார்த்திக் கதறி விட்டான். மாதவியை மடியில் வைத்துக் கொண்டு. அவள் அப்பாவை சமாதானப் படுத்தவே முடியவில்லை. மாலதி என்ன செய்வாள். அவள் அக்கா போய் விட்டாள் என்று அழுவாளா...? இல்லை இவர்களைச் சமாதானப் படுத்துவாளா...?

ஒரு வழியாக எல்லாக் காரியமும் நடந்தது. கார்த்திக் ஒரு வாரமாக அறையை விட்டு வெளியே வரவில்லை.

மாலதி கதவைத் திறந்து உள்ளே போனாள். கட்டிலில் குப்புறப் படுத்திருந்தான்.

''அத்தான்'' என்றாள் மாலதி.

மெல்ல நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்கள் கலங்கி யிருந்தன. அவன் யாருக்காக அழுகிறான் என்றே தெரி யாமல் அழுதான். இத்தனை வருடத்தில் அவன் கண்ணீரை எந்தச் சூழ்நிலையிலும் வெளிப்படுத்த முடியவில்லை. இப்போ எல்லாவற்றிற்கும் சேர்த்து கண்ணீர் சிந்தினான்.

''என்ன மாலதி'' என்றான்.

''சாப்பிட வாங்கத்தான். இனி எத்தனை நாளைக்குத் தான் இப்படி இருக்க முடியும்'' என்றாள்.

''நீ போ மாலதி. நான் வர்றேன்'' என்றான்.

சாப்பிட்டு முடிந்ததும் மாமனாரிடம் ''மாமா உங்களிடம் நான் பேச வேண்டும்'' என்றான்.

சீதைக்கும் இப்போ அடிக்கடி முடியாமல் போனது. ஹாஸ்பிட்டல் பாதி நாள். வீடு பாதி நாள் என்று இருந் தாள். இப்போ வசதிக்கு உடம்பு பழகி விட்டது.

ஒரு நாள் இரவு படுத்தவள் காலையில் எழவே யில்லை. தூக்கத்திலேயே உயிர் பிரிந்து விட்டது. அதற் குள் தான் எத்தனை ஆசை மனிதருக்குள்.

கார்த்திக்குக்கு மனது கஷ்டமாக இருந்தது. தன் தாய் இறந்தது. என்னதான் இருந்தாலும் எப்படி வளர்த்தார் அவ்வளவு கஷ்டத்திலும் பசி தெரியாமல்.

எனக்காகத் தன் வாழ்க்கையே தியாகம் பண்ணி, தனக்கு ஆண் குழந்தை வேண்டாம். நீ மட்டும் போதும் என்று. அப்பா தான் அம்மாவை எவ்வளவு சந்தேகப்பட்டு பேசியிருக்கிறார்.

ஒரு பெண் எதை வேண்டுமானாலும் தாங்குவாள். நடத்தை கெட்டவள் என்ற அவப் பெயரை மட்டும் தாங்கவே மாட்டாள்.

ஆனால் எனக்காக அம்மா தாங்கியிருக்கிறார். எத்தனை உத்தமமான பெண். யாருக்கு வரும் இந்த மனது. அது வும் இந்தக் காலத்தில் தன் கணவன் தேவையில்லை. எனக்கு என் வளர்ப்பு மகன் தான் தேவை என்று இருந் திருக்கிறார்.

இத்தனை வருடம் தனியாகத் தான் சொந்தக் காலில், எந்த சொத்தும், சொந்த பந்தமும் இல்லாமல், சுயமாக சம்பாதிச்சு, இத்தனை தூரம் படிக்க வைத்து இன்று என்னை இத்தனை பெரிய மனிதனாக்கினார் என்றால்... இவர் வணங்குவதற்குரிய தெய்வமே... சந்தேகமில் லாமல்.



# 12



ஒரு பெண்ணுக்குக் கணவன் எத் தனை முக்கியம். கடைசி வரை அவன் தான் அவளுக்கு எல்லாம். பெத்த மகனைக் கூட நம்ப முடியாது இப்போ. கணவன் தான் எல்லாமே ஒரு பெண்ணுக்கு. அந் தக் கணவனே வேண்டாம் என்றால்... என் மேல் தான் எத்தனை பாசம், அன்பு, இது யாருக்கு வரும் இந்த மனது.

அவன் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.

அம்மா... நான் உங்கள் மடியில் வளர எத்தனை பாக் கியம் பண்ணியிருக்கேன். என்னைப் பெத்தவள் இருந் திருந்தால் கூட இப்படி என்னை வளர்த்திருப்பாளோ... என்னவோ.

எத்தனை ஒழுக்கமாக, இப்படித்தான் இருக்கணும். இப்படித்தான் செலவு செய்யணும், தேவையென்றால் தவிர, வேறு எதுவும் வாங்கக்கூடாது. அந்தப் பழக்கம் இன்று வாழ்க்கையில் எத்தனை உயர்வான இடத்துக்குப் போயும் நெறி தவறவில்லை.

அவன் நினைத்தால்... இன்று எப்படி வேண்டு மானாலும் வாழலாம். அவனை ஏன் என்று யாரும் கேட்க முடியாது.

மாதவி இப்படி இருக்கிறாள் என்று, வேறு பெண்ணை நாடி அவன் போயிருக்கலாம். அவன் மனதாரக்கூட அந்த மாதிரி நினைக்கவில்லை. அவன் தாய் வளர்த்த வளர்ப்பு.

அன்று சீதை அவனைப் பெத்தவளைத் தரக் குறை வாகப் பேசினாலும் உண்மை அதுதானே. என் தாய் யாரி டம் எப்படி ஏமாந்தாளோ... எதனால் உயிரை விட் டாளோ... அவன் மனம் துடித்தது.

சீதையைக் குறை சொல்ல முடியாது. ஏன்னா... இந்த சமுதாயத்தில் அவள் பட்ட வேதனை, துன்பங்கள் அப்படி. ஒரு கணவன் இல்லாமல் இளம் வயதில் தனியாக இருப்பதென்பது கொடுமையிலும் கொடுமை.

எத்தனை பேர் அவளைத் தவறான கண்ணோட் டத்தில் பார்த்திருப்பாங்க. எத்தனை அவலமான பேச்சு. அவமானம், இதையெல்லாம் யாருக்காகப் பொறுத்துக் கிட்டாங்க. எல்லாம் எனக்காகத்தானே.

அப்பா சொன்ன மாதிரி என்னைத் தூக்கி எறிந்திருந் தால்... அவர்கள் சந்தோசமான வாழ்க்கை வாழ்ந்திருக்க லாம். என் தங்கைகளுக்குத் தகப்பன் பாசம், அன்பு கிடைத்திருக்கும்.

அவர்களுக்கும் அந்த அன்பு கிடைக்கவில்லை. அப்பா சம்பாதிச்சிருப்பார். அம்மாவும் வேலைக்குப் போனாங்க. பிறகு என்ன கஷ்டம் குடும்பத்தில். ஆனால் அம்மா இந்த சந்தோஷத்தை மட்டும் நினைக்கவில்லை.

என்னோட எதிர்காலத்தை மட்டுமே நினைத்திருக் காங்க. என்னைக் கான்வென்டில் படிக்க வைத்துவிட்டு, தங்கைகளை தமிழ் மீடியத்தில் படிக்க வைத்தார்கள்.

பெறாத பிள்ளையிடம் தான் எத்தனை பாசம். நான் என்ன செய்து விட்டேன். அவர்களுக்கு. நான் விரும்பிய, மணந்த பெண்ணை மறந்தேன். அவன் உடம்பு கிடு கிடுவென நடுங்கியது.

இவர்கள் எனக்காக செய்த தியாகத்தைவிட, இது மிகச் சாதாரணம். ஆனால் நிவாதி. அவளுடைய வாழ்க்கை. என்னால் தானே... வீணானது.

இதை எந்தப் பெண்ணால் தாங்க முடியும். எனக்காக இந்தத் தாய் தன் வாழ்க்கை சந்தோசத்தை இழந்தாள். அவளும் எனக்காகத்தான் தன் வாழ்க்கையே இழந்தாள்.



இருவருக்கும் என்ன செய்தேன் நான். என்னால் பிரச் சனை தான். யாருக்கும் நிம்மதியில்லை.

இது எனக்கு முன்னாடியே தெரிந்திருந்தால்... நான் நிவாதி கழுத்தில் தாலி கட்டியிருக்க மாட்டேன். நான் தாலி கட்டிக் கூட்டி வரவில்லையென்றாலும் இந்தப் பிரச்சனை வெளியே வந்திருக்காது.

எனக்குத் தெரியாமலேயே கூட போயிருக்கும். முடிந்த வரை அம்மாவைச் சந்தோஷப்படுத்தினான். நகை, பணம், பட்டு என்று அந்த தாயின் மனதுதான் எத்தனை சந்தோஷப்பட்டது.

அவளின் பாசத்துக்கு முன் இதெல்லாம் சாதாரணம். அவர் எனக்கு செய்ததைவிடவா... நான் பெரிதாகச் செய்து விட்டேன். எத்தனை செய்தாலும், எத்தனை கோடி கொட்டிக் கொடுத்தாலும் அம்மாவின் சந்தோஷத்தைத் திருப்பிக் கொடுக்க முடியுமா...? என்னால்...

நான் இல்லையென்றால்... அழகான குடும்பம் இருந் திருக்கும். என்னை அனாதை விடுதியில் கூட சேர்த்திருக் கலாம். அப்பா நான் வேண்டுமா...? இல்லை இவன் வேண்டுமா...? என்று கேட்டபோது இவன் அம்மா... இவன் தான் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

என்மேல் அப்படியென்னம்மா... அன்பு. நான் யாரோ பெத்த குழந்தை தானே... நான் எந்த வழியில் வந் தேனோ... எனக்காகவே... எல்லாம்.

நீங்கள் சுயநலமாகச் சிந்தித்ததை நான் குறை சொல் லவே மாட்டேன். உங்களுக்கு, என் தங்கைகளுக்கு, நான் தானே பார்க்கணும். செய்யணும். ஆனால் நீங்கள் என்னை நம்பவில்லையேம்மா...

நான் நிவாதி கூட வாழ்ந்திருந்தால்... இத்தனை உயர்வான வாழ்க்கை உங்களுக்குக் கிடைத்திருக்காது.

தங்கைகளுக்கும்தான். ஆனால் எப்படியிருந்தாலும் நான் உங்களைக் கை விட மாட்டேன்மா... இதை நீங்கள் கடைசி வரை நம்பலேயே...

## 13



அம்மா உங்கள் சந்தோசத்திற்குப் பின்னால் என் வேதனை எவ்வளவு என்று தெரியவில்லையா...? அதில் தான் எத்தனை விரக்தி. என் மனமே பாலை வனம் ஆனதேம்மா... அதில் இனி புல், பூண்டு முளைக்குமா... முளைக்காதும்மா.

கார்த்திக் எத்தனையோ நாள் வேதனைப் பட்டிருப்பான். தங்கைகளுக்குக் கல்யாணமாகி குழந்தைகள் பிறந்தன. இவனுக்கும் அதில் சந்தோசம்தான்.

ஆனால் சீதை அவனைப் பற்றிக் கவலைப்பட வில்லை. தன் மகன் இப்படி இருக்கானே... இவனோட வாழ்க்கை என்னாவது என்று. இவனுக்குக் குழந்தை இருந்தால் எத்தனை வயதிருக்கும்.

தன் பேரக் குழந்தைகளை அப்படிக் கொஞ்சுவார்கள். இவனுக்கு மனதில் ஏக்கமாக இருக்கும். அவனும் மனிதன் தானே... தன்னுடைய உணர்வுகளை அடக்கிக் கொண்டு, எத்தனை காலத்திற்கு வாழ முடியும்.

அவனுக்கும் தன் குழந்தைகளைத் தூக்கிக் கொஞ்ச ஆசை. இருக்காதா...? காரில் போகும்போதும், வரும் போதும் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளை ஆவலோடும், ஏக்கத்தோடும் பார்ப்பான்.

ஸ்கூலைத் தாண்டும் போது வேகத்தைக் குறைத்து பார்வையை உள்ளே சுழள விடுவான். எத்தனை குழந்தைகள். எல்லாம் பூ மாதிரி, எத்தனை மென்மையாக எத்தனை அழகு இந்த குழந்தைகளிடம்.



எனக்கும் நிவாதிக்கும் குழந்தை பிறந்தால்... எத்தனை அழகாக இருக்கும். அவளின் நிறம், அழகும் கொண்ட ஒரு பெண் குழந்தை. அவனையறியாமல் ஏக்கப் பெரு மூச்சு வெளிவரும்.

நிவாதி நீ எங்கே இருக்கிறாய். என்ன செய்கிறாய். என்னை நினைத்துக் கொண்டு தான் இருக்கிறாயா...? இல்லை வேற வாழ்க்கை அமைத்துக் கொண்டாயா...?

சீதை இவனைப் பற்றிக் கவலைப்படவேயில்லை கடைசி வரை. தன் மகள்களுக்கு சீர் செய்யவும், நகை செய்யவும், பேரக் குழந்தைகளுக்கு டிரஸ் எடுக்கவுமாகத் தான் இருந்தாளே... ஒழிய இவன் இந்த வயதில் இப்படி இருக்கானே... என்று நினைக்கவில்லை.

இரவு படுத்தால்... அவனுக்குத் தூக்கமே வராது. தூக்கம் வரும்வரை நிவாதியின் போட்டோவைக் கையில் வைத்திருப்பான்.

எனக்காக என் உணர்வுகளை மதித்து, என் தாயின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் வீட்டை விட்டு வெளியேறினாளே... இதே வேறொரு பெண்ணாக இருந் திருந்தால்... தாலி கட்டிய எனக்குப் பதிலைச் சொல்லி விட்டுப் போ... என்று என் சட்டையைப் பிடித்திருப்பாள்.

அவள் எதுவும் பேசவில்லை. எப்படிக் கதறினாள். என்னைப் போக மாட்டும் சொல்லாதீங்க கார்த்திக் என்று. என் மனதை எப்படி கல்லாக்கினேன்.

அன்று என் அம்மா பேசிய பேச்சு, அத்தனை கொடுமை யானது. இப்போது நினைத்தாலும் நெஞ்சம் குலுங்கும்.

வார்த்தைகள் அக்னி பிரவாகமாய்... எப்படி வெளிப் பட்டன. இத்தனை கருணையே வடிவான தாய் எப்படி அன்று அப்படிப் பேசினாள்.

நிவாதியும் ஒரு பெண் தானே... எத்தனை கனவு களுடன் வந்திருப்பாள். தன் பெண்கள் வாழ்க்கைக்காக, பணத்துக்காகத்தானே... அம்மா இப்படிப் பண்ணி விட்டார்கள்.

நிவாதி அன்று கொடுத்த முத்தம் இறுக அணைத்த அணைப்பு, அந்த நிலையிலும் அவன் உடம்பில் புது இரத்தம் பாய்ந்தது.

அந்த முதல் முத்தம் எத்தனை தித்தித்தது. இன்னும் அதை நினைத்தால்... உடம்பு சிலிர்த்தது.

படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்தான். அவளின் நினைவு, அம்மாவின் இழப்பு அவனைத் தூங்க விடவில்லை.

நிவாதி என் கண்ணே... நான் தவிக்கும் தவிப்பு உனக்குப் புரிகிறதா...?

அவளுக்கு போன் போடலாமா...? என்று நினைப்பான். உடனே மனதை மாற்றிக் கொள்வான். இனியும் அவள் மனதை கெடுக்க வேண்டாம் என்று வைத்து விடுவான்.

சீதை இருக்கும்போது மகனிடம், உன் மாமனார் மாலதியைக் கல்யாணம் பண்ணிக்கொள் என்கிறாரே... நீ ஏன் பண்ணிக் கொள்ளக் கூடாது என்றாள்.

இவனுக்கு வந்ததே கோபம்.

''ஏம்மா... நீங்க புரிந்துதான் பேசுறீங்களா...? எனக்கு எத்தனை கல்யாணம்தான் பண்ணி வைப்பீங்க. அவளுக்கு தாலி கட்டினேன் அவள் பிரிந்து போய் விட்டாள். இவ ளுக்குத் தாலி கட்டினேன்... இவ ஒரேடியா போய்விட்டா... ஏன் மாலதி நல்லாயிருக்கிறது உங்களுக்குப் பிடிக்க வில்லையா...?

இல்லடா... நான் எதுக்குச் சொல்றேன்னா... இன்னொருத் தன் வந்தால்... சொத்தை இரண்டாகப் போடணும். நீயே



அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால், சொத்து வெளியே போகாது. அதான் சொன்னேன்.

உனக்கு நல்லதுக்குத்தான்டா... நான் சொல்றேன். இதே நீ நிவாதி கூட இருந்திருந்தால்... இத்தனை சொத்து, பணம், பங்களா... கார்... அந்தஸ்து என்று இருந்திருப் பாயா...? நான் சொன்னதுனாளே... தானே... உனக்கு நான் கெடுதல் பண்ணுவேனா...? என்றாள்.

அவன் கையெடுத்துக் கும்பிட்டு. அம்மா... நீங்கள் எனக்கு நன்மை செய்தவரை போதும். என் உயிர் உள்ள வரை, இதை நான் மறக்க மாட்டேன்.

நீங்க சொன்ன மாதிரி கார், பணம், அந்தஸ்து எல்லாம் இருக்கும்மா... ஆனால்... என் நிம்மதி, என் தூக்கம், சந் தோசம், இதையெல்லாம் இதனால் வாங்க முடியுமா...? என்றான்.

அவள் தலை குனிந்தாள்.

மாலதி யார்...? அவள் என் மனைவியின் தங்கையல் லவா...? அப்போ எனக்கும் அவ தங்கைதானே... ஏம்மா இது மாதிரியெல்லாம் புத்தி போகுது உங்களுக்கு. இவள் அக்கா எப்போ சாவா... இவள் கழுத்தில் எப்போ தாலி கட்டுவோம் என்று இருந்த மாதிரியல்லவா... இருக்கிறது.

இதில் என்ன தப்பிருக்குது. ஊர் உலகத்தில் நடக்கா ததா...?

ஊர் உலகத்தில் என்ன தான் நடக்கலே... அதுக்காக நானும் இப்படி நடக்கணுமா...? ஏம்மா எனக்குனு ஒரு மனசு இருக்கும்னு நீங்க நினைக்கலையா...? நீங்கள் சொல்பவள் கழுத்தில் எல்லாம் தாலி கட்டி குடும்பம் நடத்த முடியுமா...?

இது என்ன சாதாரண விஷயமா...? சொத்து போகக் கூடாது என்று, அவள் கழுத்தில் நான் தாலி கட்ட அவளுக்குனு ஒரு மனசுன்னு இருக்கு என்று நீங்கள் நினைக்கவில்லையா...?

அவள் தான் என்ன நினைப்பாள். இத்தனை நாள் இந்த எண்ணத்தோடுதான் என்னோடு பழகினாளா... என்று நினைக்க மாட்டாளா...?

சொத்து... சொத்து... இன்னும் போதலையாம்மா...? உங்களுக்கு. இன்னும் என்ன வேண்டும் என்று கேளுங்கள். நான் வாங்கித் தருகிறேன். அதற்காக என் மனதைத் தீயிட்டுக் கொளுத்தாதீர்கள்.

நான் சொத்து வேண்டும் என்று கேட்டால்... என் மாமனார் இப்பொழுதே... அத்தனையும் கொடுத்து விடுவார். மாலதியும் அப்படியே... அவங்களுக்குப் போய் துரோகம் செய்யச் சொல்றீங்களே...?

ஏம்மா... நான் நிவாதி கூட இருந்திருந்தால்.... இத்தனை ஆடம்பரமான வாழ்க்கை இல்லையென்றாலும், நானும் சம்பாதித்திருப்பேன். ஆனால் நாங்கள் எத்தனை சந்தோசமாக வாழ்ந்திருப்போம்.

பணத்தில் மட்டுந்தான் சந்தோசமா...? என் இளமையின் இனிமையான வாழ்க்கை. அதில் மொட்டு விட்ட ரோஜாக்கள்.

சிரிப்பு, மழலையின் குரல்... எத்தனை இழப்பும்மா... இதை நீங்க நினைத்துப் பார்க்கவில்லையா...?

நிவாதியுடன் குடிசையில் வாழ்ந்திருந்தாலும், எத்தனை சந்தோசமாக, நிம்மதியாக வாழ்ந்திருப்பேன். என்னால் அவளை மறக்க முடியுமாம்மா...?



மறக்கும் படியா... அன்று பேசினீங்க. அவள் எத்தனை துடித்திருப்பாள். அவளுக்கு ஆறுதல் சொல்லக்கூட எனக்கு அவகாசம் தரவில்லை.

நீங்கள் பேசியதும் வீட்டை விட்டுப் போனாளோ... அவளுக்கு எத்தனை மன வேதனையாக இருந்திருக்கும். அது உங்களுக்கும் தெரியுமே. அப்பா போனதும் நீங்கள். இப்படித்தானே துடித்திருப்பீங்க.

தாலி கட்டியவுடனேயே போய்விடு என்றால்... எந்த பெண்தான் தாங்குவாள். அவள் எப்படியம்மா வேற வாழ்க்கை அமைத்துக் கொள்வாள். வீட்டை விட்டு வேறு தெரியாமல் வந்து விட்டாள். வீட்டுக்குள் எப்படி விடுவாங்க அவளை.

நான் எனக்கு மட்டுமாகவா சொன்னேன். இன்று உன் தங்கைகள் எத்தனை சந்தோசமாக வாழ்கிறார்கள். இதுக்குத்தான் சொன்னேன்.

இப்படி சுயநலமாகப் பேசுபவளிடம் என்ன பேச முடியும். பேசாமல் எழுந்து போகத்தான் முடியும். எழுந்து போய்விட்டான்.

நினைவுச் சங்கிலிகள் அவனை பின்னிப் பிணைத்தன. அவனால் அதில் இருந்து வெளி வரமுடியவில்லை.

ஒரு தாய் எத்தனை வடிவமாக இருக்கிறாள்.

ஏன்...? இளம் வயதில் எந்த ஆசாபாசங்களுக்கும், எந்த சுகத்துக்கும் இடறாத மனது. இப்போ... அவளின் பண்பட்ட வயதில் ஏன்...?

அவள் வாழ்வில் அத்தனை கஷ்டத்தை சுமந்திருக்கிறாள். அவள் வாழ்வில் பலமான அடி. தனியாக இருந்து மூன்று குழந்தைகளையும் திறமையாக வளர்த்து, படிக்க வைத்து, இன்று சமுதாயத்தில் மூன்று பேரும் நல்ல

வேலையில் இருக்கிறார்கள் என்றால்... அதற்குப் பின்னணியில் அவள் பட்ட கஷ்டங்கள்.

வயது தளர்ந்து விடவும் வாழ்க்கையைப் பத்தின பயம். தன் மகள்களின் எதிர் காலத்தைப் பற்றின பயம். இனி நம்மாள் முடியுமா...? என்ற கேள்வி. இது அத்தனையும் அந்தத் தாயை அசைத்துப் பார்த்தது.

இப்போது கூட அவள் யாருக்காகப் பேசினாள். அன்று மகனுக்காக கணவனிடம் பேசினாள். இன்று மகள்களுக்காக மகனிடம் பேசுகிறாள். இதில் சுயநலம் எங்கே வருகிறது. இது அவன் சம்பந்தப்பட்ட விஷயம் தானே. அவன் வாழ்வும் நல்லா இருக்கட்டும் என்று தானே.

இவள் இப்படியெல்லாம் முடிவெடுக்க வாழ்க்கையில் எத்தனை அடிபட்டிருக்க வேண்டும். அதை தன் குழந்தைகளும் அனுபவிக்கக் கூடாது என்று தானே இந்த முடிவெடுத்தாள்.

கார்த்திக்கைப் பொறுத்தவரை இது நியாயம் இல்லையே... அவனின் மனதை, உணர்வுகளை, ஆசைகளைக் கொல்ல யாருக்குத்தான் உரிமையிருக்கு. அவனிடத்தில் இருந்து பார்த்தால்... அது தப்புத்தானே.

அந்தத் தாயின் இறுதிச் சடங்கை முறையாக நிறைவேற்றினான்.

அவன் கண்களின் கண்ணீர். அம்மா உங்களின் கடைசி ஆசையை நிறைவேற்றிவிட்டேன். தங்கைகளையும் நான் பார்த்துக் கொள்வேன் என்று மனதில் நினைத்தான்.

நிவாதி தான் எத்தனை கெஞ்சினாள். குழந்தை கூட நாங்கள் பெற்றுக் கொள்ளவில்லை என்றாளே... அவள் மனம் எத்தனை வலித்திருக்கும்.

நினைவுகள் அறுந்தன.



# 14

மாலதி கார்த்திக்கிடம், ''அத்தான் கம்பெனிக்கு இன்னொரு ஆள் தேவைப்படுது. முக்கியமான கணக்குகள் பார்க்க பேப்பரில் விளம்பரம் கொடுக்கலாமா...?'' என்றாள்.

''சரி மாலதி நீ செய். நான் அடுத்த வாரம் யு.எஸ். போக வேண்டியுள்ளது. நீயே செலக்ட் பண்ணு. உனக்கும் வசதியாக இருக்கும் பரத்தை பார்க்க'' என்றான்.

அவள் சட்டென நிமிர்ந்தாள்.

''அ...த்...தா...ன்...''

''எனக்கு எல்லாம் தெரியும் மாலதி. இதில் ஒன்றும் தப்பில்லையே... ஆனால் இருவரும் கல்யாணம் செய்து கொள்ளும் முடிவுடன் லவ் பண்ணுங்க'' என்றான்.

''சரிங்கத்தான். நீங்க போய்வர எத்தனை நாள் ஆகும்.''

''ஒரு பதினைந்து நாள் திட்டமிட்டுருக்கேன். சீக்கிரம் முடிந்தால் உடனே வந்து விடுவேன்'' என்றான்.

மாலதி பேப்பரில் விளம்பரம் கொடுத்திருந்தாள். அதைப் பார்த்து நிவாதி அப்ளை பண்ணினாள்.

அவளை வரச் சொல்லி கார்டு வந்தது. இவளும் போனாள். நிறையப் பேர் வந்திருந்தனர்.

இவள் ஒரு மணி நேரம் காத்திருந்தாள். இவள் முறை வந்ததும், இவள் எழுந்து உள்ளே போனாள். தன் வயதை யொத்த பெண் இருப்பதைப் பார்த்துக் கண்களை விரித்தாள்.

மாலதி அவள் சர்ட்டிபிகேட் எல்லாம் பார்த்தாள். திருச்சி என்று இருந்தது.

''நீங்கள் திருச்சியா...?'' என்றாள்.

''ஆமாம். ஆனால் இப்போ சென்னையில் தான் இருக்கிறோம்'' என்றாள்.

''சரி உங்களுக்கு கார்டு வரும். வாங்க'' என்று அனுப்பி வைத்தாள்.

அடுத்த வாரத்திலேயே கார்டு அனுப்பி, வந்து ஜாயின் பண்ணிக்கச் சொன்னாள் மாலதி.

நிவாதியும் ஜாயின் பண்ணி வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தாள்.

மாலதி நிவாதியிடம் நல்ல பிரண்டாகப் பழகினாள். நிவாதிக்கும் பிடித்திருந்தது.

மாலதி ''நிவாதி நாளை என் அத்தான் வந்து விடுவார்'' என்றாள். அவள் பேச்சில் பாதி அவள் அத்தானை பற்றியதாகத் தான் இருக்கும்.

''அதான் முகத்தில் இவ்வளவு சந்தோசமா...?'' கேலி பண்ணினாள்.

மறுநாள் காலை நிவாதியை வந்து கூட்டிப் போனாள். மாலதி, ''வா நிவாதி. என் அத்தானிடம் உன்னை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்'' என்று.

கதவைத் திறந்து இருவரும் உள்ளே போயினர்.

''அத்தான்'' என்றாள் மாலதி.

''வா மாலதி'' என்று நிமிர்ந்தவன். நிவாதியைப் பார்த்து சட்டென சீட்டில் இருந்து எழுந்து விட்டான்.

அவனையறியாமல் ''நிகீ...'' என்றது வாய்.

நிவாதியும் அதிர்ந்து விட்டாள். இவள் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. இவன் இங்கு இருப்பான் என்று தடுமாறியவளை சட்டெனப் பிடித்தாள் மாலதி.



''என்ன நிவாதி ஏன் இந்த தடுமாற்றம். என்ன செய்யுது. வா வந்து உட்கார்'' என்று உட்கார வைத்தாள்.

அவன் டேபிள் மீது இருந்த தண்ணீரை எடுத்துக் கொடுத்தாள்.

அதை வாங்கி ஒரே மடக்கில் குடித்துவிட்டு, கீழே வைத்தாள்.

மாலதி இருவரையும் நோட்டம் விட்டாள். 'இருவரும் ஏற்கனவே அறிமுகம் ஆனவர்கள் போல் இருக்கே. ஆனால் காட்டிக் கொள்ளாமல் சமாளிக்கிறார்கள். என்ன நடக்குது என்று பார்ப்போம்.'

கார்த்திக் அதற்குள் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

மாலதி அவனிடம் ''அத்தான் இந்த பெண் நிவாதிதான், நம் ஆபீசில் சேர்ந்திருக்கும் புதிய பெண். உங்களுக்கு பிடித்திருக்கா...'' என்றாள்.

கார்த்திக் லேசாகச் சிரித்தான்.

''ஆபீசுக்குத்தானே சேர்த்திருக்கே. என்னவோ பெண் பார்த்துவிட்டு வந்து பிடித்திருக்கா என்று கேட்பது போல் கேட்கிறே'' என்றான்.

''எப்படியோ வேலை ஒழுங்கா நடந்தா சரி'' என்றாள்.

அவன் இப்படி இலகுவாகப் பேசி மாலதி கேட்டதில்லை. வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

கார்த்திக் முகத்தில் தான் எத்தனை பரவசம். ஆயிரம் கோடி, நட்சத்திரங்கள் ஒரே நிமிடத்தில் ஒளிர்ந்தது போல் பிரகாசித்தன. இது மாதிரி அவன் முகம் பிரகாசித்து அவள் பார்த்ததில்லை. எப்போதும் இழையோடிய சோகம் இருப்பது போல் தெரியும்.

நிவாதியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். அவளின் நிலையைக் கேட்கவே வேண்டாம்.

அவனால் உட்கார முடியாமல், முள்ளின் மேல் இருப்பது போல் தவித்தான்.

கார்த்திக் போன் பண்ணி ''இரண்டு மாதுளை ஜூஸ். ஒரு ஆப்பிள்'' என்றான்.

''நா... வர்...றே..ன் கா..ர்.. சார்'' என்று எழுந்தாள் நிவாதி.

''இரு நிது. ஜூஸ் சொல்லியிருக்கேன். குடித்து விட்டுப் போ...'' என்றான்.

ஜூஸ் வந்ததும். ஆப்பிள் ஜூஸை எடுத்து மாலதியிடம் கொடுத்து விட்டு, மாதுளை ஜூசை எடுத்து நிவாதியிடம் நீட்டினான்.

அவள் கை நடுங்க வாங்கிக் கொண்டாள்.

''ஏன் இப்படிக் கையெல்லாம் நடுங்குது நிவாதி. என் அத்தானைப் பார்த்து அத்தனை பயமா'' என்றாள் மாலதி.

''இல்லை... எ..ன..க்குத் தலையை வலிக்குது... அதா...ன்'' என்று உளறிக் கொட்டிக் கிளம்பினாள்.

நிவாதியைப் பார்த்த கார்த்திக்குக்கு இருப்புக் கொள்ளவில்லை. இவள் எப்படி திடீரென்று இங்கு வந்தாள். இத்தனை வருடம் இந்த சென்னையில் தான் இருந்தாளா...?

அவனுக்குத் தூக்கம் வரவில்லை. புரண்டு படுத்தான். எனக்கு ஏன் இன்று இத்தனை அவஸ்தையாக இருக்குது.

## 15



உடம்பில் ஒவ்வொரு அணுவும் அவளுக்காகத் துடித்தது. அவளைப் பார்த்ததில் இருந்து, அவனின் தாபம் அதிகமாக இருந்தது. அவன் உணர்ச்சிகளுக்குத் தடைபோட முடியவில்லை.

அவள் வீட்டுக்குப் போகலாமா...? அட்ரஸ்.



மறுநாள் சாலையில் போனதும் நிவாதியைக் கூப்பிட்டான். அவளும் உடனே வந்தாள்.

அவன் அவளை முழுதாக அளவெடுத்தான். அவன் கண்கள் சிவந்து கோவைப்பழம் போல் இருந்தது.

''என்ன சார், கூப்பிட்டு விட்டுப் பேசாமல் இருக்கீங்க'' என்றாள்.

''ஆங்... ஆமா... கூப்பிட்டேன்ல... வா... வந்து உட்கார்'' என்றான்.

அவனின் தடுமாற்றத்தை அவள் புரிந்து கொண்டாள்.

'ஏன் இப்படித் தடுமாறுகிறான். இதை மாலதி கவனித்தால் என்ன ஆவது. இது தெரிய வேண்டாமா...? கார்த்திக்கு.

இவன் அப்படிப்பட்டவன் இல்லையே... என்னைப் பார்த்ததும் தடுமாறுகிறானே... உடனுக்குடன் மனதை மாற்றுகிறவன் இல்லையே... பிறகு ஏன்...?'

''நிவாதி உனக்கு என்னைப் பார்த்ததும் பழைய நினைவுகள் எதுவும் வரலையா...?'' என்றான்.

அவள் திடுக்குற்றாள். என்ன இவன் இப்படிக் கேட்கிறான். இரவெல்லாம் நான் தூங்காமல் அழுதது எனக்குத்தானே தெரியும். நானும் ஒரு சாதாரணப் பெண் தானே. என் உணர்ச்சிகளை மறைக்க நான் எத்தனை கஷ்டப்பட வேண்டியிருக்குது.

இவன் என்னதான் எனக்கு தாலி கட்டினாலும். இப்போது இவன் மாலதியுடைய கணவன். இப்போ எந்த உரிமையில் இப்படிப் பேசுகிறான்.

என்னால் இவர்களுக்குள் பிரச்சனை வரக்கூடாது. மாலதி எத்தனை நல்லவள். அவளுக்குப் போய் நான் துரோகம் செய்யலாமா...?

''என்ன நான் கேட்டதற்கு பதிலே வரவில்லை'' என்றான்.

அவள் ''இல்லை'' என்றாள்.

''பொய். இதை நான் நம்பமாட்டேன். என் மேல் உனக்குக் கோபம் இருக்கும்தான். இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக ஏன் இப்படி பொய் சொல்லுகிறாய்.''

''நான் உண்மையைத்தான் சொல்கிறேன்.''

''அடிப்பாவி. எது உண்மை. நேற்று இரவு என்னால் கொஞ்சங்கூடத் தூங்க முடியவில்லை. உன் நினைப்புத் தான். எப்போ விடியும். உன்னைப் பார்ப்போம் என்று ஓடி வந்தேன். நீ என்னடா... என்றால், என் நினைப்பு வர வில்லை என்கிறே... உனக்கு என்...னா...ச்சு'' என்றான்.

இவளுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரிய வில்லை. இவன் இப்படி வெளிப்படையாகப் பேசுவான் என்று எதிர்பார்க்கவில்லை.

இவன் இன்று இருக்கும் அந்தஸ்து, உயர்ந்த இடம். இவனுக்கும் குடும்பம் இருக்கு. இது மாதிரிப் பேசலாமா...? என்று தெரிய வேண்டாம் என்று நினைத்ததை வாய் விட்டே கேட்டு விட்டாள்.

அவன் எழுந்து பக்கத்தில் வந்தான்.

''என்ன நிவாதி பேசுறே... நான் எவ்வளவு பெரிய அந் தஸ்த்தில் இருந்தாலும் உன்னை நான் மறக்கவில்லை.''

''நீங்கள் என்னிடம் இப்படிப் பேசுவது முறையா...? மாலதி என்ன நினைப்பாங்க.''

''இதில் அவள் நினைக்க என்ன இருக்கு.''

அவனைப் புரியாமல் பார்த்தாள். இது கார்த்திக்கின் சுபாவமில்லையே... ஒரு வேளை, பணம் அந்தஸ்து



வந்துவிடவும், இவனுக்கும் இது சாதாரண விஷயமாகப் போய்விட்டதா...? இதில் அவ நினைக்க என்ன இருக்கு என்கிறானே... ஏன்?

பணம் வந்து விட்டதால் இவன் எப்படி வேணா வாழலாம் என்று நினைத்து விட்டானா...?

அவன் தவிப்போடு அவளை நெருங்கிச் சட்டென அணைத்தான்.

அவள் அதிர்ச்சியானாள். இவள் இந்தச் செய்கையை எதிர்பார்க்கவில்லை. அதுவும் ஆபீசில் எந்த நேரத்தில் யார் வேணாலும் வரலாம். இவன் எந்த தைரியத்தில் இவன் என்னிடம் இப்படி நடந்து கொள்கிறான்.

அவன் கை அவள் மேனியில் ஊர்ந்தது. அவள் இதழில் அழுந்த முத்தமிட்டான். அது கொதித்தது.

அவள் சுய உணர்வு பெற்றாள். சட்டென அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

''கார்த்திக் என்ன இது. உங்களுக்கே இது அசிங்கமா யில்லை. என்னிடம் இப்படி நடக்க. அதுவும் ஆபீசில் உங் களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்று நினைவிருக் கட்டும்'' என்றாள் கடுமையாக.

அவன் திகைத்தான்.

'ஏன் இவள் இப்படிச் சீறுகிறாள். இவளுக்காக நான் தவித்த தவிப்பென்ன. இப்படித் தள்ளி விடுகிறாளே... இது ஆபீஸ் என்பதாலா...?'

''சரி நிவாதி நாம் இன்று வெளியே போய்ட்டு வர லாமா...?''

''நான் வரவில்லை'' என்றாள், முகத்தில் அடித்தது போல...

''ஏன்...?''

''ஏன் என்ற காரணத்தை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை'' என்றாள் பட்டென்று.

அவனுக்குக் கோபம் வந்தது. இவள் தனக்குக் கல்யாணம் ஆகி விட்டதால்தான் தன்னை இப்படி வெறுக்கிறாள் என்று நினைத்தான்.

''எனக்குக் கல்யாணம் ஆகியிருந்தால் என்ன நிவாதி அன்றும், இன்றும் எப்பவும் நீ தான் என் மனதில்.''

''இப்படிச் சொல்ல உங்களுக்கு வெட்கமாயில்லை. எதுக்கு இப்படி கட்டின மனைவிக்குத் துரோகம் செய்றீங்க'' என்றாள்.

அவள் முகத்தைப் பார்த்தான். அது ஆத்திரத்தில் சிவந்து தகதகத்தது. இவளிடம் இப்போது எது சொன்னாலும் புரிந்து கொள்ளப் போவதில்லை.

''சரி நீ போகலாம்'' என்றான்.

நிவாதி கதவைத் திறந்து பட்டென சாத்திவிட்டுப் போனாள். அவளின் கோபம் அதில் தெரிந்தது.

கார்த்திக் யோசனையாகப் புருவத்தை உயாத்தினான். 'எதற்கு இந்தக் கோபப்படுகிறாள். நான் இவளைச் சந்திச்சதும் எத்தனை சந்தோசப்பட்டேன்.

இவள் ஏன் இப்படிக் கொதிக்கிறாள். இவளை விட்டு, விட்டு வேறு கல்யாணம் பண்ணி, இத்தனை வசதியாக, இவ்வளவு பெரிய கம்பெனிக்கு சொந்தக்காரனாக இருந்தால், அவளுக்குக் கோபம் வரத்தானே செய்யும்.

தன்னை விட்டு விட்டு இவன் சந்தோசமாகத்தான் இருக்கிறான் என்று நினைப்பாள் போல.

எந்தப் பெண்ணுமே அப்படித்தானே நினைப்பாள். அன்று எனக்காகப் போய்விட்டாலும் இன்று வேறு



பெண்ணை மண முடித்து இப்படி இருப்பது, அவளுக்கு உறுத்தலாகத்தானே இருக்கும்.

ஒரு பெண் கணவனை விட்டுக் கொடுத்து, அடுத்தவளுடன் வாழ்வதை யார்தான் தாங்கிக் கொள்வாள்.

நிவாதி நான் அந்த மாதிரியில்லை. என்னைப் புரிந்து கொள். உனக்காக... என் உயிர் துடிப்பதை நீ அறியவில்லையா...?'.

அவன் மனம் கசந்தது. இப்படி வெறுப்பை உமிழ்கிறாளே... என்று.

எத்தனை புன்னகை ததும்ப எப்படிப் பேசுவாள். எத்தனை மென்மை நளினம். அவள் அதிர்ந்து பேச மாட்டாள். இன்று சரவெடியாக வெடிக்கிறாளே...

நிவாதியால் வேலை பார்க்க முடியவில்லை. லீவு சொல்லிவிட்டு நேராக பீச்சுக்குச் சென்றாள். வீட்டிற்கு சென்றால் அம்மா ஏன்...? என்ன...? என்று கேள்வி கேட்பார்.

பீச்சில் ஒதுக்குப் புறமாக அமர்ந்தாள். கூட்டம் இல்லை. அவள் மனம் குமுறிக் கொண்டு வந்தது.

'கார்த்திக் நீங்களா...? இப்படி இவளுக்குத்தான் தாலி கட்டி விட்டோமே... நாம் எப்படி வேணா நடந்து கொள்ளலாம் என்று நினைத்து விட்டீர்களா...?

இப்போ உங்க அம்மா கேட்க மாட்டாங்களா...? பணம் இருப்பதால் இரண்டு பேருடனும் குடும்பம் நடத்தலாம் என்று நினைத்தீர்களா...? ஏன்...? எனக்குக் கேட்க ஆள் இல்லைன்னு தானே அப்படி நடந்து கொள்றீங்க.

இதை அன்றே நீங்கள் செய்திருக்கலாமே...? ஏன் செய்யவில்லை. உங்ககூட சேர்ந்து சிலுவை சுமக்கக் கூட நான் தயாரா இருந்தேனே...

அன்று பேச முடியவில்லையே... உங்களால். உங்க அம்மா பேச்சைக் கேட்டு, என்னைப் போகச் சொல்லி விட்டீங்களே... உங்களை நான் குறை சொல்லவில்லை.

உங்க சூழ்நிலை அப்படி. நீங்க என்னை மனமார காதலித்துத்தான் கல்யாணம் பண்ணிக் கொண்டீங்க.

அது முடிந்து போன கதை. இப்போ ஏன் என்னிடம் இப்படி நடந்துக்கிறீங்க. நாம் தொட்டால்... இவள் குழைந்து விடுவாள் என்ற எண்ணம் தானே...

இன்னும் மறக்கவில்லை என்கிறானே... என்னை மறக்காமல் தான் அவளுடன் குடும்பம் நடத்துறானா...? இது என்ன அபத்தமான பேச்சு. இப்படிச் சொல்ல லாமா...? அவன்.

ஒருத்திக்காவது உண்மையாக இருக்க வேண் டாமா...?'

அவன் முத்தமிட்ட இதழை தொட்டுப் பார்த்தாள். எத்தனை கொதிப்பான அழுத்தமான முத்தம். அவள் உடம்பு தகித்தது.

அவன் அணைத்த உடல் தாபத்தால் தவித்தது. இனியும் அவன் தன்னை தொட்டால் தாங்க முடியாது என்று நினைத்தாள்.

கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. இந்த கடல் வற்றினாலும் இந்த கண்ணீர் வற்றாது போல் இருக்கு.

இத்தனை வருடம் அவனை நினைத்து, நினைத்து கண்ணீர் விட்டு ஓய்ந்து போனாள்.

எத்தனை கண்ணியமாக இருந்தவன், இன்று இப்படி நடக்கிறானே... இவள் எப்படியும் வளைவாள் என்ற நினைப்பா...?



# 16

கார்த்திக் யோசனையாக அவள் பைலை எடுத்துப் புரட்டினான். அதில் அவள் அட்ரஸ். செல் நம்பர் இருந்தது. மணமானவள் என்றும் குறிப்பிடப்பட்டு இருந்தது.

ம..ண..மா..ன..வள். எ..தை... கு..றி..ப்பி ட்டிருக்கா...? அன்று என் னுடன் நடந்ததையா...? இல்லை இப்போ இவள்... வேறொருவருடன்... திரு... நினைக்கவே நெஞ்சம் நடுங்கியது அவனுக்கு.

கண்களை இறுக மூடிக் கொண்டான்.

இருக்குமா...? அது மாதிரி. அன்று நானே இதைச் சொன்னவன் தானே. உனக்கொரு வாழ்வை அமைத்துக் கொள் என்று இன்று அவளைப் பார்க்கவும் என் மனம் தடுமாறுகிறதே...

இருக்காது இவன் அது மாதிரி கல்யாணம் பண்ணி யிருக்க மாட்டாள். இவள் அந்த மாதிரிப் பெண் இல்லை.

அவன் குழப்பமானான். தலையை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டான்.

மாலதி உள்ளே வந்தாள்.

''அத்தான்.''

இவன் குனிந்த தலை நிமிரவில்லை.

''அத்தா...ன்'' என்றாள் அழுத்தமாக.

''எ..ன்..ன மாலதி.''

''என்னத்தான் ஒரு மாதிரி இருக்கீங்க. என்ன செய்யுது. உடம்புக்கு'' என்றாள் கவலையாக.

''ஒன்றுமில்லை. லேசான தலைவலிதான்'' என்றான்.

மாலதியின் மனதில் 'இப்போதான் நிவாதி வந்து தலைவலி அதனால் எனக்கு லீவு வேண்டும் என்று கேட்டுக் கொண்டு போனாள். இப்போ... இவனுக்கும்... தலைவலி...

இரண்டு பேருக்கும் என்ன பிரச்சனை.'

அவள் யோசனையாக அவன் முகத்தையே பார்த்தாள்.

''என்ன மாலதி அப்படிப் பார்க்கிறே... நான் உண் மையைத்தான் சொல்கிறேனா... என்றா...?''

''நீங்க எதுக்குத்தான் பொய் சொல்லப் போறீங்க. வீட்டிற்குப் போய் ரெஸ்ட் எடுக்கலாமே... நான் இன்று பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள்.

மாலதி யோசனை செய்தாள். 'இவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்று சொன்னாளே... ஏன் அத்தானைப் பார்த்துத் தடுமாற வேண்டும். இருவரும் திருச்சிதானே... அங்கு ஏதாவது பழக்கமாக இருக்குமா...? இருவரும் தெரிந்த மாதிரியும் காட்டிக் கொள்ளவில்லை. தெரியாது போலவும் இல்லை. இவர்களுக்குள் சாதாரணப் பழக்கம் என்றால், எப்படி இருக்கே, என்ற விசாரிப்பும் எனக்கு இவங்களை முன்னமே தெரியும் மாலதி என்றும் சொல்லி யிருக்கலாமே... ஏன் சொல்லவில்லை.

அன்றில் இருந்து நிவாதியின் முகத்தைக் கவனித்தாள். அவள் முகமே சரியில்லை. அத்தானிடம் கேட்டுப் பார்க்கலாமா... சொல்வதென்றால் அவனே இன்னேரம் சொல்லியிருப்பானே... என்று நினைத்தாள்.

நிவாதியும் ரொம்பக் குழம்பிப் போனாள். மாலதியைத் தான் இவன் கல்யாணம் பண்ணிக் கொண்டானா...? எத்தனை அருமையான பெண். அவள் மனதை இத் தனை வருடம் கட்டுப்படுத்தி வைத்திருந்தாள்.



இப்போது அது முடியவில்லை. தன் அருகிலேயே கண வன் இருக்கும்போது, எந்தப் பெண் தான் நிம்மதியாக இருப்பாள்.

ஒரு நாள் பேக்டரிக்கு மாலதி, நிவாதி, கார்த்திக் மூவரும் சென்றனர். ஒரு மிஷின் ரிப்பேர். அடிக்கடி இப்படி ஆனது. அதைப் பார்க்க அதன் மேல் கை வைத்தான். அது அப்போது தான் நின்றது. அதனால் சூடாக இருந்ததால் அவன் கை கொப்பளித்து விட்டது.

கார்த்திக் கையை உதறிக் கொண்டான்.

அதைப் பார்த்த நிவாதி ''கார்த்திக்'' என்று கத்திவிட்டு, அவன் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு ''இப்படிக் கொப்பளித்து விட்டதே'' என்று அழுது விட்டாள்.

''ஒன்றுமில்லை நிது. லேசான எரிச்சல்தான். இதுக் குப் போய் இப்படித் துடிக்கிறியே...'' என்றான் மெதுவாக.

இதை தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தாள் மாலதி.

இப்ப எல்லாம் சனிக்கிழமை மதியத்துக்கு மேல் கார்த்திக் எங்கும் செல்வதில்லை. அந்த மாதத்தில் ஒரு நாளும் லீவு எடுத்துக் கொண்டு திருச்சிக்குப் போவ தில்லை. இதைக் கூட மாலதி கவனித்தாள்.

ஒரு நாள் நிவாதியிடம் கார்த்திக் ''நான் உன்னிடம் பேச வேண்டும் நிது. நீ இப்போ கீழே போய் என் காருகிட்டே இரு. இதோ நான் வந்துவிடுகிறேன்'' என்றான்.

இவளுக்குத் தயக்கமாக இருந்தது. 'என்ன இருந்தாலும் இவன் கல்யாணமானவன். மாலதி தான் என்ன நினைப் பாள். ஏற்கனவே அவள் ஒரு மாதிரியாகப் பார்ப்பது போல் இருக்குது. இப்போது தனியாக சந்திக்கலாமா..?' இப்படி மனம் நினைத்தாலும், உடனே வாய் ''சரி'' என்றது.

இருவரும் காரில் ஏறிச் செல்வதை மாலதி ஜன்னல் வழியாகப் பார்த்தாள்.

கார் பீச் ரோட்டில் வழுக்கிச் சென்றது. ஆள் அரவமில்லாத இடத்தில் காரை நிறுத்திவிட்டு இறங்கி அவள்புறம் சென்று கதவை திறந்துவிட்டான்.

இருவரும் மணலில் அமர்ந்தனர்.

அவளையே விழி மூடாமல் பார்த்தான்.

''என்ன கார்த்திக் அப்படிப் பார்க்கிறீங்க'' என்றாள்.

''எப்படி இருக்கே நிது...'' என்றான் ஆழ்ந்த குரலில்.

அவள் பேசாமல் இருப்பதைப் பார்த்துவிட்டு, ''என்ன இவன் இத்தனை நாள் பார்த்துவிட்டு, எதுவும் பேசாமல் இன்று இப்படி கேட்கிறானே... என்று என் மேல் கோபமா..?'' என்றான்.

''அப்படியில்லை கார்த்திக். உங்கள் நிலைமை எனக்குத் தெரியாதா..? தெரிந்தும் நான் உங்க மீது கோபப்படுவேனா...?'' என்றாள்.

''நீங்க எப்படி இருக்கீங்க கார்த்திக்'' என்றாள் கண் கலங்க.

''ஏதோ இருக்கேன் நிது.''

''உன் அம்மா, அப்பா, தங்கை எல்லோரும் நல்லாயிருக்காங்களா..?''

''என் அப்பா இறந்துவிட்டார். தங்கைக்கு கல்யாணம் ஆகிவிட்டது. இப்போ நானும் அம்மாவும் தான்.''

''எங்கே இருக்கே நிது.''

''ஆழ்வார்பேட்டையில் இருக்கேன்.''

''நி..து.. நீ.. வே...ற க..ல்..யா..ணம் பண்ணிக் கொண்டாயா..?'' என்றான் தவிப்போடு.



அவனை நிமிர்ந்து பார்த்தாள். ''ஒரு பெண் எத்தனை தரம் கல்யாணம் பண்ணிக் கொள்வாள் கார்த்திக்.''

அவள் பதில் அவனைச் சாட்டையால் அடித்தது போல் இருந்தது. அவள் கழுத்தில் அவன் போட்ட தாலிச் செயின். மனது சற்று நிம்மதியானது.

''அப்புறம் ஏன் தயங்குறே நிது. என் கூடச் சேர்ந்து வாழ'' என்றான்.

நிவாதி ஒரு முடிவோடுதான் வந்திருந்தாள். இன்று இவனிடம் தெளிவாகப் பேசி புரிய வைத்து விட வேண்டும் என்று. ஆனால் அவளுக்கு வந்த கோபத்தில் விருட்டென எழுந்து சென்றுவிட்டாள்.

பஸ்சில் உட்கார்ந்து, கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

அன்றும் அப்படித்தான். வெளி வேலையாக காரில் போகும் போது, இடக் கையை அவள் தொடையில் வைத்தான்.

அவள் சட்டென தட்டி விட்டாள்.

''கையை எடுங்கள்''. என்றாள் ஆத்திரமாக.

''நீ இப்படி கல்மனசுக்காரியா இருப்பேனு நான் நினைக்கலே. எப்படி உன்னால் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியுது.''

''அடுத்தவ புருசனைப் பார்த்து உணர்ச்சிவசப்பட்டா... அதுக்குப் பேர் வேறு'' என்றாள் காட்டமாக.

அவளைக் கோபமாக முறைத்தான்.

''நான் அடுத்தவள் புருசன் தான். ஆனால் உனக்கும் புருசன் தானே... இல்லை என்று சொல் பார்க்கலாம். நான் அன்று என் அம்மா பேச்சில் உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன். அதான் உன்னைப் போகச் சொல்லிவிட்டேன்.

அதன் பிறகு எத்தனை நாள் நான் வருத்தப்பட்டிருப் பேன் தெரியுமா..?''

நான் தெரிந்து என்ன பண்ணப்போறேன். முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''இப்போ உங்கம்மா அவ கூட சந்தோசம வாழ விடறாங்களா...?'' என்றாள் ஏளனமாக.

''விடுவாங்க. ஏன் என்றால் பணம் இருக்குல்லே. தின மும் நீங்க அவகிட்ட போகும் போது, உங்கம்மாக்கிட்டே உங்க மனைவி பணம் கொடுப்பாளா...?''

காரை சடக்கென நிறுத்தி அவளைத் திரும்பிப் பார்த் தான்.

''வார்த்தையை அளந்து பேசு நிவாதி. இந்த மாதிரி வார்த்தையை உன் வாயில் இருந்து எதிர்பார்க்கலே...''

''அதுவும் என் அம்மாவை நீ குறை சொல்வது எனக்குப் பிடிக்கவில்லை.''

''அப்புறம் எதுக்கு என்னிடம் சில்மிஷம் பண்ணுறீங்க. நீங்க பேசாமல் இருந்தால் நான் ஏன் பேசப் போகிறேன்.''

அவன் கண்கள் கோவைப்பழம் போல் சிவந்தன.

''இந்த மாதிரி அம்மாவையே தூக்கி வைத்து ஆடுறீங்க. இதே நல்ல அம்மாவா இருந்து என்னை ஏத்துக்கிட்டாங் கன்னா... உங்களை கையில பிடிக்க முடியாது.''

விட்டான் ஒரு அறை.

இதை அவளே எதிர்பார்க்கவில்லை. அடித்த கன்னத்தை கையால் தடவி விட்டாள். அவள் கண் கலங்கிவிட்டது.

சட்டென அவளை இழுத்து அணைத்தான். அவளும் அவன் தோளில் முகம் புதைத்து அழுதாள்.

அவன் அவளை வருடிவிட்டான். அவள் முகத்தை நிமிர்த்தி நெற்றியில் முத்தமிட்டான்.



அவள் சட்டென விலகினாள்.

அதற்குள் என்ன வந்துவிட்டது நிமிடத்திலேயே... இப்படி மனசை மாத்துறே...

அவளுக்கு கோபம் வந்தது.

''நானா நிமிடத்துக்கு நிமிடம் மனசை மாத்துறேன். நீங்கள் செய்ததையெல்லாம் என்னைச் சொல்றீங்களா...?''

''நான் அன்று செய்ததைத் தானே சொல்லிக் காட்டுறே... என் சூழ்நிலையை நீ அன்று கூட இருந்து பார்த்தாய் தானே... நான் வேறு என்ன செய்ய முடியும். அந்த நிலையில்.''

''என் அம்மாவை குறை சொல்றே... நீ இப்படி இருக் கும் போதே. என் வீட்டில் இருந்திருந்தால்... அவ்வளவு தான் போலிருக்குது. என் அம்மா சொன்னதுதான் நடந்திருக்கும்.''

''நல்ல அம்மாவா இருந்திருந்தால்... என்கிறே... ஏன் என் அம்மா மாதிரி இந்த உலகத்தில் நீ காட்டு பார்க்கி றேன். நான் இந்த மாதிரி பண்ணினால் எந்த தாய்க்குத் தான் கோபம் வராது.''

''ஏன் நீ வீட்டை விட்டு வந்தியே... உன் வீட்டில் உன்னை ஒன்றும் சொல்லவில்லையா..? உன்னை பெத்தவங்கதானே.. அதனால் நம் பிள்ளை தப்புப் பண்ணி யிருக்காள் பேசாமல் இருப்போம் என்றா இருந்தார்கள். திட்டியிருப்பார்கள் தானே.

''காதலிக்கும் போது எப்படி ஒன்னுந்தெரியாத மாதிரி இருந்தே. இப்போ பார் என்ன பேச்சுப் பேசுறே... இதைத் தான் என் அம்மா அன்றே சொன்னார்கள். அவள் உன்னை மயக்கிவிட்டாள்'' என்று வேகமாகப் பேசினான்.

அவன் நினைக்கவில்லை. தன் பேச்சு அவளை எத்தனை தூரம் பாதிக்கும் என்று. கோபத்தில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் பேசினான்.

அவன் உணர்ச்சிகளுக்கு ஒரு வடிகால் தேவைதானே. அதற்குள் அவள் உடன்படவில்லை. அந்த வேகத்தை இப்போ பேச்சில் காட்டினான்.

''இப்போது தெரிந்ததே உன் புத்தி. நான், என் குடும்பம் தப்பித்தது. உன்னை நம்பி என் தங்கைகளுக்கு கல்யாணம் செய்ய முடியுமா..? உன் பேச்சை நான் நம்பியிருந்தால்.. நான் அவ்வளவு தான். முகம் சிவக்க கடுமையாக பேசினான்.''

அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அவள் பொறுமையிழந்தாள்.

''துரோகி. நீ நல்லாயிருப்பியா...? என்னைக் காதலிக்கிறேன், கல்யாணம் பண்ணிக்கிறேன் என்று, என்னை இந்த நிலைமையில் விட்டு விட்டு, நீ வேறு கல்யாணம் பண்ணிக் கொண்டு, சந்தோசமாக இருப்பதில்லாமல், என்னையே திட்டுறீங்களா..?'' என்று அவன் சட்டையை இரு கைகளாலும் பிடித்து உலுக்கினாள்.

''என்னை, என் நிலைமையை ஒரு நிமிடாவது நினைத்துப் பார்த்திருந்தீங்கன்னா... இப்படிப் பேசமாட்டீங்க. இப்போ நீங்க உங்க குடும்பம் நல்லா இருக்கவும் பேசுறீங்க. பணம் வந்தவுடன் எல்லாம் மாறிப்போச்சு.

''இத்தனை வருடமா உங்கம்மாவைப் பத்தி உங்களுக்குத் தெரியாதா..? எல்லாம் தெரிந்து தானே.. என் வாழ்க்கையை வீணாக்குனீங்க.

''உங்கம்மா மட்டும் உயர்ந்தவங்க. அப்ப நான், நீங்க, உங்க குடும்பம் நல்லாயிருக்கணும் என்று போனேனே... அதெல்லாம் உங்க கண்ணுக்குத் தெரியவில்லையா..?



''உங்கம்மா செய்தது மட்டுந்தான் தெரியுதா..? இதனால் பாதிக்கப்பட்டவள் நான் மட்டுந்தானே... உங்களுக்கு என்ன நஷ்டம்.''

''உங்கம்மா பேச்சைக் கேட்ட மாதிரியும் ஆச்சு. நீங்க பணக்காரனா ஆன மாதிரியும் ஆச்சு. சந்தோசத்துக்கும், சுகத்துக்கும் மனைவி. உங்களுக்கு என்ன குறைச்சல்.

''நான் எத்தனை நாள் இரவு தூங்காமல் துடிச்சிருப்பேன். அப்போ எல்லாம் உங்க மனைவி கூட நீங்க கொஞ்சிக்கிட்டுத்தானே இருந்திருப்பீங்க.

''அதை நினைக்கும் போதெல்லாம் என் மனம் எத்தனை தவிக்கும். ஒரே வார்த்தையில் போ...'' என்று சொல்லி விட்டீங்களே...

''இப்போ தான் என் புத்தி தெரிந்ததா..? நான் வந்தால் உங்க குடும்பம் சீரழிந்துவிடுமா..?''

''நானா உங்களை மயக்கினேன். அப்போ நீங்க என்னைக் காதலிக்கவில்லையா...?''

''ஐயோ...'' என்று முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள்.

''நிகி... நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. நான் சொன்னதை நீ தப்பாகப் புரிந்து கொண்டாய.' என்ன சொல்ல வர்றேன்னா...''

''நீங்க எதுவும் சொல்ல வேண்டாம். உங்களைப் பற்றிப் புரிந்து கொண்டேன். என் மீது இவ்வளவு நல்ல அபிப்பிராயம் வைத்ததுக்கு ரொம்ப நன்றி'' என்று, கார் கதவை திறந்து கொண்டு இறங்கினாள்.

''ப்ளீஸ் நிவாதி. இறங்காதே. நா..ன் உன்னைத் தப்பாக நினைக்கவில்லை'' என்றான்.

அவள் இறங்கி விருட்டென்று சென்றுவிட்டாள்.

அவன் சிலை போல் அப்படியே அமர்ந்திருந்தான்.

எப்படி அழுகிறாள். என்னைத் துரோகி என்கிறாள்.

எனக்குப் பொருத்தமான பெயர் தான். நான் பேசியது அவளை இத்தனை தூரம் பாதித்துவிட்டது.

நானும் இத்தனை தூரம் பேசியிருக்கக் கூடாது. இப்படி கோப்பபட்டுவிட்டேனே..

மறுநாளில் இருந்து அவன் பேசினாலும், அவள் பேசுவதில்லை. வீட்டை விட்டு வந்தவள் என்று சொல்லாமல் சொல்லிவிட்டான். இனி இவனுடன் என்ன பேச்சு.

அவன் பேசியது, அவள் மனதை இன்னும் உறுத்திற்று. பணம் வரவும் எத்தனை மாறிவிட்டான். அந்த அன்பு, மென்மையான அணுகுமுறை, இப்போ எத்தனை கடுமையாகப் பேசுகிறான்.

இப்போது எத்தனை இறுக்கமான அணைப்பு. அழுத்தமான முத்தம். மனைவி வீட்டில் இருக்கும் போது ஏன் என்னிடம் இப்படி நடக்கிறான்.

மாலதிக்கு என்ன குறைச்சல். நல்ல அழகு, படிப்பு, கம்பெனியை பொறுப்பேற்று நடத்தும் திறமை. இதை விட இவனுக்கு வேறு என்ன வேண்டும்.

இப்போ இவனைத் தட்டிக் கேட்க யாராலும் முடியாது என்ற தைரியமா...?

இல்லை. இப்போ இவன் சொல்வதையெல்லாம் கேட்போம் என்ற நினைப்பா..?

கார்த்திக் உள்ளுக்குள் குமுறிக் கொண்டு இருந்தான்.

இவளுக்கு இப்போ திமிரு ரொம்ப அதிகமாகிவிட்டது. நான் என்னமோ இவளை வேணும்னே... கழட்டிவிட்ட



மாதிரி. அதான் என்னை மதிக்காமப் பேசுறா... நான் இவளையே நினைத்துக் கொண்டிருக்க... இவ என்ன பேச்சுப் பேசுறா..?

இருக்கட்டும் இவளை வைச்சுக்கிறேன் கறுவினான்.

ஒரு நாள் நிவிதா வீட்டுக்கு நிறைய பூ, பழம், ஸ்வீட், சேலை என்று வாங்கிக் கொண்டு போனான்.

நிவிதா அம்மா, அவள் தங்கை வீட்டுக்கு சென்றிருந்தாள்.

நிவிதா மட்டும் வீட்டில். ஞாயிறு ஆதலால் மெல்ல எழுந்து குளித்துவிட்டு, மெலிதான ஒரு நைட்டியை போட்டுக் கொண்டு இருந்தாள்.

காலிங்பெல் அடிக்கவும், யாரு நம் வீட்டிற்கு வருவது என்று யோசனையோடு சென்று கதவைத் திறந்தாள்.

வாசலில் கார்த்திக் நிற்கவும், நிவிதா திகைத்தாள். 'இவன் எப்படி நம் வீட்டிற்கு. நம் அட்ரஸ். இது பெரிய விசயமில்லை. நம் பயோடெட்டாவில் பார்த்திருப்பான்.'

அவள் மலைத்து நிற்கவும்.

''என்ன நிவிதா. என்னைப் பார்த்து இப்படி பிரமிச்சு நிக்கிறே. வந்தவனை வா...'' என்று கூடக் கூப்பிடவில்லை என்றான் கேலியாக.

அப்பொழுது தான் சுயநினைவு வந்தது அவளுக்கு. ''வா..ங்...க.. கா...ர்..த்.... சா..ர்'' என்றாள் தடுமாற்றமாக.

''என்ன இது. கார்த்... சார். என் பெயர் மறந்து விட்டதா... இல்லை இது ஆபீசா...''என்றான் கடுப்பாக.

''என்ன இருந்தாலும் நீங்க என் முதலாளி இல்லையா...? மரியாதைக் குறைவா பேர் சொல்லிக் கூப்பிடலாமா...? கை நீட்டி சம்பளம் வாங்கும் வேலைக்காரிதானே நான்'' என்றாள் குத்தலாக.

அவன் முகத்தைச் சுளித்தான்.

''நீ ஏன் வேலைக்காரி என்று நினைக்கிறே. என் வீட்டுக்காரி என்று நினைத்துக் கொள். எல்லாம் சரியாகி விடும்.''

''இந்தா நிவிதா..'' என்று கையில் வைத்திருந்த பார்சலை அவளிடம் கொடுத்தான்.

அவள் வாங்கத் தயங்கினாள். இவ்வளவு வாங்கி வந்திருக்கானே... என்று.

## 17

''ஏன் நிவிதா இந்த தயக்கம். நான் வாங்கி கொடுக்கக் கூடாதா..?'' என்றான் கெஞ்சும் குரலில்.

''இல்லை. அதெல்லாம் ஒன்றுமில்லை. எதுக்கு இவ்வளவு என்று யோசித்தேன்.''

''நிவிதா ஒரு காலத்தில் உனக்கு எவ்வளவு செய்யணும் என்று நான் கனவு கண்டேன் என்று உனக்குத் தெரியும். அப்போ அதை நிறைவேற்ற என்னால் முடியவில்லை. இப்போ என்னால் முடியும் நிவிதா. அதான் வாங்கி வந்தேன்.''

''இப்போ எந்த உரிமையில் வாங்கி வந்தீங்க..?''

''நிவா...தீ...'' அவன் அதிர்ந்தான்.

''என்ன பேசுறே... நீ. புரிந்து தான் பேசுறியா..? எனக்கு உன்னிடம் உரிமையில்லையா...?''

''என்ன உரிமையிருக்கு. தாலி கட்டியது தவிர. எனக்குச் சோறு போட்டீங்களா..? இல்லை துணிமணி எடுத்துக் கொடுத்தீங்களா..? என் கஷ்டத்தில் பங்கு கொண்டீங்களா..? எதை வைத்து உரிமையிருக்கு என்கிறீங்க.'' ஆணித்தரமாகக் கேட்டாள்.



''நான் எதுவும் செய்யாதவன்தான். ஆனால் அதை இப்போ செய்கிறேன்'' என்றான்.

பதில் பேச வாய் எடுத்தாள்...

''உன் கூட சண்டை போட வரவில்லை நிவாதி நான்'' என்றான்.

அவளும் தன் தவறை உணர்ந்தாள். தன் அம்மா இல்லாத நேரத்தில் இவன் வீட்டிற்கு வந்திருக்கானே... என்ற பயம் தான் அவளை அப்படிப் பேசச் சொன்னது.

''சாரி சார்.''

அவன் கண்கள் அவளை துளைத்தன.

தலையை குனிந்து கொண்டாள்.

பின் மெல்ல, ''என்ன சார் இவ்வளவு தூரம். மாலதி மேடத்தையும் கூட்டி வந்திருக்கலாமே...'' என்றாள்.

அவன் பட்டென்று அவள் எதுக்கு நமக்கு நடுவில் என்றான்.

அவள் அதிர்ச்சியுற்றாள்.

பின் சமாதானமாக. ''ஏன் நிகி உன்னைப் பார்க்க நான் வரக்கூடாதா..?'' என்றான் ஏக்கமாக.

அவள் என்ன பதில் சொல்வாள் இதற்கு.

சேலையை எடுத்து பிரித்துக்காட்டி, ''உனக்கு பிடிக்குதா நிவாதி'' என்றான்.

அவள் பார்வையை புடவையில் ஓடவிட்டாள்.

நல்ல மெரூன் கலர் புடவை. எல்லோ கலர் பார்டர். முந்தியில் சரிகை. கற்கள் பதித்திருந்தன. பார்க்கவே அத்தனை அழகாக இருந்தது.

இவள் கலருக்கு கட்டினால், அத்தனை எடுப்பாக இருக்கும்.

தலையை ஆட்டினாள் 'பிடிச்சிருக்கு' என்றாள்.

''ஏன் வாய் திறந்து சொல்லக் கூடாதா..?''

''சா..ர்.. இ..து மால..தி..க்கு தெரிந்தால் என்னாகும் என்று தெரியுமா?''

''என்ன ஆனாலும் ஆகட்டும். எனக்கு அதைப் பத்தி கவலையில்லை.''

''உங்களுக்கு கவலையில்லாமல் இருக்கலாம். ஆனா.. எனக்கு இருக்கே. என் அம்மா இது ஏது என்று கேட்டாள். நான் என்ன பதில் சொல்ல முடியும்.''

''நான் தான் வாங்கினேன் என்று சொல்லு'' என்றான்.

''பொய் சொல்ல சொல்றீங்களா..? அதை இவ்வளவு விலை கொடுத்து சேலை வாங்க முடியுமா..?'' என்னாள். இதை எப்படி என் அம்மா நம்புவாங்க.

''ஏற்கனவே என் மீது எங்கம்மாவுக்கு சந்தேகம். இதைச் சொன்னால் நம்புவார்களா..?''

''ஏன் இவ்வளவு கஷ்டப்படுறே.. நிவிதா. நான் பணம் தருகிறேன் உனக்கு. வேற வீடு பார்க்கட்டுமா..?'' என்றான்.

''இதற்கு பேர் என்ன சார்..?''

''நி..வா..தீ..'' வார்த்தையை அளந்து பேசு.

''ஏன் கத்துறீங்க. நீங்க தாலி கட்டியது, இப்போ எனக்கும் உங்களுக்கும் தான் தெரியும். வேறு யாருக்கும் தெரியாது. அப்படி இருக்கும் போது. நீங்கள் எனக்குச் செய்தால், ஊர், உலகம் என்ன பேசும்?''



''நமக்குத் தெரியுமில்லே. அது போதும். ஊர் உலகத்தைப் பற்றி நீ ஏன் கவலைப்படுறே...?''

''நாம் இந்த சமுதாயத்துலேதானே வாழ்கிறோம். பயந்து தானே ஆகணும். நீங்கள் வந்து விட்டு இதோ போய் விடுவீங்க. இங்கு சுற்றிலும் இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள். என்னைத் தவறாக நினைக்கமாட்டார்களா...?''

''என்னை ஒரு முறை அப்படி நினைத்தது போதாதா..? இன்னும் நான் அசிங்கப்படணுமா..?''

''ஏன் நிவாதி இப்படியெல்லாம் பேசுறே. நான் இப்படியெல்லாம் நினைக்கவேயில்லை.''

''வேற எப்படி என்னை நினைக்கிறீங்க...?''

''நீ எனக்கு மட்டுந்தான் சொந்தம் என்று.''

''ஏன் நான் வேறொருவருக்கு சொந்தமாகக் கூடாதா..?''

அவன் அதிர்ந்தான்.

''எ..ன்...ன சொ..ல்.றே.. நி.. வாதி.''

.............

''ப்ளீஸ் நிவாதி. என்னை நோகடிக்க வேண்டும் என்பதற்காக எதை வேண்டுமானாலும் பேசாதே...''

''அம்மா இல்லையா நிவாதி.''

''இல்லை. ஊருக்கு போயிருக்காங்க.''

''நீ மட்டுந்தான் தனியா இருக்கியா...? உனக்கு பயமா இல்லையா..? இரவு எப்படி தனியாப் படுப்பே'' என்றான்.

''ஏன்..? இத்தனை வருட இரவு நான் யாரோட படுத்திருந்தேன். தனியாகத்தானே... உங்களுக்கு வேண்டு

மானாலும் பயமாக இருக்கலாம் தனியாகப் படுக்க'' என்று கேலி பேசினாள்.

''நான் சாதாரணமாக ஒரு கேள்வி கேட்டேன். அதற்கு இப்படி ஒரு பதிலை நான் எதிர்பார்க்கவில்லை.'' இத்தனை ஆழமாக சிரித்தான்.

''வீட்டுக்கு வந்தவனுக்கு ஒரு டம்ளர் தண்ணி கொடுக்கக் கூடாதா...? நிவாதி.''

உள்ளே போய் தண்ணி கொண்டு வந்து கொடுத்தாள்.

பார்வையை சுழலவிட்டான். உள்ளே ஓர் அறை. முன் இந்த ஹால். ஒரு கிச்சன். அவ்வளவு தான்.

''நிவாதி எனக்கு மதிய சாப்பாடு இங்குதான். உனக்கு சமைக்கத் தெரியுமா..?''

அவளுக்குத் திக்கென்றது. 'என்ன இவன் இப்போ போக மாட்டானா.. மதிய சாப்பாடு என்கிறானே... என்ன செய்வது இப்போ.'

''என்ன நிவாதி ஒரு நேரச் சாப்பாடு போட இவ்வளவு தயங்குறே... நான் கேட்டும்.''

''சரி. சமைக்கிறேன்'' என்று அடுப்படிக்குள் போனாள்.

சிறிது நேரத்தில் இவனும் அவள் பின்னாடியே போனான். வாங்கி வந்திருந்த மல்லிகைப் பூ கையில்.

அதை பின்னால் நின்று அவள் கூந்தலில் வைத்துவிட்டான்.

அவள் அப்படியே அமையாமல் நின்றாள்.

அவளைப் பிடித்து தன் புறம் திருப்பினான்.

''நிவாதி இந்தப் பூவைப் பார்த்தும், உனக்கு பழைய நினைவு வரவில்லையா...?''



''நான் உன்னை சந்திக்க வரும் போதெல்லாம் இந்தப் பூ மட்டுந்தான் வாங்கி வருவேன் இல்லையா...?'' நிவாதி.

''நீ எதையும் மறக்க மாட்டே என்று எனக்குத் தெரியும்.''

''எங்கு மல்லிகைப் பூவை பார்த்தாலும், அதில் உன் முகம் தான் எனக்குத் தெரியும் நிவாதி.''

அவள் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. அப்படியே அவளை இறுக அணைத்தான். பின் விட்டு, விட்டு, முதலில் நீ சமை'' என்று வெளியே வந்து, உள்ளே இருந்த அவள் படுக்கையில் படுத்தான்.

சிறிது நேரத்திலேயே... தூங்கிப் போனான்.

அவனுக்கு பிடிக்கும் என்று பார்த்துப் பார்த்துச் சமைத்தாள். சமைத்து முடித்துவிட்டு, என்ன சத்தத்தையே காணோம் என்று உள்ளே எட்டிப் பார்த்தாள்.

அவன் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் முகத்தையே உற்றுப் பார்த்தாள். பார்த்தவள் கண கலங்கியது.

''ஏன் கார்த்திக் என் உணர்ச்சியோடு விளையாடுறீங்க. என்னால் தாங்க முடியவில்லை. எங்கே என்னை இழந்து விடுவேனோ... என்று எனக்குப் பயமாக இருக்கு. என் மீதே எனக்கு நம்பிக்கையில்லை.

உங்களைப் பார்த்த முதல் வினாடியில் இருந்து, என் இதயம் துடிப்பது எனக்குத்தான் தெரியும்.

இத்தனை வருடம் என் கண்ணில் படாமல் இருந்தீங்களே... அது போல இன்னும் இருந்திருக்கக் கூடாதா..? நான் ஏன் உங்க ஆபீசுக்கே வரணும். மீண்டும் உங்களை ஏன் நான் சந்திக்கணும். இது தான் விதி என்பதா..?

எதற்காக இந்த கண்ணாமூச்சி விளையாட்டு?

அவன் விழித்து அவள் முகத்தையே பார்த்துக் கொண் டிருந்தான்.

அவள் கையைப் பிடித்திழுத்து தன் மேல் போட்டான். இதை நிவாதி சற்றும் எதிர் பார்க்கவில்லை.

அவன் தழுவலும், அணைப்பும், முத்தமும், அவளை சொர்க்கத்துக்கே அழைத்துச் சென்றன.

''நி..கி.. என் கண்ணே... செல்..லமே... உன்னை விட்டு என்னால் இருக்க முடியலைடா... இரவெல்லாம் தூக்கம் வர மாட்டேங்குது...'' என்று குமுறினான்.

அவன் கைகள் எல்லை மீறின.

அவள் சுய உணர்வு பெற்றாள்.

''விடுங்க கார்த்திக் என்னை.'' அவனிடம் இருந்து விடு பட முயன்றாள்.

அவன் விடவில்லை. அவனின் வேகமும், வெறியும், அவளுக்கு பயத்தைக் கொடுத்தது.

அவளுக்கு மூச்சுத் திணறியது. அவனிடம் இருந்து விடுபட முடியவில்லை.

''கார்த்திக் விடுங்க. ஏன் என்னை இப்படிச் சித்திரவதை செய்றீங்க. இதை எனக்கு தாலி கட்டிய அன்றே செய் திருந்தீங்கன்னா.. நீங்க சுத்தமான ஆண்பிள்ளை.

''உங்க அம்மாவுக்குப் பயந்து, முந்தானையில் ஒழிந்த நீங்க ஒரு கோழை. இப்போ உங்க வீரத்தை என்னிடம் காட்டுறீங்களா..?'' என்றாள்.

அவன் பிடி தளர்ந்தது.



அந்த நேரத்தில் துள்ளி எழுந்தாள்.

அவளை ஓங்கி அறைவிட்டான்.

''என்னடி சொன்னே.. நான் முந்தானையில் ஒழிந்து கொண்டுதான் இருந்தேன். இத்தனை வருடமா.. உன் னையே நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தேன் பாரு. நீ இது மட்டுமா..? பேசுவே. இதுக்கு மேலேயும் பேசுவே..'' என்று அவளை பிடித்திழுத்தான்.

''எனக்கு நீ இப்பவே வேண்டும் வா...'' என்று அடித் தான். அவனும் நிதானமிழந்தான்.

''விடுங்க கார்த்திக் என்னை. எனக்கு உடம்பிலும் தெம் பில்லை. மனதிலும் தெம்பில்லை. என்னைக் கொன்று விடுங்கள். என்னால் இந்தக் கொடுமையைத் தாங்க முடியவில்லை.''

முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

''என்னை இது மாதிரி பண்ணிவிட்டு, குழந்தை எதுவும் வந்துவிட்டால் நான் என்ன செய்வேன். அப்போ உங்கம்மா எதுவும் சொல்வாங்க என்று என் குழந்தையை யும் நடுத்தெருவில் விட்டுவிடுவீங்களே... நான் நடுத் தெருவில் நிற்பது போதாதா..? என் குழந்தையுமா..?

''உங்களுக்கு நான் என்ன கெடுதல் செய்தேன். உங்களை நினைச்ச பாவத்துக்கு இன்னும் சிலுவை சுமக் கிறேன். என்னை விட்டு விடுங்க.''

அவன் சிலை போல் நின்றான்.

''எதுக்கு நான் உன்னை கொல்றேன். வா... நாம இரண்டு பேருமே செத்துவிடலாம்'' என்று, அவள் கையைப் பிடித்து தர... தரவென்று இழுத்தான்.

''குழந்தையோடு நான் உன்னை விட்டுவிடுவேனா... ஏன் நிவாதி இப்படிப் பேசுறே.. பேசியே என்னைக் கொல்லாதே.

இப்பப் படுத்து தூங்கினேனே... இந்த இரண்டு மணி நேரந்தான். இத்தனை வருடத்தில் நான் தூங்கியது.''

# 18

''நீங்க ஒருத்திக்காவது உண்மையா இருங்க கார்த்திக். என்னை விட்டுவிடுங்க நான் எங்காவது போய் விடுகிறேன்.''

''எங்கேடி போவே... இப்படியே ஊர் ஊரா.. சுத்துவியா..? சொல்லுவியா..? இது மாதிரி இனி. என்னை மிரட்டுறியா..?'' என்று அறைந்தான்.

அறைந்த கையை அப்படியே பிடித்துக் கொண்டாள். ''கார்த்திக் என்னை அடிக்காதீங்க. வலி தாங்க முடியவில்லை'' என்று அழுதாள்.

அவளை அப்படியே தன் வயிற்றோடு அணைத்துக் கொண்டான்.

''என்னைத் தொடாதீங்க. அவளைத் தொட்ட கையால். அந்த தகுதி உங்களுக்கில்லை. என்னால் அது மாதிரி வாழ முடியாது.''

கண்களை இறுக மூடி உதட்டை கடித்தான். தன்னை கட்டுப்படுத்திக் கொண்டான்.

அவளை அப்படியே பிடித்து தள்ளிவிட்டு. வெளியே சென்றுவிட்டான்.

கீழே விழுந்தவள் அப்படியே அழுதாள். கார்த்திக் உங்க மனசு நோகும்படி நேர்ந்துவிட்டதே.



காரை வேகமாக ஓட்டினான். கார் எங்கு செல்கிறதென்று தெரியாமல் அதன் போக்கில் போனது.

அவன் நெஞ்சு கொதித்தது. என்ன மாதிரி கேள்வி கேட்கிறாள்.

''யாருக்கும் தெரியாமல் இங்கு வர்றீங்களே... என்னை வச்சுருக்கீங்களா...? இதை தைரியமா வீட்டில் சொல்லி விட்டு வர வேண்டியது தானே...

நான் சொல்கிறேன் என்று தானே சொல்கிறேன். என்னை எங்கே பேச விடுகிறாள். திடீர்னு நான் போய் சொல்ல முடியுமா..? மனைவி இறந்ததும் மறுமணத்தைப் பற்றி. இதை என்னைப் பேசவே விட மாட்டேன் என் கிறாளே... இவளுக்கு எப்படிப் புரிய வைப்பது.'

அவனையறியாமல் கார் அவன் வீட்டின் முன் வந்து நின்றது. மணி பார்த்தான். பத்து. மதியத்தில் இருந்து இந்நேரம் வரை இவன் இப்படி சுற்றியிருக்கிறான்.

முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டான். தலையை கோதி விட்டுக் கொண்டான்.

இறங்கி வீட்டினுள் போனான். மாலதி எதிர் கொண்டாள். அவன் முகத்தைப் பார்த்து அதிர்ந்தாள்.

''என்னத்தான் இப்படி முகமெல்லாம் அழுத மாதிரி வீங்கியிருக்குது. எனி பிராப்ளம்.''

''ஒன்றுமில்லை மாலதி. நான் படுக்கணும்'' என்று மேலே சென்றான்.

''அத்தான் சாப்பிட்டு...''

''எனக்கு எதுவும் வேண்டாம். வெளியில் சாப்பிட்டு விட்டேன்''என்று சென்று விட்டான்.

மாலதி யோசனையாக புருவத்தை தூக்கினாள்.

''அத்தான் இது மாதிரி இருந்ததில்லையே. இப்போ ஏன்..? இப்படி இருக்கிறார். என்ன நடந்திருக்கும். காலையில் போனவர் இப்போ தான் வருகிறார். எங்கு போயிருப்பார்.''

நிவாதி பத்து மணிக்குத்தான் எழுந்தாள். சேலையைக் கட்டிக் கொண்டு வெளியே வந்தாள். அவனுக்காக சமைத்த சாப்பாடு எல்லாம் அவளைப் பார்த்து கைகொட்டிச் சிரித்தது.

உன்னால் சமைத்ததைக் கூட அவனுக்குப் போட முடியவில்லை. உனக்கு அந்தக் குடுப்பினையில்லை என்பது போல் இருந்தது.

எத்தனை ஆசையாக சமை நிவாதி. எனக்குப் பசிக்குது என்றான்.

இத்தனை செய்தும் சாப்பிடாமல் போய்விட்டானே... என்று கண்ணீர் வடித்தாள். கன்னமெல்லாம் அவன் விரல் தடங்கள். இதாவது என் மேனியில் பட்டதே... என்று அழுதாள்.

அப்படியே எடுத்து எல்லாவற்றையும் மூடி வைத்து விட்டு, படுக்கையில் வந்து படுத்துக் கொண்டாள்.

டேபிளில் அவன் மோதிரமும், வாட்ச்சும் இருந்தன.

அதை எடுத்து வருடிக் கொடுத்தாள். மார்போட அணைத்துக் கொண்டாள்.

மறுநாள் நிவாதியோட அம்மா ஊரில் இருந்து வந்து விட்டாள். வந்ததில் இருந்து ஒரே புலம்பல். ''மருமகனுக்கு தொழில் பண்ண பணம் வேண்டுமாம். அவர் என்னிடம் கேட்டார். நான் என்ன சொல்ல முடியும்.



உன்னை நம்பி தருகிறேன் என்று சொல்ல முடியுமா..? நீ எந்த நேரத்தில் யாருடன் வீட்டை விட்டுப் போவாயோ... என்று எனக்குத் தெரியாது.

மருமகன். நல்லவனா இருக்கப் போய். அவளை வைத்துக் கொள்கிறான். இல்லையென்றால் நீ செய்த காரியத்திற்கு யார் நம் வீட்டில் பெண் எடுப்பார்கள். இப் படிப் பட்ட நல்ல மனுசனுக்கு உதவி செய்தால் என்ன, என்று யாரிடமோ சொல்வது போல் சொன்னார்.

நிவாதி எதுவும் பேசவில்லை. இது எப்பவும் நடப்பது தான். வீட்டை வித்த பணம் முழுவதுமே அம்மா தங்கையிடமே கொடுத்துவிட்டார்.

அவளுக்கு குடும்பம், குழந்தை என்று இருக்கு. உனக்கு என்ன இருக்கு. எதுக்கு உனக்குப் பணம் என்று. இப் போதும் அது போல் கேட்கிறார். இவளிடம் சேமிப்பு ஒன்றும் அவ்வளவாகயில்லை. ஆபீசில் லோன் போட்டாத்தான்.

''எவ்வளவும்மா வேணும்'' என்றாள்.

''ரொம்ப இல்லை. இரண்டு லட்சம் தான்'' என்றார். அலட்சியமாக.

இவள் விழித்தாள். இ...ர...ண்..டு லட்...சமா... எவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறார்.

''சரிம்மா நான் ஆபீசில் கேட்டுப் பார்க்கிறேன்'' என்றாள்.

மாலதியிடம் போய் கேட்டாள்.

''எதுக்கு இவ்வளவு பணம் நிவாதி.''

''எனக்கில்லை. என் தங்கை கணவர்க்கு. தொழில் பண்ண வேண்டுமாம். என் அம்மா புலம்புகிறார். அதான் கேட்டேன் மாலதி கிடைக்குமா..?'' என்றாள்.

''இப்பத்தான் வேலையில் சேர்ந்திருக்கே. இவ்வளவு பெரிய தொகையைத் தர முடியாது.''

''..............''

''உடனே பயப்படாதீங்க. நான் அத்தானிடம் கேட்கிறேன். எப்படியும் உனக்குத் தர ஏற்பாடு பண்ணுகிறேன்'' என்றாள்.

ஒரு அரை புன்னகையோடு தலையாட்டிவிட்டுச் சென்றாள்.

மறுநாள் கார்த்திக்கிடம் இருந்து அழைப்பு வந்தது.

இவள் பதட்டத்தோடு போனாள். அங்கு மாலதியும் இருந்தாள்.

''வா நிவாதி. உட்கார். நான் அத்தானிடம் சொன்னேன். அவர் எதுக்கு, என்ன என்று கேட்டார். அதான் உன்னைக் கூப்பிட்டேன்'' என்றாள்.

கார்த்திக்கிட்ட ''என் தங்கை கணவர்க்கு தொழில் பண்ண'' என்றாள்.

''அவர் என்ன தொழில் செய்கிறார்?''

''தெரியாது''

அவளை முறைத்தான்.

''தெரியாது என்று ஒரு தொழில் இருப்பதாக எனக்குத் தெரியாதே. மாலதி உனக்கேதும் தெரியுமா..?'' என்றான் கேலிக் குரலில்.

மாலதி சிரித்துவிட்டாள்.

''என்னத்தான் ஏதோ அவசரம் போல. அதான் கேட்கிறாள். நீங்கள் கேலி பண்ணிக் கொண்டு.''



''பின்னே கேட்டதுக்கு பதில் வரணும் இல்லையா..? இவ்வளவு பணத்தை குடுக்கிறோம். என்ன ஏன்னு, நமக்குத் தெரிய வேண்டாமா..? குடுத்த பணத்தை இவங்க கட்டுவாங்களா..?'' என்றான்.

நிவாதி அவனை முறைத்தாள்.

''என்ன மாலதி உன் பிரண்டு என்னை இப்படி முறைக்கிறா...?''

நிவாதி பார்வையை தழைத்துக் கொண்டாள்.

''உன் கணவனிடம் நீ கேட்க வேண்டாமா...?''

''அவரிடம் நான் எதுக்கு கேட்கணும்...?''

''பார்த்தியா... மாலதி பதிலை.''

நிவாதி தவித்தாள்.

''இப்பத்தான் இப்படி கேட்கிறாரா..?''

''இல்லை. இது மாதிரி அடிக்கடி கேட்பார். வீடு வித்த பணம் முழுவதும் அவருக்கே அம்மா கொடுத்துவிட்டார். நானும் கொஞ்சம் பணம் வைத்திருந்தேன். அதையும் கொடுத்துவிட்டேன்.''

''நீ இப்போ எவ்வளவு வைத்திருக்கே..?''

''எ..ன்..னி..டம் பணம் இல்லை.''

''வீடு வித்த பணத்தில் உனக்கு கொடுக்கவில்லையா...''

''இல்லை.''

''ஏன்..?''

''நான் எந்த நேரத்திலும் யாருடனாவது ஓடிப்போய் விடுவேனாம். எனக்கு குடும்பம், குழந்தை என்று எதுவு

மில்லையாம். அதனால் தான்'' என்று அவனை நோக டிக்க, மாலதி அங்கிருப்பதையும் மறந்து உண்மையைக் கூறினாள்.

தடக்கென கார்த்திக் சேரில் இருந்து எழுந்துவிட்டான்.

மாலதி அதை கவனிக்கவும், எதுவும் தெரியாத மாதிரி சன்னல் புறம் போய் நின்று கொண்டான்.

அப்போது தான் நிவாதி தன் தவறை உணர்ந்தாள். மாலதி என்ன நினைப்பாள். இந்த மாதிரி நாம் பேசியதை என்று அவள் முகத்தை நோட்டமிட்டாள். அதில் இருந்து எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை.

சற்று நேரம் சென்று திரும்பினான்.

''உனக்கு பணம் கொடுக்க முடியாது நிவாதி. நீ போக லாம்'' என்றான்.

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. என்ன இப்படிச் சொல்லி விட்டான். இனி என்ன செய்வது.

மாலதிக்கு போன் வரவும் வெளியே சென்றாள்.

''சார் ப்ளீஸ், நான் பணம் குடுக்காமல் அந்த வீட்டில் இருக்க முடியாது. என்னை என் அம்மா வைத்துக் கொள்ள மாட்டாங்க'' என்றாள் அழுகுரலில்.

''அப்படி எதுக்கு அந்த வீட்டில் இருக்கிறே... வந்து விடு நான் வைத்துக் கொள்கிறேன்'' என்றான் கூலாக.

''சார் எனக்கிருப்பது என் அம்மா மட்டுந்தான். அவங்க கடுஞ்சொல்லை என்னால் தாங்க முடியாது. நீங்கள் வாங்கி வந்த பூ, சிலது கதவு ஓரத்தில் கிடந்ததை நான் கவனிக்கவில்லை அதை அம்மா பார்த்துவிட்டு, எவன் கூட... படுத்... இருந்தே என்று வாய் கூசாமே கேட் கிறாங்க.''



''சொல்ல வேண்டியதுதானே. என் புருசன் கூட படுத்திருந்தேன் என்று. உனக்கு என்ன தயக்கம். அது உண்மையும் கூடத்தானே.''

''என் அம்மா நம்பமாட்டாங்க.''

''அப்ப சரி விடு. இந்தப் பேச்சை.''

''சார் பணம் அவசியம் எனக்கு வேண்டும். இல்லை யென்றால், அ..வ..ன் வந்து தங்கிக் கொண்டு எ..ன்..னை தொந்தரவு செய்வான்.''

''தொந்தரவுன்னா...?''

''...........''

''முதலில் அவன் அட்ரசைக் கொடு என்னிடம்'' என்றான்.

''இல்லை அதெல்லாம் வேண்டாம்'' என்றாள்.

இப்படியே மூன்று நாளாக அலையவிட்டான் அவளை.

''நான்காம் நாள் நான் சொல்வதைக் கேட்கிறாயா..? பணம் தருகிறேன்'' என்றான்.

என்ன என்பது போல் நிமிர்ந்து பார்த்தாள்.

''நீ தான் எனக்கு வேண்டும். முழுதாக'' என்றான்.

அவள் பார்வை அவன் மேல் அப்படியே நிலைத் திருந்தது.

''நீ போகலாம். நாளை உன் முடிவைச் சொல்'' என்றான்.

அவள் தள்ளாடியபடியே எழுந்து சென்றாள்.

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'அன்று எப்படி அடித்து விட்டேன் அவளை. எப்படி யெல்லாம் அழுதாள். நான் இப்படிக் கேட்கவும் என்னை

எத்தனை மட்டமாக நினைப்பாள். எனக்கு வேற வழி தெரியலே... நிவாதி. நீ என்னைப் புரிந்து கொள்ள.'

இரண்டு பேரும் மனம் விட்டுப் பேசுவதில்லை. பார்த்தாலே... சண்டை போடுகிறோம். இதற்கு என்ன தான் முடிவு.

மாலதி நிவாதியிடம் கேட்டாள். ''அத்தான் என்ன சொன்னார். நிவாதி.''

''தர முடியாது என்று சொல்லிவிட்டார்.''

''இது மாதிரி தரக்கூடாது நிவாதி. கம்பெனி ரூல்ஸ் அப்படி. சர்வீசைப் பொருத்துத்தான் அப்பா லோன் தருவார். இதை அப்பாவிடமும் கேட்கணும்.''

''இதெல்லாம் தெரிந்தே எப்படி அத்தான் அப்பாவிடம் கேட்பார். அதான் அப்படிச் சொல்லியிருப்பார்.''

''நீ விட்டுக் கொடுப்பியா..? மாலதி உன் அத்தானை.''

மாலதி சிரித்தாள்.

''நிவாதி உன்கிட்ட ஒண்ணு சொல்லணும். அத்தான் போன ஞாயிறு வெளியே போய்ட்டு வந்ததில் இருந்து சரியில்லை. அழுத மாதிரி இருந்தது. ஏன் என்று கேட்டேன். ஒன்றுமில்லை என்று சொல்லிவிட்டார்.''

''அன்று இரவு ஒன்றும் சாப்பிடவில்லை. நான் எவ்வளவோ கெஞ்சினேன். பால் மட்டுமாவது குடிங்க என்றேன். என்னைத் தொந்தரவு பண்ணாதே என்று சொல்லிவிட்டார்.''

நிவாதியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.



நிவாதி மாலதியின் முகத்தில் இருந்த பார்வையை, வேறு பக்கம் திருப்பினாள்.

'எதற்கு இதை என்னிடம் சொல்கிறாள். இவளுக்குச் சந்தேகம் ஏதும் வந்துவிட்டதோ....'

மறுநாள் கார்த்திக்கிடம் போனாள்.

''என்ன முடிவு பண்ணியிருக்கே...?''

''நீங்கள் சொன்னதை மாலதியிடம் சொல்லிவிடுவேன்'' என்றாள்.

அவளையே குறு.. குறுவெனப் பார்த்தான்.

பின் அவனே மால்தியை கூப்பிட்டான்.

அவள் வந்ததும், ''மாலதி இவள் உன்னிடம் என்னமோ சொல்லணுமாம். அதான் உன்னைக் கூப்பிட்டேன்'' என்றான்.

''என்ன நிவாதி. என்ன சொல்லணும் என்னிடம்'' என்றாள்.

அவள் திணறிப் போனாள். அவனை கெஞ்சுவது போல் பார்த்தாள்.

''சொல்லு நிவாதி. என்னிடம் மட்டும் கேட்கிறாய். மாலதியிடம் சொல்ல வேண்டியதுதானே, என்ன தயக்கம்.''

மாலதி இருவரையும் மாறி.. மாறிப் பார்த்தாள்.

''கார்த்திக் மாலதியிடம் வேற வழி எதுவும் இல்லையா..? என்று என்னிடம் கேட்டாள். நான் அந்த சைடில் ஒரு கதவு இருக்கு அது வழியாகவும் போகலாம் என்றேன்'' என்றான். கண்களில் சிரிப்புடன்.

நிவாதிக்கு மூச்சு வந்தது.

மாலதி நிவாதியைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள்.

# 19

நிவாதி ஒரு வாரம் லீவில் இருந்தாள். அம்மா கேட்டால் என்ன சொல்வது. நான் உண்மையைச் சொன்னாலும் அவர் நம்ப மாட்டாரே...

கார்த்திக் வேற என்னை இப்படி கட்டாயப்படுத்துகிறான். என்ன தைரியம் அவனுக்கு. மாலதியை கூப்பிட்டு சொல் என்கிறான்.

நான் என்ன சொல்ல முடியும். நான் சொன்னால் தான் அவள் நம்புவாளா...? இத்தனை நம்பிக்கை வைத்திருக்கும் அவளுக்குத் துரோகம் செய்யலாமா..? இது தெரிய வேண்டாமா...? கார்த்திக்கு.

இப்படியே எத்தனை நாள் லீவு போட முடியும். ஆபீஸ் கிளம்பிப் போனாள்.

கார்த்திக்கும் குழம்பினான். ஏன் இவள் ஒரு வாரமாக வரவில்லை. வீட்டில் அவன் வந்து ஏதும் பிரச்சனை பண்ணிவிட்டானா...? இவன் எல்லாம் ஒரு மனுசனா..? இப்படி ஒரு பெண்ணிடம் பணம் வாங்க.

அன்று நிவாதியைப் பார்த்ததும் தான் அவனுக்கு சீராக மூச்சு விட முடிந்தது.

அவனிடம் பைலைக் கொண்டு வந்த நிவாதியிடம், ''இன்று நாம் மகாபலிபுரம் போகிறோம். நீ கட்டாயம் வர வேண்டும். மறுத்தால் நான் உன்னை வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்ல நேரிடும். எது உன் விருப்பம் என்று முடிவு செய்து கொள். மதியம் என் காரில் இருக்க வேண்டும்'' என்றான் அழுத்தமாக.

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''மகா..பலி...புரமா...'' என்றது வாய்.



''பயப்படாதே.. நிவாதி. என் விரல் நுனி கூட உன்மீது படாது. நீ என்னைத் தாராளமாக நம்பலாம்.''

''பி..ன்.. எதற்கு..'' என்றாள் திணறலாக.

''உன்னிடம் நான் முடிவா... பேச வேண்டும் அதான்.''

''பேச.. நம..க்கு.. என்..ன இருக்கு.''

''அதை வா.. அங்கு சொல்கிறேன்.''

''நான் வரமாட்டேன்..'' என்றாள்.

இது ஆபீஸ் என்று உனக்குத் தெரியும். நான் சொல்வதை செய்வேன் என்றும் உனக்குத் தெரியும். அதனால் மரியாதையாக வா்றே...'' என்றான் கட்டளையாக.

காரில் எதுவும் பேசாமல் வந்தான்.

நேராக ஒரு காட்டேஜ்ஜில் காரை நிறுத்தினான்.

அவனைச் சந்தேகமாகப் பார்த்தாள்.

''நான் வாக்குக் கொடுத்திருக்கேன். வாக்குத் தவறமாட்டேன்'' என்றான்.

இறங்கி அவனுடன் உள்ளே சென்றாள்.

தான் ஒரு சோபாவில் உட்கார்ந்து கொண்டு, அவளையும் உட்காரச் சொன்னான்.

சிறு மௌனத்திற்குப் பின், ''நிவிதா நீ அன்று வீட்டுக்குப் போனதும் என்ன நடந்தது. உன்னை ஏதாவது சொன்னார்களா...? ஏதும் பிரச்சனை ஆனதா...?''

அவள் ஒரு நிமிடம் கண்களை இறுக மூடிக் கொண்டாள். பின் மெதுவாக ''நான் வீட்டை விட்டு வந்ததும் தேடியிருக்காங்க. என் தங்கை சுமதி அக்கா அவள்

ப்ரண்ட் வீட்டுக்கு படிக்க போயிருக்கா. என்னிடம் சொல்லச் சொன்னாள். நான் தான் மறந்து விட்டேன் என்று சொல்லியிருக்கா. அதனால் வீட்டில் எதுவும் பிரச்சனையில்லை. நானும் எனக்கு கல்யாணம் ஆனது பற்றி எதுவும் சொல்லவில்லை. தாலிச் செயினை மறைத்துக் கொண்டேன்.''

''இதை எத்தனை நாள் மறைக்க முடியும். ஒரு நாள் வீட்டிற்குத் தெரிந்துவிட்டது. அப்பா என்னை அடித்தார். அப்போதும் நான் யார் என்று சொல்லவில்லை. வீட்டை விட்டுப் போ என்று சொல்லிவிட்டார்கள்.''

''அப்போது என் மாமா வெளிநாட்டில் இருந்து வந்திருந்தார். நான் அவரிடம் எனக்கு அங்கு ஒரு வேலை வாங்கித்தாங்க. வேலை பார்த்துக் கொண்டே நான் படித்துவிடுகிறேன்'' என்றேன்.

''..........''

''எனக்கும் இங்கு இருக்க முடியவில்லை. சனிக்கிழமையானால் கால் தானாகவே மலைக்கோட்டைக்கு இழுத்துச் சென்றுவிடும். எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. மாமாவுடன் சென்றுவிட்டேன். படிப்பை முடித்தேன்.''

''..........''

''அப்பா திடீரென இறந்துவிட்டார். அதற்குத் தான் இங்கு வந்தேன். தங்கைக்கும் கல்யாணம் ஆகிவிட்டது. அம்மாவைத் தனியாக விட்டு, நான் அங்கு போக முடியாது. திருச்சியில் உள்ள வீட்டை விற்றுவிட்டு இங்கு வந்தோம். நாங்கள் இங்கு வந்து ஒரு வருடம் ஆகிறது.''



கார்த்திக் கண் கலங்கினான்.

''என்னால் தானடா... உனக்கு இத்தனை சிரமம். என்னால் உனக்கு நிம்மதியேயில்லை'' என்றான்.

''பரவாயில்லை விடுங்க கார்த்திக். இதுக்குப் போய் ஏன் இத்தனை வருத்தப்படுறீங்க. நீங்களாவது சந்தோசமாக இருக்கீங்களே.. கார்த்திக். எனக்கு அதுவே போதும்'' என்றாள்.

''மாலதி அருமையான பெண். நீங்க கொடுத்து வைச்சிருக்கீங்க மனைவியாக அமைய'' என்றாள்.

கார்த்திக் அவசரமாக ''மாலதி என் மனைவியில்லை நிது. நீ இத்தனை நாள் இப்படித்தான் நினைத்திருந்தியாடா...? அதான் அன்று அப்படிச் சீறினாயா...?'' என்று தன் கதையைச் சொன்னான்.

''நீ போனதும் மறுநாளே சென்னைக்கு வந்துவிட்டோம். எனக்குக் கல்யாணம் நடந்தது. மாதவி மனநிலை பாதிக்கப்பட்டவள் என்று எனக்குத் தெரியாது.''

''..........''

''பின் நான் ஒரு நடை பிணமாகத்தான் வாழ்ந்தேன். என் தங்கைகளுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்தேன். என் அம்மாவும் இறந்துவிட்டார்கள்.''

''நான் வாரா வாரம் சனிக்கிழமை அஷ்டலெட்சுமி கோயிலுக்குப் போய்விடுவேன். அந்த படியில் உட்கார்ந்து, நாம் சந்திச்ச தினத்தையெல்லாம் நினைத்துப் பார்ப்பேன். மாதத்தில் ஒரு நாள் திருச்சி சென்றுவிடுவேன். நீயும் நானும் அமர்ந்த படியில் உட்கார்ந்து விடுவேன். உன்னை நான் மறக்கவே இல்லையடா...''

''.................''

''நீ அன்று என்னை இறுக அணைத்து கொடுத்த முத்தம், இன்று வரை என்னை வாழ வைக்குது நிது. தினமும் உன் போட்டோவுக்கு முத்தம் கொடுத்தால்தான் நான் தூங்க முடியும்.''

அவள் கண்களில் கண்ணீர்.

''மாலதி உங்க மனைவியில்லையா... மாதவி இறந்ததும் எப்படி தவித்திருப்பீங்க'' என்று அழுதாள்.

''ஆமடா... ரொம்ப தவித்துத்தான் போய்விட்டேன்.''

அவள் மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டான்.

''நான் வேலையை விட்டு நின்று விடலாம் என்று நினைத்துக் கொண்டேன் கார்த்திக்.''

''ஏன்டா..?''

''நான் எப்படி இங்கு வேலை செய்ய முடியும். நீங்களும் மாலதியும் இருக்கும் போது. மாலதி உங்கள் மனைவி என்ற நினைப்பே என்னை ஆட்டிப் படைத்தது. அதுவும் நீங்கள் என் பக்கத்தில் இருந்து கொண்டு இருக்கும் போது உங்கள் இருவரையும் பார்த்துக் கொண்டு என்னால் எப்படி இருக்க முடியும்.''

''நீங்கள் என்னிடம் சரியாகப் பேசாததும் என்னை அப்படி நினைக்க வைத்தது. மாலதிக்கு முன்னாடி என்னிடம் உங்களால் எப்படிப் பேச முடியும். உங்களுக்கும் பிரச்சனை அதான் அப்படி நினைத்தேன்.''

''மாலதிக்குப் பயந்து நான் உன்னிடம் பேசாமல் இல்லை. மாலதிக்கு உடனே தெரிய வேண்டாமே என்று நினைத்தேன். உன்னைப் பார்த்ததில் இருந்து என் மனம் நான் சொல்வதைக் கேட்பதில்லை. உன் அருகாமை எனக்கு ரொம்பத் தேவைப்படுதுடா.. நமக்குத்தான் கல்யாணம் ஆகிவிட்டதே.. இனி நாம் சேர்ந்து வாழ்ந்தாள் என்னடா...'' என்றான்.



''நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் யாருக்கும் தெரியாதே. நாம் கல்யாணம் செய்து கொண்டது.''

''...............''

''உங்க மாமனாருக்குத் தெரிந்தால் என்னாவது. உங்கள் மேல் எவ்வளவு மரியாதை வைத்திருக்கிறார். மாலதி தான் என்ன நினைப்பாள். நம் மீது தப்பான அபிப்பிராயம் தான் வரும். ஆபீசிலும் நம்மைப் பற்றி என்ன நினைப்பாங்க.''

''நீ சொல்வதும் உண்மை தான். நான் வீட்டில் சொல்லி விடுகிறேன்'' என்றான்.

இவன் சொல்லு முன் இந்த செய்தி தினகரன் காதுக்கு எட்டியது. அவரும் திகைத்தார். என்ன தான் இருந்தாலும் அவன் ஆண்பிள்ளை. தன் மகளைக் கல்யாணம் பண்ணியும், அவனுக்கு எந்த சுகமுமில்லை. அதற்கு நல்ல பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்ளலாமே... இப்படி கல்யாணமானவளைப் போய்... நினைக்கவே இவருக்கு என்னவோ போல் இருந்தது.

இதை எப்படி ஒரு மாப்பிள்ளையிடம் கேட்க முடியும். கேட்காமலும் இருக்க முடியாது. வீட்டில் ஒரு வயது வந்த பெண் இருக்கா... அவளுக்கும் சீக்கிரம் ஒரு மாப்பிள்ளை பார்த்து முடித்து விட வேண்டும்.

விசயம் வெளியே தெரியுமுன் மாப்பிள்ளையிடம் பேச வேண்டும். சீக்கிரமே... என்று முடிவெடுத்தார்.

# 20



இரவு சாப்பாடு முடிந்ததும் ''என் அறைக்கு வாங்க மாப்பிள்ளை'' என்று விட்டுப் போனார்.

கார்த்திக் நம்மைப் பற்றித் தான் பேசக் கூப்பிடுகிறார் என்று தெரிந்து கொண்டான். இதைப் பற்றி பேசும்போது, மாலதியும் கூட இருக்கணும். அப்பத்தான் அவளுக்கும் புரியும். இப்போ மாலதி சரியாகப் பேசாதது போல் இருக்கு. என் மேல் கோபம் தான். அவளிடம் இவன் போய் என்ன சொல்ல முடியும். அதனால் பேசாமல் இருந்தான்.

மாலதியிடம் ''மாலதி நீயும் வா... மாமா என்னை கூப்பிட்டார்'' என்றான்.

''உங்களைத்தானே கூப்பிட்டார், நான் எதற்கு உங்க இருவருக்கும் நடுவில்'' என்றாள்.

''என் மேல் ஏதோ கோபம் போல் தெரிகிறது மாலதி.''

''அதெல்லாம் ஒன்றுமில்லத்தான்.''

''உன் கண் பொய் சொல்லாது மாலதி. நீ என்ன கேட்கணும் என்று நினைக்கிறே. அதைத் தாராளமாக என்னைக் கேட்கலாம்.''

அவள் என்னனு கேட்க முடியும். இப்படி கல்யாணம் ஆனவள் கூட பழக்கம், பழக்கமா... வேறு என்னதுமா...? இல்லை சாதாரணமாகத்தான் பழகுறாங்களா..? இது எதுவுமே இவளுக்குத் தெரியாது. ஆனால் மனதில் ஏதோ ஒரு நெருடல். அதை என்னனு இவள் கேட்க முடியும்.

கார்த்திக் மட்டும் அவர் அறைக்குப் போனான்.



''என்ன மாமா பேசணும். என்னை வரச் சொன்னீங்க'' என்றான்.

அவரும் தயங்கினார். நாம் தப்பாக எதுவும் கேட்டு, மாபிள்ளை எதுவும் கோபித்துக் கொண்டாள்.

அவர் தயங்கியதைப் பார்த்து, ''தயங்க வேண்டாம் மாமா. என்னை உங்க பிள்ளை என்று சொன்னீங்க. பிறகு என்ன தயக்கம் என்னிடம். நான் எதுவா இருந்தாலும் கோபித்துக் கொள்ள மாட்டேன்'' என்றான்.

எப்படி அவனிடம் நேரடியாகக் கேட்பது. நீங்கள் அந்த பெண்ணுடன் பழகுறீங்களா...? என்று, நான் செய்ததே தப்பு. இப்படிப்பட்டவனை தன் மகளுக்கு பணத்தை காட்டி, அவன் வாழ்க்கையை கெடுத்தது. இன்னேரம் வேறு ஒருத்தனாக இருந்தால், இங்கு இருக்கும் பணத்துக்கு, தப்பான வழியில் போயிருப்பான்.

அப்படி அவன் போனாலும் இவர் கேட்க முடியாது. எப்படிக் கேட்க முடியும். எந்த மூஞ்சியை வைத்துக் கொண்டு. இதுவரை இவன் ஏன் இப்படி செய்தீங்க. இப்படிப்பட்ட பெண்ணை என் தலையில் கட்டி விட்டீர்களே... என்று கேட்கவில்லை.

இத்தனைக்கும் இவனுக்கு கல்யாணம் வரை விசயம் தெரியாது. கல்யாணம் முடிந்ததும் பிரச்சனை வரும் என்று எதிர்பார்த்தார். அது மாதிரி இவன் எதுவும் பிரச்சனை பண்ணவில்லை. இன்றுவரை எதுவும் கேட்கவில்லை. நானாவது மாதவி இறந்ததும். வேறு ஒரு பெண்ணைப் பார்த்து கல்யாணம் செய்து வைத்திருக்கணும். அதை நான் நினைக்கக்கூட இல்லை. பிசினஸ்.. பிசினஸ்.. என்று அதன் பின்னாடியே அலைந்தேன்.

அவனுக்கும் ஒரு துணை வேண்டும் என்று நான் நினைக்கவில்லையே... இந்த வயதில் இப்படி தனிமரமாக இருக்கானே.. வீட்டுக்கு வந்தால், அன்பாக, அனுசரணையாக இருக்க அவனுக்கும் ஒருத்தி வேண்டாமா...? அவன் உணர்ச்சிகளை நான் புரிந்து கொள்ள வேண்டாமா...? நான் கேட்டால் என்னைப் பற்றி என்ன நினைப்பான்.

தன் மகள் நல்லா இருக்கணும் என்று தானே கல்யாணம் பண்ணி வைத்தார். தன்னைப் பற்றி நினைக்கவில்லையே... என்று தரக் குறைவாக நினைத்துவிட்டாள்.

வரச்சொல்லியாகிவிட்டது. எப்படியிருந்தாலும் கேட்டுத்தான் ஆகணும். வெளியில் தெரிந்தால், நாலு பேர் நாலு விதமாக பேசுவார்கள் தினகரன் மருமகன் இப்படி என்று.

''மாப்பிள்ளை உங்களுக்கு பெண் பார்க்கட்டுமா..?'' என்றார்.

''என்ன மாமா திடீரென்று பெண் பார்க்கட்டுமா..?'' என்று கேட்கிறீங்க.

''மாப்பிள்ளை நீ..ங்..க தப்..பா..ன.. வழியில். அதுவும் க..ல்..யா..ண..மா..ன பெண்..ணுடன்.. அதனால் தான் கேட்கிறேன் மா..ப்..பி..ள்ளை.''

சிறிது நேரம் பேசாமல் இருந்தான். பிறகு ''இதோ ஒரு நிமிடம் வருகிறேன்'' என்று மாடிக்குப் போனான். வரும் போது கையில் ஒரு ஆல்பம் கொண்டு வந்து மாமனாரிடம் கொடுத்தான்.

''மாலதி நீயும் வா...'' என்று கூப்பிட்டான்.

இருவரும் ஆல்பத்தை பார்த்துவிட்டு அதிர்ந்தனர். அது கல்யாண ஆல்பம். கார்த்திக்கும் நிவாதிக்கும் நடந்த கல்யாண போட்டோ அது. அதைப் பார்த்துவிட்டு ''மாப்பிள்ளை'' என்றார் தினகரன்.



''ஆமாம் மாமா எங்கள் கல்யாணப் போட்டோ தான். இது உங்கள் மகளை கல்யாணம் பண்ணிக் கொள்ளு முன் நடந்தது நாங்கள் காலேஜ்ஜில் படித்துக் கொண்டிருந்தோம்.''

''நீங்கள் வந்து கேட்டது. அம்மா வாக்கு கொடுத்தது. எதுவும் எனக்குத் தெரியாது. கல்யாணக் கோலத்தில் பார்த்த அம்மாவுக்கு அதிர்ச்சி. அவர் அன்று பேசிய பேச்சு..'' கண்களை இறுக மூடினான்.

மனதில் திரைப்படம் போல் ஓடியது. எல்லாவற்றையும் சொன்னான்.

''நான் அவங்க பிள்ளை இல்லை என்று சொன்னாங்க. அதை என்னால் தாங்க முடியவில்லை. அத்தனையும் நிவாதி கேட்டுக் கொண்டிருந்தாள்.''

''...............''

அவளை வீட்டை விட்டு உடனே அனுப்பு. நான் பணம், நகை எல்லாம் வாங்கிவிட்டேன். இதெல்லாம் இவ குடுப்பாளா...? குடுப்பாள் என்றால் இவ இங்கு இருக்கட்டும்.'' என்று விரட்டினார்.

''...............''

''நான் எவ்வளவோ கெஞ்சினேன். என்னை நம்பி வீட்டை விட்டு வந்துவிட்டாள் என்று. முடிவாக நாங்கள் இறந்து விடுவோம் என்று மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டார்கள். பிறகு நிவாதியே வீட்டை விட்டுப் போய்விட்டாள்.''

''...............''

''அதான் நான் ஒவ்வொரு சனிக்கிழமை மதியம் வெளியே சென்றுவிடுவேன். அவளின் நினைவு என்னை வாட்டும். என்னால் தானே அவளுக்கு இந்தக் கஷ்டம் என்று. அவளை அவங்க வீட்டில், வீட்டை விட்டுப் போக சொல்லிவிட்டாள் எங்கு போவா...'' என்று துடிப்பேன்.

''..............''

''மாதத்தில் ஒரு சனிக்கிழமை திருச்சி போனேன். நாங்க சந்தித்த இடத்தில் உட்காந்து இருப்பேன். என் மனதில் இருப்பதை யாரிடம் சொல்ல முடியும். நான் நடை பிணமானேன். மாதவி இப்படி இருந்தது. கூட என்னைப் பாதிக்கவில்லை. அந்த அளவிற்கு என் மனம் பாதித்திருந்தது.''

''..............''

இத்தனை வருடத்திற்குப் பிறகு, அன்று நம் ஆபீசில் மாலதி கூட்டி வந்தாள். அவளைப் பார்த்து நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. மாலதி கூட எங்களை கண்கானித்தாள். அது எங்களுக்கும் தெரியும்.''

''..............''

''நிவாதி இத்தனை வருடமாக பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமில்லை. நான் நினைத்த மாதிரியே அவள் அப்பா வீட்டை விட்டுப் போகச் சொல்லிவிட்டாராம். அவள் மாமா கூட ஸ்டேட்ஸ் போய்விட்டாளாம். அவள் அப்பா இறந்ததுக்குத்தான் வந்தாளாம். பிறகு திரும்பிப் போக வேண்டாம் என்று இங்கு வந்துவிட்டார்களாம்.''

''..............''

''நான் நிவாதியை பார்க்கவில்லையென்றால், கல்யாணமே பண்ணிக் கொள்ள மாட்டேன். எனக்காகவே அவள் இன்னும் உயிரோடு இருக்கிறாள். அன்று நான் சத்தியம் கேட்டேன். நீ தற்கொலை செய்து கொள்ளக் கூடாது என்று. அதனால்தான் நான் உயிரோடு இருக்கேன்'' என்றாள்.



''..............''

''அவள் கழுத்தில் இருப்பது நான் கட்டிய தாலி. முறைப்படி கோயிலில் தாலி கட்டி, ரிஜிஸ்டர் ஆபீசில் பதிவு பண்ணியது. எனக்காக, என் நிம்மதிக்காக என்னை விட்டு அன்று போனாள். இன்னும் அவள் தனிமரமாகவே இருக்கா.. இப்பச் சொல்லுங்க, நான் அவ கூட சேர்ந்து வாழக்கூடாதா...?''

''..............''

''இதுவரை நாங்கள் எந்தத் தப்பும் பண்ணலே... அது வெளியே தெரிந்தால் உங்களுக்குத் தலை குனிவாகி விடும் என்று இப்போ நீங்க என்ன சொல்றீங்களோ... அதன்படி நான் செய்கிறேன்'' என்றான்.

தினகரன், மாலதி கண்களில் கண்ணீர். அவர் என்ன சொல்வார். என்னால் இவர்களுடைய வாழ்வு கெட்டு விட்டதே. அந்தப் பெண் தாலி கட்டிய பிறகு பிரிந்து சென்றிருக்காள் என்றால். எத்தனை உத்தமமான பெண்.

இவனை என்னவென்று சொல்வது. மனதுக்கு பிடித்தவளைக் கல்யாணம் செய்து கொண்டும். தான் கொடுத்த பணத்திற்காகவும், தான் அம்மாவுக்காகவும், தன் வாழ்வையே, இளமையையே... தியாகம் பண்ணின இவன் எங்கே..? நான் பெரிய பணக்காரனாக இருந்து என்ன பயன். எவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொண்டேன். வாழ வேண்டிய வயதில், இத்தனை சின்ன வயதில் இரு

வருக்கும் எத்தனை பெரிய மனது. இப்படி விட்டுக் கொடுக்க

இவன் நினைத்திருந்தால்.. போலீசில் புகார் கொடுத்தால் போதும். சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். இருவரும் மேஜர். ஆனால் இவர்கள் அப்படிச் செய்யவில்லை.

மருமகனை கையெடுத்து கும்பிட்டார்.

## 21



கார்த்திக் பதறி எழுந்தான்.

''மாமா என்ன இது. நீங்க போய் என்னை....''

''கும்பிட்டால் பரவாயில்லை மாப்பிள்ளை. இத்தனை சின்ன வயதில் எப்படி நடந்திருக்கீங்க. நா..ன் எப்..படி நடந்திருக்கேன். எனக்கு என்னை நினைச்சாலே... அசிங்கமா இருக்கு.''

''நான் கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்றேன்'' என்றார்.

''மாமா எனக்கு மட்டும் பண்ண வேண்டாம். அப்படியே மாலதிக்கும், பரத்திற்கும் ஏற்பாடு பண்ணுங்கள். அவள் என்னை திட்டப் போறா...'' என்றான் கார்த்திக் சிரித்துக் கொண்டே.

மாலதியின் முகத்தை தினகரன் ஆவலுடன் பார்த்தார்.

''என்னம்மா மாப்பிள்ளை சொல்கிறார். உனக்கும் ஏற்பாடு பண்ணட்டுமா..?'' என்றார்.

''போங்கப்பா...'' என்று முகம் சிவந்து உள்ளே போனாள்.

இதற்கிடையே திருச்சி காலேஜ்ஜில் இருந்து பழைய ஸ்டூடண்டுகளுக்கு அழைப்பு வந்தது.



பெரிய நிகழ்ச்சி ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது. அதற்கு நிவாதியையும் கூப்பிட்டான்.

''வா நிவாதி திருச்சி போய்விட்டு வரலாம். நம் பழைய பிரண்ட்ஸ்களையும் பார்த்த மாதிரி இருக்கும். நாமும் பழைய இடங்களை ஒரு முறை கல்யாணத்திற்கு முன் பார்த்த மாதிரியும் இருக்கும்'' என்று கூப்பிட்டான்.

இவளும் ''சரி'' என்றாள்.

இதை மாலதியிடம் சொன்ன போது ''நாங்களும் வர்றோம் அத்தான்'' என்றாள்.

''அப்படிப் போடு. பரத்தும் கூட வர்றாரா... சரி எல்லோரும் கிளம்புவோம்'' என்றான்.

காலேஜ்ஜில் கார்த்திக், நிவாதிக்கு பலத்த வரவேற்பு. விவரம் தெரிந்த பிரண்ட்ஸ் எல்லோரும் அதிர்ந்தனர்.

''என்னடா.. நீ சென்னையில் தொழிலதிபர் மகளையல்லவா... கல்யாணம் செய்து கொண்டாய். இப்..போ... எப்..ப..டி நி..வாதி.. கூட..'' என்றனர்.

கார்த்திக் சுருக்கமாக விபரத்தைச் சொன்னான்.

''இவள் தான் மாதவியோட தங்கை மாலதி. இவளும் இங்கு வருகிறேன் என்று வந்தாள்'' என்று அறிமுகப் படுத்தி வைத்தான்.

நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. எல்லோரும் நீண்ட வருடங்களுக்குப் பிறகு சந்தித்து, அவரவர் கதையை பேசிக் கொண்டனர். எல்லோரும் கல்யாணமாகி செட்டிலாகி இருந்தனர்.

கார்த்திக்கோட பிரண்ட்ஸ், புரொபசர் எல்லாம், கார்த்திக்கை டான்ஸ் பண்ண கூப்பிட்டனர். இவன் ''எந்த

பிராக்டீசும் பண்ணாமல் எப்படி ஆடுவது'' என்று மறுத்தான்.

''அதெல்லாம் முடியாது. நீயும், நிவாதியும் மறுபடியும் ஆடுறீங்க. என்று பிடிவாதமாகச் சொன்னார். இவர்களால் மறுக்க முடியவில்லை.

இருவரும் மேடை ஏறினர். பலத்த கை தட்டல், இருவரும் தங்களை மறந்து, அற்புதமாக ஆடினர். அந்த காதலருக்கே... உரித்தான தாபம், கண்களில் காதல் வழிய, உணர்ச்சிப் பெருக்குடன் ஆடினர்.

ஆட்டத்தின் முடிவில் நிவாதியை தூக்கி ஒரு சுற்று சுற்றி கன்னத்தில் முத்தமிட்டு அணைத்துக் கொண்டான்.

நிவாதியின் முகம் செக்கர் வானமாய் சிவந்தது.

மாலதியே அசந்துவிட்டாள். அவர்களின் ஜோடி பொருத்தத்தைப் பார்த்து. கார்த்திக் கண்களில் தான் எத்தனை பிரகாசம். இத்தனை ஆண்டுகளில் இவள் பார்த்ததேயில்லை.

இருவருக்கும் பரிசு வழங்கப்பட்டது. இரண்டு நாள் இருந்து பிரண்ட்ஸ்களுக்கு எல்லாம் பத்திரிக்கை கொடுத்து விட்டு வந்தான்.

''எதுக்குடா இன்னொரு முறை கல்யாணம்'' என்றனர்.

''மாமா தான் முதலில் நடந்தது தடையாகப் போய் விட்டது. இப்போ நல்ல நாள் பார்த்து செய்வோம் என்றார். ரிசப்ஷன் மட்டும் வைத்தாலும், எப்போ கல்யாணம் நடந்தது என்று கேள்வி வரும். இதுவென்றால் பிரச்சனை இருக்காது. அதனால் தான் இப்படி'' என்றான்.



பெரிய கல்யாண மண்டபம். இரு மணமேடை போடப்பட்டிருந்தது. ஒன்றில் கார்த்திக்கும், மற்றொன்றில் பரத்தும் உட்கார்ந்திருந்தனர்.

மணப்பெண்கள் அழைத்து வரப்பட்டார்கள்.

ஐயர் மந்திரம் ஓத, மங்கல வாத்தியம் முழங்க... இருவரும் மணமகள்கள் கழுத்தில் தாலி கட்டினர்.

முதல் இரவு அறை அலங்கரிக்கப்பட்டது.

நிவாதி பால் செம்புடன் உள்ளே சென்றாள். அங்கு கார்த்திக்கை காணவில்லை. சுற்று முற்றிலும் தேடினாள்.

பின்புறமாக இருந்து அவள் கண் பொத்தப்பட்டது. அந்த கையைப் பிடித்து இழுத்து வாயில் வைத்து, வலிக்காமல் கடித்தாள்.

அவளை அப்படியே படுக்கைக்கு அள்ளிப் போனான்.

''எ..த்..த..னை வரு..ட... நீ..ண்...ட... காத்..திருப்..பு..டா.. என் க..ண்..ணே..''என்று அவள் பவளச் செவ்வாயில் அழுந்த முத்தமிட்டான்.

''அன்று நீ எனக்கு கொடுத்த முத்தம்... இன்று இ...ப்..போ நினைத்தாலும் உடல் சிலிர்க்குதடா... எத்தனை தித்..தி..ப்பு..'' கண்மூடி ரசித்தான்.

''கார்த்திக்'' என்றாள் நிவாதி.

அவன் கண் திறந்தான்.

''நீங்கள் அன்று கொடுத்த ஒரு முத்தத்தை மட்டும் நினைத்து ரசித்துக் கொண்டிருந்தால்... இப்போ... கிடைக்கும் முத்தம் கிடைக்காமல் போய்விடும். விடியப் போகுது. வேற முத்தம் எதுவும் கிடைக்காது.''

அவள் உதட்டில் விரலால் கோலம் போட்டான்.

அந்த அவஸ்தையை அவளால் தாங்க முடியவில்லை. தன் முகத்தை அவன் மார்பில் வைத்து தேய்த்தாள்.

அவளை அப்படியே இறுகக் கட்டிக் கொண்டான்.

அவனின் தாபமும், வேகமும் அதிகமாக இருந்தன. அவளும் சளைக்கவில்லை. அவனுக்கு ஈடு கொடுத் தாள். இத்தனை வருட காத்திருப்பு வீண் போகவில்லை.

இருவரும் களைத்து ஓய்ந்தனர்.

''கார்த்திக்...''

''ம்... ம்...'' என்றான் முணகலாக.

''நாம் இங்கு இருப்பது முறையா...?''

''இல்லை தான். நான் மாமாவிடம் சொன்னேன். அவர் கேட்கவில்லை. இங்கு தான் நீங்க இருக்கணும் என்று சொல்லிவிட்டார். என் பெண் மாதவி இறக்க வில்லை. நிவாதி தான் என் மூத்த பெண். வீட்டை விட்டு போகக்கூடாது என்று சொல்லிவிட்டார்.''

''மாலதியும் எங்கும் போக வேண்டாம். இங்கேயே இருங்கள்'' என்கிறாள்.

''நீ என்னடா... சொல்கிறாய். உன் விருப்பம் என்ன. தனியாக இருந்தால் எந்நேரமும் ஜாலியாக இருக்க லாம்... அப்படித்தானே.... ஆனால் இந்த மாடிக்கு யாரும் வர மாட்டார்கள். நம்மைத் தவிர..''என்றான்.

''உங்கள் விருப்பம் என்னவோ... அதான் என் விருப்பமும்.''

''எ..ன்.. வி..ரு..ப்..ப..ம்.... இதோ.. இதுதான்'' என்று மீண்டும் அவளை புரட்டி தன் மீது போட்டான்.

அவள் கிண்கிணியாக சிரித்தாள். அந்த இளநெஞ்சங் களின் காதல் வென்றது.

*